بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ    نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ    وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

**சிறப்பிதழ் : இறை இருப்பு**

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்



வார இதழ் - காதியான்

Weekly
**BADAR** Qadian
TAMIL


தொகுதி
5
வருடாந்திர
சந்தா
ரூபாய் 500/–

இதழ்
52–53
ஆசிரியர்
முஸ்ஸம்மில்
அஹ்மது
துணை
ஆசிரியர்
அப்துர்
ரஹ்மான்
தாஹிர்

**08–15 ஜமாதில் அவ்வல் 1442 – ஹிஜ்ரி கமரி 24–31 ஃபதஹ் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி 24–31 டிசம்பர் 2020**    Postal Reg.No. GDP-39/2020-2022

நீர் (அவர்களிடம்) கூறுவீராக: நீங்கள் அவனை அல்லாஹ் என்றோ ரஹ்மான் என்றோ அழையுங்கள்; எப்பெயர் கொண்டு அவனை அழைத்தாலும், அவனுக்கோ மிகச் சிறந்த பண்புப் பெயர்கள் உள்ளன. (17:111)






2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9 ஆம் தேதி நடைபெற்ற இங்கிலாந்து ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில்
ஸய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்ய...) அவர்கள் மேடையில் வீற்றிருக்கின்ற, துஆ செய்கின்ற காட்சி



2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9 ஆம் தேதி நடைபெற்ற இங்கிலாந்து ஆண்டு மாநாட்டின்
சந்தர்ப்பத்தில் ஸய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்ய...) அவர்கள் சொற்பொழிவாற்றியவாறு



2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் தேதி நடைபெற்ற இங்கிலாந்து
ஜாமிஆ அஹ்மதிய்யா மாணவர்களுடன் நேரலை வகுப்பில்



2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி நடைபெற்ற
இந்தோனேஷியா ஜாமிஆ அஹ்மதிய்யா மாணவர்களுடன்
நேரலை வகுப்பில்



2020–டிசம்பர் 15 அன்று நடைபெற்ற ஆஸ்திரேலியா நாட்டின் தேசிய
மஜ்லிஸேஆமிலா உறுப்பினர்கள் மற்றும் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின்
காயிதுமார்களுடன் ஹுஸூர் அவர்களின் சந்திப்பு நேரலையில்



2020ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25ஆம் தேதி நடைபெற்ற மொரிஷியஸ்
நாட்டின் முரப்பிமார்கள் மற்றும் தேசிய மற்றும் கிளை அமைப்புகளின்
மஜ்லிஸே ஆமிலா ஹுஸூர் அவர்களுடன் சந்திப்பு நேரலையில்

بسم الله الرحمن الرحيم
نحمده و نصلي على رسوله الكريم
وعلى عبده المسيح الموعود
خدا کے فضل اور رحم کے ساتھ
ھو الناصر

اسلام آباد ٹلفورڈ
MA 30-11-2020

இன்று உலகம் பொருள் வணங்கியாகி விட்டது. மார்க்கத்திலிருந்து தொலைவில் சென்று விட்டது. மேலும் தன்னை படைத்தவனை மறந்து விட்டது. இந்நிலைகளில், இறை இருப்பிற்கான சான்றுகளை கற்றறிந்து அல்லாஹ்வுடனான தொடர்பில் முன்னேற்றம் கண்டு முழு உலகிற்கும் வாழ்வளிக்கும் உண்மையை அடையாளம் காட்டிக் கொடுப்பது ஒவ்வோர் அஹ்மதியின் வேலை ஆகும். அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் அதற்கான நற்பேற்றை வழங்குவானாக. ஆமீன்.

**பதர் பத்திரிக்கை வாசகர்களுக்கு ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்(அய்ய..) அவர்களின் அன்பு நிறைந்த தூதுச் செய்தி**

அன்பிற்குரிய பதர் பத்திரிகை வாசகர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வ பரக்காதுஹூ

இறை இருப்பு என்ற தலைப்பில் சிறப்பிதழ் ஒன்றை வெளியிடும் நற்பேற்றை பதர் பத்திரிகை பெற்றுக் கொண்டிருப்பதை அறிந்து எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் தூதுச் செய்தி அனுப்பும்படி என்னிடம் விண்ணபிக்கப்பட்டுள்ளது. எனது தூதுச் செய்தி என்னவென்றால், நாம் மிகவும் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம். அல்லாஹ் நமக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்களை ஒப்புக் கொள்ளும் நற்பேறை வழங்கியுள்ளான். அன்னார் தனது புத்தகங்களில் அல்லாஹ்வின் புறமிருந்து தனது உண்மைக்கு ஆதாரமாக வெளிப்பட்ட அடையாளங்கள் மற்றும் சான்றுகளுடன் இறை இருப்பை நிரூபித்துள்ளார்கள்.

அன்னார் கிஷ்தி நூஹ் என்ற தமது நூலில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

நமது சுவர்க்கம் நமது இறைவன் ஆவான். நமது உயர்ந்த இன்பங்கள் நமது இறைவனிடம் உள்ளன. ஏனெனில் நாம் அவனைக் கண்டோம்....இழப்பிற்குரியோரே! இந்த நீரூற்றின் பக்கம் ஓடுங்கள். அது உங்களைக் காப்பாற்றும். நான் என்ன செய்வேன்? இந்த நற்செய்தியை மக்களின் மனங்களில் எவ்வாறு பதிய வைப்பேன்? இது உங்கள் இறைவன் ஆவான் என மக்கள் கேட்கும் பொருட்டு எந்த முரசு கொண்டு நான் வீதிகளில் பறைசாற்றுவேன்? கேட்பதற்கு மக்களின் காதுகள் திறப்பதற்கு நான் எந்த மருந்தைக் கொண்டு சிகிச்சை செய்வேன்? (ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 22,22).

நமது ஜமாஅத்தின் புத்தகங்களில் இறை இருப்பு பற்றி போதுமான உள்ளடக்கம் கிடைக்கின்றது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் புத்தகம் “இறை இருப்பு” என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது. அதேபோன்று இறை இருப்பிற்கான பத்து சான்றுகள் என்ற அன்னாரின் மற்றொரு புத்தகமும் உள்ளது. அதிலிருந்து சுருக்கமாக சில கருத்துக்களின் பொருள் இங்கு எடுத்துரைக்கப்படுகிறது. அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதன் பல்வேறு பொருட்களை பல்வேறு புலன்களைக் கொண்டு கண்டறிகின்றான். சில பொருட்களை கண்டும், சிலவற்றை தொட்டும், சிலவற்றை நுகர்ந்தும், சிலவற்றை கேட்டும், சிலவற்றை சுவைத்தும் அறிகின்றான். மேலும் ஏராளமான பொருட்கள் எப்படிப்பட்டவையாக உள்ளன என்றால் நேரடியாக இந்த ஐந்து விஷயங்களுடனும் தொடர்பு இருப்பதில்லை. மாறாக, அவற்றை கண்டறிவதற்கான வழிமுறை வேறொன்றாக இருக்கின்றது. உதாரணமாக, அறிவு அல்லது நினைவாற்றல், மூளை போன்ற விஷயங்கள் உள்ளன. இதனை உலகில் எந்த மனிதனும் மறுப்பதில்லை. ஆனால் எவராவது அறிவை கண்டிருக்கின்றாரா? அல்லது எவரேனும் அதனை கேட்டோ அல்லது நுகர்ந்தோ அல்லது தொட்டோ உள்ளாரா? அல்லாஹ் நுட்பமானவன். அவன் தென்படுகின்றான். ஆனால் எந்தக் கண்கள் அவனைக் காண்பதற்கு தகுதியுள்ளவையாக உள்ளனவோ அவைதான் அவனைக் காண இயலும். ஆயினும் ஒருவர் அவனைக் காண்பதற்கு விருப்பமுடையவராக இருந்தால் இறைவன் தனது வல்லமைகள் மூலமும், ஆற்றல்கள் மூலமும் அவன் உலகிற்கு முன்னால் மறைவாக இருந்தபோதிலும் மிக அதிகமாக வெளிப்பட்டுள்ளான்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:

لَا تُدْرِكُهُ الْأَبْصَارُ وَهُوَ يُدْرِكُ الْأَبْصَارَ وَهُوَ اللَّطِيفُ الْخَبِيرُ

அதாவது இறைவன் எப்படிப்பட்டவன் என்றால் பார்வைகளால் அவனை அடையாது முடியாது. ஆனால் அவன் பார்வைகளை அடைகின்றான். அவன் நுட்பமானவனும் அனைத்தையும் அறிந்தவனுமாவான். (6:104) இறை இருப்பிற்கான மற்றோர் ஆதாரம் இந்த நம்பிக்கையில் உலக மதங்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாகும். நாம் பார்க்கின்றோம். உலகில் நன்மையையும், நல்லொழுக்கத்தையும் பரப்புகின்றவர்கள் அனைவரும், தமது செயல்களால் உலகத்தில் உண்மையின் தாக்கத்தை பதித்தவர்கள் அனைவரும் ஓர் இறைவன் இருக்கின்றான் என்பதற்கு சாட்சியம் பகர்ந்துள்ளனர். அந்த ஓர் இறைவனை பல்வேறு மொழிகளில் அல்லாஹ் என்றும், **God** என்றும், பரமேஸ்வர் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்தியாவின் நல்லடியார்களாக ஸ்ரீ ராம் சந்தர் ஜீ, ஸ்ரீ கிருஷ்ணர் உள்ளனர். ஈரானின் நல்லடியாரான ஜொராஷ்டரும், எகிப்தின் நல்லடியாரான மூஸாவும், நாசரேத்தின் நல்லடியாரான மஸீஹும் உள்ளனர். மேலும் பஞ்சாபின் ஒரு நல்லடியாரான பாபா நானக் உள்ளார்கள். பின்னர் அனைத்து நல்லடியார்களின் தலைவரும், அரபு நாட்டின் ஒளியுமான ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மட்டுமல்லாது ஆயிரக்கணக்கான இறையச்சமுடையவர்கள் அவ்வப்போது உலகில் தோன்றியுள்ளார்கள். ஓர் இறைவன் இருக்கின்றான் என்று அவர்கள் ஒரே குரலில் அழைத்திருக்கின்றார்கள். இன்னும் சொல்வதென்றால், நாங்கள் அவனை சந்தித்தோம்; அவனுடன் உரையாடினோம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். அதேபோன்று மனித இயல்பும் இறை இருப்பிற்கான சான்றுகளில் ஒரு

சான்றாகும் என்பது திருக்குர்ஆனிலிருந்து தெரிய வருகின்றது. ஏனென்றால் சில பாவங்களை மனித இயல்புகள் ஒருபோதும் விரும்புவதில்லை. தாய், சகோதரி மற்றும் மகளுடன் விபச்சாரம், அசுத்தத்துடனான தொடர்பு, பொய் ஆகியவற்றிலிருந்து ஒரு நாத்திகர் கூட விலகி நிற்கின்றார். அது எப்படி? பாவங்களிலிருந்து விலகி இருப்பதும் அல்லது அவற்றை வெளிப்படுத்துவதிலிருந்து விலகி இருப்பதும் மனிதனின் உள்ளத்தில் சூழ்ந்துள்ள ஒரு அரசருக்கு பதிலளிக்க வேண்டுமே என்ற அச்சத்திற்கு ஒரு சான்றாகும். அவன் அவனது அரசாட்சியை நிராகரிக்கக் கூடிய மனிதனாக இருந்தாலும் சரியே. (அவனிடமும் இந்த அச்சம் உள்ளது). இறை இருப்பிற்கான மற்றொரு சான்று இதுவாகும். அதாவது ஒவ்வொரு வினையையும் செய்யக்கூடிய ஒருவர் இருப்பார். ஒரு காட்டரபியிடம், இறைவன் இருக்கின்றான் என்பதற்கு உம்மிடம் என்ன சான்று உள்ளது? என ஒருவர் கேட்டார். அதற்கு, காட்டில் ஓர் ஒட்டகத்தின் சாணம் கிடக்கின்றது என்றால் அதைப் பார்த்து இங்கு ஓர் ஒட்டகம் கடந்து சென்றுள்ளது என்று என்னால் கூறிவிட முடியும். அவ்வாறிருக்க இவ்வளவு பெரிய படைப்பைக் கண்டு இதைப் படைத்தவன் ஒருவன் இருக்கின்றான் என்று அறிந்து கொள்ள முடியாதா? என்று கூறினார். உண்மையிலேயே இந்த பதில் சரியானதும், மனித இயல்புக்கு ஏற்புடைய பதிலும் ஆகும். இந்த பிரபஞ்சம் தற்செயலாக தோன்றி விட்டதாக சில மக்கள் கூறுகின்றனர். அதற்கு அல்லாஹ் சூரத்துல் முல்க், 2 முதல் 5 வரை உள்ள வசனங்களில் பதிலளித்துள்ளான். தற்செயலாக உருவாகின்ற பொருட்களில் ஒருபோதும் ஒரு தொடரும் ஒரு ஏற்பாடும் இருப்பதில்லை. மாறாக அது பொருத்தமற்றதாக இருக்கும். ஆயிரக்கணக்கான ஆராய்ச்சியாளர்கள் அதனை சீர் செய்வதற்கு இரவும் பகலும் ஈடுபடுகின்றனர். ஆயினும் அவர்களிடம் எப்படிப்பட்ட தவறுகள் வெளிப்பட்டு விடுகின்றன என்றால் அதனால் ஆட்சிக்கு அபாயகரமான பாதிப்புகள் ஏற்பட்டு விடுகின்றன. இன்னும் கூறப்போனால், முற்றிலும் அழிந்து விடுகின்றன. ஆனால் இந்த உலகத்தின் இயக்கம் தவறிழைப்பதில்லை. இந்த பிரபஞ்சத்தை படைத்த இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்பதே உண்மையாகும். அவன் பெரும் பரந்துபட்ட உலகத்தின் அரசனும் மேன்மைக்கு உரியவனும் ஆவான். அவன் இல்லையென்றால் பின்னர் இந்த அனைத்து ஏற்பாடுகளையும் (நம்மால்) காண முடியாது. திருக்குர்ஆனிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், இறைவனை நிராகரிக்கக் கூடியவர்கள்; எப்போதும் இழிவடைகின்றார்கள். இறைவனை நிராகரிக்கக் கூடியவர்கள் எவ்வாறு இழிவடைகின்றார்கள் என்பதற்கு ஃபிர்அவ்னின் சம்பவம் ஒரு தெளிவான சான்றாகும். இறை இருப்பை ஏற்றுக் கொள்ள வைப்பவர்கள் எல்லா நாட்டிலும் தோன்றியுள்ளனர். அவர்களுக்கு ஏற்படுகின்ற எதிர்ப்புகள் வேறு எவருக்கும் ஏற்படுவதில்லை. ஆனால் உலகத்தால் அவருக்கு எதிராக என்ன செய்ய முடிந்தது?
அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

وَمَنْ يَّتَوَلَّ اللّٰهَ وَرَسُوْلَهٗ وَالَّذِيْنَ اٰمَنُوْا فَاِنَّ حِزْبَ اللّٰهِ هُمُ الْغٰلِبُوْنَ (المائدہ:57)

திருக்குர்ஆனிலிருந்து தெரிய வருகின்றது. இறைவன் துஆக்களை ஒப்புக் கொள்கின்றான். துஆ ஒப்புக் கொள்ளப்படுவதே அடையாளமாக உள்ளது. அந்த வகையில் நமது அன்பிற்குரிய தலைவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் இறை இருப்பிற்கான சான்றாக இதனை முன் வைத்துள்ளார்கள். அதாவது அபாயகரமான நோய்களுக்கு ஆளான சில நோயாளிகளை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். மேலும் பங்கிட்டுக் கொள்ளுங்கள். ஒரு கூட்டத்திற்கு மருத்துவர்கள் சிகிச்சை செய்யட்டும். மற்றொரு பக்கம் எனது பங்கில் ஒப்படைக்கப்பட்ட நபர்களுக்காக நான் துஆ செய்கிறேன். பிறகு யாருடைய நோயாளி நலம் பெறுகின்றார் என்பதை பாருங்கள் என்று அன்னார் கூறினார்கள். இந்த தேர்விற்கான வழிமுறையில் இப்போது ஐயம் ஏதும் உள்ளதா? (வெறி) நாய் கடித்து பைத்தியத்திற்குள்ளான ஒரு நோயாளிக்கு சிகிச்சை செய்வதை பெரும் பெரும் மருத்துவர்கள் உறுதியாக மறுத்து விட்டனர். மேலும் அவருக்கு எந்த சிகிச்சையும் இல்லை என்றும் எழுதி விட்டனர். அவருக்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் துஆ செய்தார்கள். மேலும் அவர் நலம் பெற்று விட்டார். ஆனால் உள்ளபடியே வெறி நாய் கடித்து பைத்தியம் பிடித்த நபர் ஒருபோதும் நலம் பெறுவதில்லை. எனவே ஒவ்வொரு காலத்திலும் பிரார்த்தனையை ஒப்புக் கொள்ளக்கூடிய ஓர் இருப்பு உள்ளது என்பதற்கு துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவது ஒரு சான்றாகும். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: எவர்கள் எம்மை அடைய முயற்சி செய்கின்றார்களோ நாம் அவர்களுக்கு எமது வழிகளை காட்டிக் கொடுக்கின்றோம். இவ்வாறு உண்மையான உள்ளத்துடன் ஒரு நபர் துஆ செய்தால் மேலும் குறைந்தபட்சம் நாற்பது நாட்கள் அதன்படி செயல்பட்டால் அவர் எந்த மதத்தில் பிறந்திருந்தாலும் அவர் எந்த நாட்டின் குடிமகனாக இருந்தாலும் ரப்புல் ஆலமீன் நிச்சயமாக அவருக்கு வழிகாட்டி விடுவான். அவரது உள்ளம் சந்தேகங்கள் என்ற அசுத்தத்திலிருந்து முற்றிலும் வெளியேறி விடும் வகையில் இறைவன் அவர் மீது தனது இருப்பை நிரூபணம் செய்து விடுவான். இன்று உலகம் பொருள் வணங்கியாகி விட்டது. மார்க்கத்திலிருந்து தொலைவில் சென்று விட்டது. மேலும் தன்னை படைத்தவனை மறந்து விட்டது. இந்நிலைகளில், இறை இருப்பிற்கான சான்றுகளை கற்றறிந்து அல்லாஹ்வுடனான தொடர்பில் முன்னேற்றம் கண்டு முழு உலகிற்கும் வாழ்வளிக்கும் உண்மையை அடையாளம் காட்டிக் கொடுப்பது ஒவ்வோர் அஹ்மதியின் வேலை ஆகும். அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் அதற்கான நற்பேற்றை வழங்குவானாக. ஆமீன்.


வஸ்ஸலாம்
எளியவன்



ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்



வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமாகிய
ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது(அலை) அவர்களின் நிழற்படம் (1835–1908)




ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்(அய்ய...) அவர்கள்

## பொருளடக்கம்


| எண் | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 1 |
| 2. | இறை இருப்பிற்கான இறைவசனங்கள் | 3 |
| 3. | இறை இருப்பிற்கான நபிமொழிகள் | 4 |
| 4. | இறை இருப்பு பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வழிகாட்டல்கள் | 6 |
| 5. | இறை இருப்பிற்கான 10 சான்றுகள் | 8 |
| 6. | நமது இறைவன் | 16 |
| 7. | குர்ஆன், ஹதீஸ், மல்ஃபூஸாத்தின் ஒளியில் இறை பண்புகள் | 22 |
| 8. | இறை இருப்பின் மீது மகத்தான அன்பு கொண்டவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) | 25 |
| 9. | துஆ ஒப்புக் கொள்ளப்படுவதன் ஒளியில் இறை இருப்பு | 27 |
| 10. | இறை இருப்பு பற்றி அறிவுப்பூர்வமான சான்றுகள் | 29 |


لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

# எம் பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வுடன் இருந்த ஒப்பற்ற அன்பு மற்றும் நேசம்

முஸ்லிமாக இருப்பதற்கு எல்லாவற்றிற்கும் முதலாக எந்த விஷயத்தை ஒப்புக் கொள்ள வேண்டுமோ அது لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ 'வணக்கத்திற்குரியன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை' என்பதாகும். அந்த ஒரேயோர் இருப்புதான் வணக்கத்திற்கு தகுதி வாய்ந்ததாகும். மனிதனுக்கு சிரம் பணியக் கூடிய தகுதி அந்த ஒரேயோர் இருப்புக்கு மட்டும்தான் இருக்கின்றது. அவனையே நாம் வணங்க வேண்டும். மேலும் அவனிடமே நம்முடைய தேவைகளைக் கேட்க வேண்டும். ஏனென்றால் அல்லாஹ்தான் நம்முடைய படைப்பாளனும் எஜமானனும் ஆவான். அல்லாஹ்வே நம்முடைய 'ரப்' படைத்துக் காக்கின்றவனாவான். அவனே 'ரஹ்மான்' அளவற்ற அருளாளனும், 'ரஹீம்' நிகரற்ற அன்புடையோனும் ஆவான். அதாவது கேட்கும்போது கொடுக்கின்றவனும் கேட்காமலேயே கருணை செய்பவனுமாவான். எல்லாம் வல்ல அல்லாஹ் தன்னுடைய ஏகத்துவம் மற்றும் தனித்துவத்தை எந்த அளவிற்கு விரும்புகின்றான் என்றால் அவனுக்கு இணை வைப்பதை மிகப் பெரிய கொடுமை என்று கூறியுள்ளான். வல்லமைமிக்க அல்லாஹ் அனைத்து விதமான பாவங்களையும் மன்னித்து விடுவான். ஆனால் இணை வைத்தல் என்ற பாவத்தை அவன் ஒருபோதும் மன்னிக்க மாட்டான் எனக் கூறுகின்றான். இது தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

إِنَّ اللّٰهَ لَا يَغْفِرُ أَنْ يُّشْرَكَ بِهٖ وَيَغْفِرُ مَا دُوْنَ ذٰلِكَ لِمَنْ يَّشَآءُ அல்லாஹ் தனக்கு இணையாக எதையும் ஆக்கிக் கொள்வதை ஒருபோதும் மன்னிக்கமாட்டான். இதை விடக் குறைந்ததை, தான் நாடியவருக்கு மன்னிப்பான். அல்லாஹ்வுக்கு எதையாவது இணையாக ஆக்குகின்றவன் (நேரான பாதையிலிருந்து) வெகுதூரம் சென்று விட்டான் (எனப் புரிந்து கொள்க). *(4:117)*

மற்றோர் இடத்தில் அல்லாஹ் இணை வைத்தலை மிகவும் வன்மையாக இவ்வாறான வார்த்தைகளில் கண்டித்துள்ளான்.

وَقَالُوا اتَّخَذَ الرَّحْمٰنُ وَلَدًا ۝ لَقَدْ جِئْتُمْ شَيْئًا إِدًّا ۝ تَكَادُ السَّمٰوٰتُ يَتَفَطَّرْنَ
مِنْهُ وَتَنْشَقُّ الْأَرْضُ وَتَخِرُّ الْجِبَالُ هَدًّا ۝ أَنْ دَعَوْا لِلرَّحْمٰنِ وَلَدًا ۝

அளவற்ற அருளாள(னான இறைவ)ன் தனக்கு ஒரு மகனை உருவாக்கிக் கொண்டான் என்று அவர்கள் கூறுகின்றனர். (நீர் கூறுவீராக): நிச்சயமாக நீங்கள் கொடூரமான (செய்தி) ஒன்றைக் கூறுகிறீர்கள். அதனால் வானங்கள் வெடித்து விடவும், பூமி பிளந்து (பல) துண்டுகளாகி விடவும், மலைகள் தூள் தூளாகி வீழ்ந்தும் விடலாம். ஏனெனில் அவர்கள் அளவற்ற அருளாள(னான இறைவ)னுக்கு ஒரு மகனை ஏற்படுத்துகின்றனர். *(19:89-92)*

இது மட்டுமல்ல. எவர் இணைவைத்த நிலையில் மரணித்து விடுவாரோ அவரின் பாவமன்னிப்பிற்காக செய்யப்படும் துஆவும் இறைவனுடைய சந்நிதியில் ஏற்றுக் கொள்ளப்படாது. எந்த இறைவனுக்கு அவன் வாழ்நாள் முழுவதும் இணை கற்பித்துக் கொண்டிருந்தானோ அந்த இறைவனிடமே அவனுடைய பாவமன்னிப்பிற்காக எவ்வாறு துஆ செய்ய முடியும் என்பதே இதனுடைய ஞானமாகும்.

கீழ்வரும் வரிகளில் நாம் நம்முடைய தலைவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் தன்னுடைய எஜமானனிடம் கொண்ட ஒப்பற்ற அன்பு மற்றும் நேசத்தையும், ஏகத்துவத்தை எட்ட வைப்பதிலும், அதைப் பரப்புவதிலும் ஒப்பற்ற தியாகம் மற்றும் முயற்சிகளின் ஒரு சிறிய ஒளிர்வை எடுத்துரைப்பதற்காக முயற்சி செய்கின்றோம்.

அரபு நாட்டில் இணை வைத்தலின் சூழல் நிறைந்து காணப்பட்டது. ஏகத்துவத்தின் அடையாளமாக மற்றும் இறைவனின் முதல் இல்லமாகத் திகழ்ந்த இறை இல்லமான கஅபாவிலேயே 360 சிலைகள் நடப்பட்டிருந்தன. அப்படிப்பட்ட சூழலில் இணை வைப்பத்திலிருந்து விலகி இருப்பது சாத்தியமற்றதாகும். ஆனால் எல்லாம் வல்ல அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எந்நேரமும் இணைவைத்தல் என்கின்ற அசுத்தத்தில் இருந்து பாதுகாத்து வந்தான். ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது இயல்பிலேயே எல்லாம் வல்ல அல்லாஹ் தன்னுடைய ஏகத்துவத்தின் பக்கம் ஈர்க்கக் கூடிய ஈர்ப்பு சக்தியை வைத்துள்ளான். இந்த ஈர்ப்பு சக்தியானது ஈருலகிற்கும் தலைவரும் எஜமானருமான நம்முடைய எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இயல்பிலும் எந்த அளவிற்கு இருந்தது என்றால் அன்னாருக்கு இருந்த இறை தொடர்பானது அன்னாரை மெல்ல மெல்ல ஹிரா மலைக் குன்றின் ஒரு குகைக்கு அழைத்துச் சென்றது. அங்கு அன்னார் வீட்டிற்குச் செல்லாமலேயே பல நாட்கள் தொடர்ந்து இறை வணக்கத்தில் மூழ்கியிருந்தார்கள். இதனையே சுட்டிக் காட்டியவாறு அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: وَوَجَدَكَ ضَآلًّا فَهَدٰى அவன் உம்மை (உம் சமுதாயத்திடம் கொண்ட அன்பினால் தம்மையே) இழந்தவராகக் கண்டான். எனவே அவன் (உமக்கு அவர்களைத் திருத்தும்) வழியைக் காட்டினான். *(93:8)*

நபித்துவ பதவிக்குப் பிறகு ஏகத்துவத்தை எட்ட வைப்பதற்காகவும் அதை பரப்புவதற்காகவும் அன்னார் மேற்கொண்ட துன்பங்கள் மற்றும் அன்னார் சகித்துக் கொண்ட கொடுமைகளின் சம்பவமானது மிகப் பெரியதாகும். மக்காவாசிகள் அன்னார் மீது மண்ணை வாரி இறைத்தார்கள். அன்னாரின் வழியில் முள்ளைப் போட்டு வைத்திருந்தார்கள். அன்னார் தொழுகையில் ஸஜ்தாவில் இருக்கும்போது அன்னாரின் மீது ஒட்டகத்தின் குடலை வைத்து விடுவார்கள். தீய வார்த்தைகளால் வதைப்பது ஒரு சாதாரண விஷயமாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவர்களுடைய நோக்கத்தில் வெற்றி பெற விடாது. அனைத்து விதமான கொடுமைகளையும் இழைத்தார்கள். மேலும் அனைத்து விதமான தந்திரத்தையும் கையாண்டதுடன் இறுதியில் கொலை செய்வதற்கான வலுவான திட்டத்தைத் தீட்டினார்கள். தாயிஃப் நகரத்திற்கு அன்னார் சென்றபோது அங்குள்ள புத்தி பேதலித்த இளைஞர்கள் அன்னாரைக் கடுமையாக காயப்படுத்தினார்கள். தாயிஃபின் மிகப்பெரிய தலைவர் அப்துல் யாலைலிற்கு தப்லீக் செய்தபோது அவன் அன்னாரைக் கேலி கிண்டல் செய்தது மட்டுமல்லாமல் அந்த நகரத்தின் போக்கிரி இளைஞர்களை அன்னாரைப் பின் தொடரச் செய்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நகரத்தை விட்டு வெளியேறியதும் அந்தப் போக்கிரிகள் கூச்சலிட்டவாறு அன்னாரைத் தூக்கிக் கொண்டே சென்றனர். மேலும் அன்னார் மீது கற்களை எடுத்து வீசினர். அதனால் அன்னாரின் முழு உடலும் இரத்தத்தால் நிறைந்து காணப்பட்டது. இவ்வாறு மூன்று மைல் தூரம் வரை அன்னாரை ஏசிப் பேசியும் அன்னார் மீது கற்களை எரிந்து கொண்டும் இருந்தனர். *(ஹஸ்ரத் பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 204)*

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இப்பயணத்தில் ஒப்பற்ற தியாகத்தையும் தங்களின் கொள்கையில் உறுதியாக

நிலைத்து நிற்கும் முன்மாதிரியையும் காட்டியுள்ளார்கள் என இஸ்லாத்தின் பகைவர்கள் கூட அவர்களின் தாயிஃப் பயணம் குறித்து ஒப்புக் கொள்கின்றனர்.

ஸர் வில்லியம் மூர் முஹம்மது எனும் தமது நூலில் "முஹம்மது அவர்களின் தாயிஃப் பயணத்தில் மிகவும் உயர்வானதும் வீரம் நிறைந்ததுமான ஒரு தன்மை காணப்படுகிறது. சமுதாயத்தினர் அவரை இழிவாகப் பார்த்தனர். அவரை விரட்டி அடித்தனர். இவ்வாறு தனி மனிதராக அவர் இறைவனின் பெயரால் வீரத்துடன் நினிவேயின் யோனா தீர்க்கதரிசி (யூனுஸ் நபி) போன்று சிலைகளை வணங்கும் ஒரு நகரத்தை பாவமன்னிப்பின் பக்கமும் இறை தூதின் பக்கமும் அழைப்பதற்காக சென்றார். இந்நிகழ்ச்சியானது அவர் தம்மை முழுக்க முழுக்க இறைவனால் அனுப்பப்பட்டவர் என்று கருதியிருந்தார் என்ற எண்ணத்தின் மீது வலுவான ஒளியை பொழியக் கூடியதாக இருந்தது" என்று வரைந்துள்ளார். (முஹம்மது (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை பக்கம் 61)

மற்றொரு சம்பவம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏகத்துவத்திற்காக தன் உயிரையே அர்ப்பணிப்பதற்கு ஆயத்தமாகி விட்டார்கள் என்பதை விளக்குகிறது. ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

"இணைவைப்பவர்கள் தொடர்பாக அசுத்தமானவர்கள் தூய்மையற்றவர்கள், (ஷர்ருல் பரிய்யஹ்) படைப்புகளிலேயே மிக மோசமான படைப்புகள், (ஸுஃபஹாவு) மூடர்கள், (ஸுர்ரிய்யத்துஷ் ஷய்த்தான்) ஷய்த்தானின் சந்ததிகள் மற்றும் அவர்களின் தெய்வங்கள் (வகூதுந் நாரி) நெருப்பின் எரிபொருள், (ஹஸபுஜஹன்னம்) நரகத்தின் விறகுகள் என்ற இந்த வசனங்கள் இறங்கிய போது அபூதாலிப் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அழைத்து என்னுடைய சகோதரரின் மகனே! உன்னுடைய இந்தக் கடும் சொல்லினால் சமுதாயம் மிகவும் கொதித்தெழுந்து உள்ளது. அதன் காரணமாக உன்னுடன் சேர்த்து அவர்கள் என்னையும் நாசமாக்கி விடலாம். நீ அவர்களில் நுண்ணறிவு உடையவர்களை மூடர்கள் என்றும், அவர்களின் பெரியவர்களை படைப்புகளிலேயே மிக மோசமான படைப்புகள் என்றும், அவர்களின் மிக கண்ணியத்திற்குரிய தெய்வங்களுக்கு நரகத்தின் உறவுகள் மற்றும் நெருப்பின் எரிபொருள் என்று பெயர் வைத்துள்ளாய். மேலும் பொதுவாக அவர்கள் அனைவரையும் தூய்மையற்றவர்கள் அசுத்தமானவர்கள் மற்றும் ஷய்த்தானின் சந்ததிகள் என்று கூறியுள்ளாய். நான் நீ நேர்வழி பெறும் பொருட்டு இதைக் கூறுகின்றேன். நீ உன்னுடைய நாவைக் கட்டுப்படுத்திக் கொள். மேலும் அவர்களுக்கு எதிராக இவ்வாறான கடும் சொல்லைப் பயன்படுத்துவதிலிருந்து விலகிக் கொள். அவ்வாறு செய்யவில்லை என்றால் என்னால் சமுதாயத்தின் எதிர்ப்பை எதிர்கொள்ள முடியாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதற்கு பதிலளித்தவாறு இவ்வாறு கூறினார்கள்: என்னுடைய சிறிய தந்தையே! இது கடும் சொல் அல்ல. மாறாக, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப உள்ளிலிருந்து வெளிப்படுகின்ற உண்மையின் குரல் ஆகும். மேலும் இந்தப் பணிக்காகவே தான் அனுப்பப்பட்டுள்ளேன். இதனால் நான் மரணத்தைச் சந்திக்க நேரிட்டாலும் மகிழ்ச்சியுடன் அந்த மரணத்தை ஏற்றுக் கொள்வேன். என்னுடைய வாழ்வை இந்த நோக்கத்திற்காகவே நான் அர்ப்பணித்துள்ளேன். நான் மரணத்தின் அச்சத்தினால் உண்மையை எடுத்துரைப்பதில் இருந்து ஒருபோதும் விலகமாட்டேன். எனது சிறிய தந்தையே! உங்களுக்கு தங்களுடைய பலவீனம் மற்றும் இவர்கள் வேதனை அளிப்பார்கள் என்ற எண்ணம் இருக்கும் என்றால் நீங்கள் எனக்கு அளிக்கின்ற பாதுகாப்பில் இருந்து விலகி விடுங்கள். இறைவன் மீது ஆணையாக! எனக்கு உங்களின் எந்தத் தேவையும் இல்லை. நான் இறைக் கட்டளைகளை மக்களுக்கு எட்ட வைப்பதிலிருந்து ஒருபோதும் விலக மாட்டேன். என் உயிரை விட இறைக் கட்டளைகள் எனக்கு மிகவும் விருப்பமானது. இறைவன் மீது ஆணையாக! நான் இந்த வழியில் மரணித்து விட்டாலும் மீண்டும் நான் உயிர் பெற்று இவ்வழியிலேயே மரணிப்பதையே நான் எப்போதும் விரும்புகின்றேன். அவனுடைய வழியில் துன்பத்தை மேற்கொள்வது என்பது அச்சத்திற்குரிய இடம் இல்லை. மாறாக அதில் எண்ணற்ற ரசணையை நான் உணர்கிறேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறிக் கொண்டிருக்கும்போது அன்னாரின் முகத்தில் உண்மை மற்றும் ஒளியினால் நிறைந்த பாவனை வெளிப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த உரையை முடித்தவுடன் உண்மையின் பிரகாசத்தைக் கண்ட அபூதாலிப் அவர்களின் கட்டுக்கடங்காத கண்ணீர் துளிகள் வெளியேறியதும் இவ்வாறு கூறினார்கள்: நான் உன்னுடைய இந்த உயர்வான நிலையை அறியாதவனாய் இருந்தேன். நீ ஒரு பொலிவுடனும் ஒரு மகத்துவத்துடனும் செயல்படுகின்றாய். நீ சென்று உன்னுடைய பணியை மேற்கொள். நான் உயிருடன் இருக்கும் வரையிலும் எனக்கு ஆற்றல் இருக்கின்ற வரையிலும் நான் உனக்கு உதவி செய்வேன். (இஸாலா அவ்ஹாம். ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 110)

எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னுடைய உம்மத்திற்கு தவ்ஹீதின் எப்படிப்பட்ட பாடத்தைக் கற்பித்தார்கள் என்றால் பிறப்பிலிருந்து இறப்பு வரை வாழ்வின் மகத்துவம் வாய்ந்த அல்லாஹ்வை நினைவு கூறுவதிலிருந்து வெற்றிடமாக இருந்ததில்லை. என்னுடைய கண்களுக்கான குளிர்ச்சி தொழுகையில் உள்ளது என்ற இந்தக் கூற்று அல்லாஹ்வின் மீது அன்னார் எந்த அளவிற்கு நேசம் வைத்துள்ளார்கள் என்பதை கணிப்பது கடினமானதாக இருக்கின்றது. முழு இரவையும் தன்னுடைய இறைவனை நினைவு கூர்வதிலும் அன்பு மற்றும் நேசத்தை வெளிப்படுத்து வதிலும் கழித்து விடுகிறார்கள். அன்னாரின் இந்தக் கூற்று மிகவும் வியக்கத்தக்கதாக இருக்கின்றது.

ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் இவ்வாறு கூறினார்கள்: ஆயிஷாவே! என்னுடைய கண்கள் உறங்கி விடுகின்றன. ஆனால் என்னுடைய உள்ளம் உறங்குவதில்லை. தன்னுடைய உயிரை தன் அன்பரிடம் ஒப்படைத்தவாறு அன்னாரின் கடைசி அறிவுரையாக ஒரே இறைவனை வணங்க வேண்டும். யூதர்களைப் போன்று இணை வைக்கக் கூடாது. மேலும் என்னுடைய மண்ணறையை வணக்கஸ்தலமாக ஆக்கி விடக் கூடாது என்பதாகவே இருந்தது.

ஸய்யிதுனா ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் மீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எந்த அளவு அன்பு இருந்தது என்றால் ஒரு நீண்ட இடைவெளிக்குப் பிறகு மேகம் தென்பட்டால் அன்னார் தனது நாவால் மேகத்திலிருந்து பொழிகின்ற மழைத்துளிகளைப் பெற்றுக் கொண்டு பாருங்கள்! இது எனது இறைவனின் புத்தம்புது அருளாகும் என்று கூறுவார்கள். சபைகளில் அமரும்போது பாவமன்னிப்புக் கோரியவாறு இருப்பார்கள். மேலும் மற்ற நேரங்களிலும் அவர்கள் அதிகமாக பாவமன்னிப்புக் கோரி வந்தார்கள். இதன் காரணம் என்னவென்றால் அவர்களது சமுதாயமும், அவர்களுடன் தொடர்புடைய மக்களும் இறைவனுடைய கோபத்திலிருந்து விலகியிருக்க வேண்டும் என்றும் மேலும் இறைவனுடைய மன்னிப்பைப் பெறுவதற்குத் தகுதி உடையவர்களாக ஆக வேண்டும் என்பதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா நேரமும் நான் இறைவன் முன்னால் இருக்கின்றேன் என்ற நினைவிலேயே இருப்பார்கள். இறை நெருக்கத்தைப் பெற வேண்டும் என்பதில் அவர்களுக்கு எந்த அளவு ஆர்வம் இருந்தது என்றால் அவர்கள் எப்போதும் இறைவனிடம் இவ்வாறு துஆ செய்வார்கள்.

اَللّٰهُمَّ اجْعَلْ فِيْ قَلْبِيْ نُوْرًا وَّفِيْ بَصَرِيْ نُوْرًا وَّفِيْ سَمْعِيْ نُوْرًا وَّعَنْ يَّمِيْنِيْ نُوْرًا
وَّعَنْ يَسَارِيْ نُوْرًا وَّفَوْقِيْ نُوْرًا وَّتَحْتِيْ نُوْرًا وَّاَمَامِيْ نُوْرًا وَّخَلْفِيْ نُوْرًا وَّاجْعَلْ لِّيْ نُوْرًا

அதாவது என் இறைவா! எனது உள்ளத்திலும் உனது ஒளியை நிரப்புவாயாக. எனது கண்களிலும் உனது ஒளியை நிரப்புவாயாக. எனது காதுகளிலும் உனது ஒளியை நிரப்புவாயாக எனது வலப்பக்கத்திலும் உனது ஒளி இருக்க வேண்டும். எனது இடப்பக்கத்திலும் உனது ஒளி இருக்க வேண்டும். எனக்கு மேலும் உனது ஒளி இருக்க வேண்டும். எனக்கு கீழும் உனது ஒளி இருக்க வேண்டும். எனக்கு முன்னாலும் உனது ஒளி இருக்க வேண்டும். எனக்கு பின்னாலும் உனது ஒளி இருக்க வேண்டும். மேலும் என் இறைவா! என்னுடைய உடல் முழுவதும் ஒளிமயமாக ஆக்குவாயாக. (முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கை பக்கம் 354-355)

அன்னார் எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பற்றி எப்போது பேசினாலும் அவர்களது உணர்வில் உத்வேகம் ஏற்படும். அப்போது அவர்களது உடலுக்கு உள்ளேயும் வெளியேயும் முழுமையாக இறைவனது பண்பு அவர்களை ஆட்கொண்டு விட்டது போன்று தெரிய வரும்.

**- தமிழாக்கம்: மவ்லவி அபுல் ஹஸன் ஆபிது**

# இறை இருப்பிற்கான இறை வசனங்கள்

**அல்லாஹ் ஒருவன் ஆவான். அவனையன்றி வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. அவன் என்றென்றும் உயிருடனிருப்பவனும், தானாக நிலைத்திருப்பவனும் ஆவான்.**

### இறை இருப்பைப் பற்றி இறைவனின் வழிகாட்டல்

وَاِلٰهُكُمْ اِلٰهٌ وَّاحِدٌ ۚ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ الرَّحْمٰنُ الرَّحِيْمُ○

அல்லாஹ் ஒருவன் ஆவான். அவனைத் தவிர வேறு யாரும் இல்லை. (2:164)

### அல்லாஹ் வானம் மற்றும் பூமியின் இறைவன் ஆவான்

اَللّٰهُ نُوْرُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ

அல்லாஹ் வானம் மற்றும் பூமியின் இறைவன் ஆவான். (24:36)

### வாழ்வும் மரணமும் அல்லாஹ்வின் புறமிருந்தே ஆகும்

كَيْفَ تَكْفُرُوْنَ بِاللّٰهِ وَكُنْتُمْ اَمْوَاتًا فَاَحْيَاكُمْ ۚ ثُمَّ يُمِيْتُكُمْ ثُمَّ يُحْيِيْكُمْ ثُمَّ اِلَيْهِ تُرْجَعُوْنَ○

(மக்களே!) நீங்கள் எவ்வாறு அல்லாஹ்வை நிராகரிக்கின்றீர்கள்? நீங்கள் உயிரற்றவர்களாயிருந்தீர்கள். அவன் உங்களுக்கு உயிர் கொடுத்தான். பிறகு (ஒரு நாளில்) அவன் உங்களுக்கு மரணத்தைக் கொடுப்பான். பின்னர் உங்களை உயிர்ப்பிப்பான். இதன் பிறகு நீங்கள் அவனிடமே கொண்டு செல்லப்படுவீர்கள்.(2:29)

### அல்லாஹ்வே நிரந்தரமானவனாவான்

كُلُّ مَنْ عَلَيْهَا فَانٍ○ وَّيَبْقٰى وَجْهُ رَبِّكَ ذُو الْجَلٰلِ وَالْاِكْرَامِ○

(பூமியாகிய) இதன் மீது உள்ளவையெல்லாம் அழியக் கூடியவைவே; புகழுக்கும் கண்ணியத்திற்கும் உரிய உம் இறைவனின் கவனம் எவர் மீது இருக்கிறதோ அவரே எஞ்சியிருக்கிறார். (55:27–28)

### என்றென்றும் உயிருடனிருப்பவனும், தானாக நிலைத்திருப்பவனுமாவான்

اَللّٰهُ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ ۚ اَلْحَیُّ الْقَيُّوْمُ ۚ لَا تَاْخُذُهٗ سِنَةٌ وَّلَا نَوْمٌ ؕ لَهٗ مَا فِی
السَّمٰوٰتِ وَمَا فِی الْاَرْضِ ؕ مَنْ ذَا الَّذِیْ یَشْفَعُ عِنْدَهٗۤ اِلَّا بِاِذْنِهٖ ؕ یَعْلَمُ مَا
بَیْنَ اَیْدِیْهِمْ وَمَا خَلْفَهُمْ ۚ وَلَا یُحِیْطُوْنَ بِشَیْءٍ مِّنْ عِلْمِهٖۤ اِلَّا بِمَا شَآءَ ۚ
وَسِعَ كُرْسِیُّهُ السَّمٰوٰتِ وَالْاَرْضَ ۚ وَلَا یَـُٔوْدُهٗ حِفْظُهُمَا ۚ وَهُوَ الْعَلِیُّ الْعَظِیْمُ○

அல்லாஹ் – அவனைத் தவிர வணக்கத்திற்குரியவர் (வேறு) எவரும் இலர். (அவன்) என்றென்றும் உயிருடனிருப்பவன். (தானாகவே) நிலைத்திருப்பவன். (மற்றெல்லாவற்றையும்) நிலைத்திருக்கச் செய்பவன். சிற்றுறக்கமும், உறக்கமும் அவனைப் பற்றுவதில்லை. வானங்களிலும், பூமியிலுமுள்ளவை (அனைத்தும்) அவனுக்கே உரியன. அவனது அனுமதியின்றி அவனிடத்தில் பரிந்துரை செய்பவர் எவர்? அவர்களுக்கு முன்னுள்ளவை, அவர்களுக்குப் பின்னுள்ளவை (எல்லா –வற்றையுமே) அவன் அறிகின்றான். அவனுடைய விருப்பமின்றி அவனுடைய ஞானத்திலிருந்து எதனையும் அவர்களால் பெற இயலாது. அவனுடைய ஞானம் வானங்களிலும், பூமியிலும் பரவியிருக்கின்றது. அவற்றைப் பாதுகாப்பது, அவனைச் சோர்வுக்குள்ளாக்குவதில்லை. அவன் உயர் தகுதியுடையோனும், மகத்துவமிக்கோனுமாவான். (2:256)

### அல்லாஹ் தேவைகள் அற்றவனும் அவனுக்கு இணையானவன் வேறேதுமில்லை

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ○ اَللّٰهُ الصَّمَدُ○ لَمْ يَلِدْ ۙ وَلَمْ يُوْلَدْ○ وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ○

(எல்லாக் கால முஸ்லிம்களிடமும் நாம் கூறுகிறோம்:) நீர் (மற்றவர்களிடம்) கூறுவீராக! (உண்மையில்) அல்லாஹ் ஒருவனே ஆவான். அல்லாஹ் (எந்தத்) தேவை(யும்) அற்றவன். (எல்லாவற்றிற்கும், அவன் தேவையானவன்.) அவன் எவரையும் பெறவில்லை; அவன் எவராலும் பெறப்படவுமில்லை. (அவனது பண்புகளில்) அவனுக்கு இணை எவரும் இல்லை. (112:1–5)

### ஒவ்வொன்றும் அல்லாஹ்வைப் புகழ்வதுடன் அவனைப் போற்றுகின்றன

تُسَبِّحُ لَهُ السَّمٰوٰتُ السَّبْعُ وَالْاَرْضُ وَمَنْ فِيْهِنَّ ؕ وَاِنْ مِّنْ شَیْءٍ اِلَّا يُسَبِّحُ
بِحَمْدِهٖ وَلٰكِنْ لَّا تَفْقَهُوْنَ تَسْبِيْحَهُمْ ؕ اِنَّهٗ كَانَ حَلِيْمًا غَفُوْرًا○

ஏழு வானங்களும் பூமியும் அவற்றிலுள்ள யாவும் அவனைப் புகழ்கின்றன; மேலும் அவனைப் புகழ்ந்து போற்றாத எந்தப் பொருளும் இல்லை. ஆனால் அவற்றின் புகழ்ச்சியை நீங்கள் புரிந்து கொள்வதில்லை. நிச்சயமாக அவன் குறைபாடுகளை மறைப்பவனும் மிக மன்னிப்பவனும் ஆவான். (17:45)

### நேர்வழி அல்லாஹ்வின் அருளைச் சார்ந்ததாகும்

لَا تُدْرِكُهُ الْاَبْصَارُ ۫ وَهُوَ يُدْرِكُ الْاَبْصَارَ ۚ وَهُوَ اللَّطِيْفُ الْخَبِيْرُ○

பார்வைகள் அடைய முடியாது. ஆனால் அவன் பார்வைகளை அடைகிறான். அவன் நுட்பமானவனும் யாவற்றையும் அறிந்தவனுமாவான். (6:104)

وَلَقَدْ خَلَقْنَا الْاِنْسَانَ وَنَعْلَمُ مَا تُوَسْوِسُ بِهٖ نَفْسُهٗ ۖۚ وَنَحْنُ اَقْرَبُ اِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيْدِ○

நிச்சயமாக நாம் மனிதனைப் படைத்தோம். மேலும் அவனுடைய உள்ளம் (அவனிடம்) முணுமுணுப்பதையும் நாம் அறிவோம். மேலும் நாம் அவனுக்கு (அவனது) உயிர் நாடியை விட மிக அருகில் உள்ளோம். (50:17)

### அவன், தான் விரும்புபவருக்கு கண்ணியம் அளிக்கிறான்; தான் விரும்புபவருக்கு இழிவைத் தருகிறான்

قُلِ اللّٰهُمَّ مٰلِكَ الْمُلْكِ تُؤْتِى الْمُلْكَ مَنْ تَشَآءُ وَتَنْزِعُ الْمُلْكَ مِمَّنْ تَشَآءُ ۫
وَتُعِزُّ مَنْ تَشَآءُ وَتُذِلُّ مَنْ تَشَآءُ ؕ بِيَدِكَ الْخَيْرُ ؕ اِنَّكَ عَلٰى كُلِّ شَیْءٍ قَدِيْرٌ○

நீர் கூறுவீராக: ஆட்சிக்கு அதிபதியாகிய அல்லாஹ்வே! நீ விரும்புவோருக்கு ஆட்சியினை வழங்குகின்றாய். மேலும், விரும்புபவரிடமிருந்து ஆட்சியினைப் பறித்துக் கொள்கிறாய். மேலும், நீ விரும்புபவருக்கு மேன்மையை வழங்குகின்றாய். மேலும் நீ விரும்புபவரை இழிவுபடுத்துகின்றாய். எல்லா நன்மைகளும் உன் கையில்தான் இருக்கின்றன. நிச்சயமாக நீ எல்லாவற்றிற்கும் பேராற்றல் பெற்றவனாவாய். (3:27)

# இறை இருப்பிற்கான நபிமொழிகள்

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ
إِنَّ لِلّٰهِ تَعَالَى تِسْعَةً وَتِسْعِيْنَ اسْمًا مَنْ أَحْصَاهَا دَخَلَ الْجَنَّةَ هُوَ الَّذِيْ لَا إِلٰهَ إِلَّا
هُوَ الرَّحْمٰنُ، الرَّحِيْمُ، الْمَلِكُ، الْقُدُّوْسُ، السَّلَامُ، الْمُؤْمِنُ، الْمُهَيْمِنُ، الْعَزِيْزُ،
الْجَبَّارُ، الْمُتَكَبِّرُ، الْخَالِقُ، الْبَارِئُ، الْمُصَوِّرُ، الْغَفَّارُ، الْقَهَّارُ، الْوَهَّابُ، الرَّزَّاقُ،
الْفَتَّاحُ، الْعَلِيْمُ، الْقَابِضُ، الْبَاسِطُ، الْخَافِضُ، الرَّافِعُ، الْمُعِزُّ، الْمُذِلُّ، السَّمِيْعُ،
الْبَصِيْرُ، الْحَكَمُ، الْعَدْلُ، اللَّطِيْفُ، الْخَبِيْرُ، الْحَلِيْمُ، الْعَظِيْمُ، الْغَفُوْرُ، الشَّكُوْرُ،
الْعَلِيُّ، الْكَبِيْرُ، الْحَفِيْظُ، الْمُقِيْتُ، الْحَسِيْبُ، الْجَلِيْلُ، الْكَرِيْمُ، الرَّقِيْبُ،
الْمُجِيْبُ، الْوَاسِعُ، الْحَكِيْمُ، الْوَدُوْدُ، الْمَجِيْدُ، الْبَاعِثُ، الشَّهِيْدُ، الْحَقُّ، الْوَكِيْلُ،
الْقَوِيُّ، الْمَتِيْنُ، الْوَلِيُّ، الْحَمِيْدُ، الْمُحْصِيْ، الْمُبْدِئُ، الْمُعِيْدُ، الْمُحْيِيْ، الْمُمِيْتُ،
الْحَيُّ، الْقَيُّوْمُ، الْوَاجِدُ، الْمَاجِدُ، الْوَاحِدُ، الْأَحَدُ، الصَّمَدُ، الْقَادِرُ، الْمُقْتَدِرُ،
الْمُقَدِّمُ، الْمُؤَخِّرُ، الْأَوَّلُ، الْآخِرُ، الظَّاهِرُ، الْبَاطِنُ، الْوَالِيْ، الْمُتَعَالِيْ، الْبَرُّ،
التَّوَّابُ، الْمُنْتَقِمُ، الْعَفُوُّ، الرَّءُوْفُ، مَالِكُ الْمُلْكِ، ذُوالْجَلَالِ وَالْإِكْرَامِ،
الْمُقْسِطُ، الْجَامِعُ، الْغَنِيُّ، الْمُغْنِيْ، الْمَانِعُ، الضَّارُّ، النَّافِعُ، النُّوْرُ، الْهَادِيْ، الْبَدِيْعُ،
الْبَاقِيْ، الْوَارِثُ، الرَّشِيْدُ، الصَّبُوْرُ۔

பொருள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (அல்லாஹ்வின் சொந்தப் பெயராகிய அல்லாஹ் என்பதைத் தவிர) அல்லாஹ்வுக்கு 99 பெயர்கள் இருக்கின்றன. எவர் வாழ்க்கையில் அதை கவனத்தில் கொள்வாரோ – அவற்றின் தோற்றமாக உருவாவதற்கு முயற்சி செய்வாரோ அவர் சொர்க்கத்தில் நுழைவார். அந்தப் பெயர்களை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கணக்கிட்டார்கள்:

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாரும் இல்லை; அவன் கேட்காமலேயே வழங்குபவன்; மேன்மேலும் கருணை காட்டுபவன்; மன்னன், எல்லா விதமான குறைகளிலிருந்தும் தூயவன்; பரிசுத்தமானவன்; எல்லா ஆபத்துகளிலிருந்தும் காப்பாற்றுபவன்; அமைதியை வழங்குபவன்; எல்லா விதமான சீர்குலைவிலிருந்தும் பாதுகாப்பவன்; மிகைத்தவன்; நஷ்டத்தை ஈடு செய்பவன்; பெருமைமிக்கவன்; படைப்பவன்; இல்லாமையிலிருந்து உருவாக்குபவன்; வடிவமைப்பவன்; மூடி மறைத்து திரையிடுபவன்; முழுமையான மேலோங்குதலைக் கொண்டவன்; அளவில்லாமல் வழங்குபவன்; வாழ்வாதாரத்தை வழங்குபவன்; கஷ்டத்தை நீக்குபவன்; எல்லாவற்றையும் அறிந்தவன்; தடுத்து வைத்துக் கொள்பவன்; வளமையை உருவாக்குபவன்; தாழ்த்துபவன்; உயர்த்துபவன்; கண்ணியத்தை வழங்குபவன்; இழிவைத் தருபவன்; கேட்பவன்; பார்ப்பவன்; தீர்ப்பளிப்பவன்; நீதி வழங்குபவன்; நுட்பமான ஞானத்தைக் கொண்டவன்; நன்கு தெரிந்தவன்; சகித்துக் கொள்பவன்; கவுரவத்தைக் கொண்டவன்; தவறுகளை மறைப்பவன்; மதிப்புடையவன்; உயர்ந்த பதவி உடையவன்; மிகவும் மகத்துவமிக்கவன்; மிகவும் மகிமை உடையவன்; அனைவரையும் பாதுகாப்பவன்; அனைவருக்கும் உதவி செய்பவன்; கணக்கெடுப்பவன்; கம்பீரமிக்கவன்; மதிப்பு கொண்டவன்; கண்காணிப்பவன்; (துஆவை) ஏற்றுக் கொள்பவன்; பரந்த தன்மை கொண்டவன்; ஞானமிக்கவன்; ஞானம் கொண்டவன்; மிகவும் நேசிக்கின்றவன்; மேன்மையானவன்; மீண்டும் வாழ்வளிப்பவன்; எந்நேரமும் பார்த்துக் கொண்டிருப்பவன்; எல்லா மேன்மைகளுக்கும் நிரந்தர தகுதி பெற்றவன்; பாதுகாப்பவன்; வலிமை படைத்தவன்; வல்லமை கொண்டவன்; உதவி புரிபவன்; புகழுக்குரியவன்; எண்ணி வைத்திருப்பவன்; என்றென்றும் உயிருள்ளவன்; முதன்முறையாகப் படைப்பவன்; மீண்டும் படைப்பவன்; வாழ்வளிப்பவன்; மரணத்தைக் கொடுப்பவன்; நிரந்தரமாக உயிருள்ளவன்; சுயமாகவே நிலைத்திருப்பவன்; தன்னிறைவு பெற்றவன்; மேன்மை கொண்டவன்; ஏகன்; ஒருவன்; தன்னிறைவு பெற்றவன்; ஆற்றல் கொண்டவன்; ஆதிக்கம் உடையவன்; மனம் திரும்புதலை ஒப்புக் கொள்பவன்; மன்னிப்பவன்; மென்மையாக நடந்து கொள்பவன்; அரசர்களுக்கெல்லாம் அரசன்; மகத்துவமும் மகிமையும் கொண்டவன்; கண்ணியமிக்கவன்; நீதிமான்; தீங்குகளைத் தடுப்பவன்; நன்மை வழங்குபவன்; ஒளிமிக்கவன்; நேர்வழி காட்டுபவன்; புத்தம் புதியவற்றை கண்டுபிடிப்பவன்; நிலைத்திருப்பவன்; உண்மையான அரசன்; வழிகாட்டுபவன்; தண்டனை தருவதில் நிதானம் கொண்டவன்.

(திர்மிதி கிதாபுத் தஃவாத் ஹகீகத்துஸ் ஸாலிஹீனில் இருந்து ஹதீஸ் எண் 9)

عَنْ هَمَّامِ بْنِ مُنَبِّهٍ قَالَ هٰذَا مَا حَدَّثَنَا بِهِ أَبُو هُرَيْرَةَ ﷺ عَنْ رَسُوْلِ اللهِ
صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ اللهُ عَزَّوَجَلَّ كَذَّبَنِيْ عَبْدِيْ وَلَمْ يَكُنْ لَّهُ ذٰلِكَ،
وَشَتَمَنِيْ وَلَمْ يَكُنْ لَّهُ ذٰلِكَ، تَكْذِيْبُهُ إِيَّايَ أَنْ يَّقُوْلَ فَلَنْ يُّعِيْدَنَا كَمَا بَدَأَنَا،
وَأَمَّا شَتْمُهُ إِيَّايَ يَقُوْلُ اتَّخَذَ اللهُ وَلَدًا، وَأَنَا الصَّمَدُ الَّذِيْ لَمْ أَلِدْ وَلَمْ أُوْلَدْ، وَلَمْ
يَكُنْ لِّيْ كُفُوًا أَحَدٌ۔

பொருள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ் கூறுகின்றான்: என் அடியார்கள் என்னைப் பொய்ப்படுத்துகின்றான்; ஆனால் அவன் அவ்வாறு செய்யக் கூடாது; அவன் என்னை ஏசுகின்றான்; ஆனால் அவனுக்கு அவ்வாறு கூறுவதற்கு உரிமையில்லை. என்னைப் பொய்ப்படுத்துகிறான் என்பதன் கருத்து, அல்லாஹ் நம்மை முதலில் படைத்தது போன்று மீண்டும் படைக்கவில்லை என்று அவன் கூறுகின்றான். அவன் என்னை ஏசுகிறான் என்பதன் கருத்து, அல்லாஹ் ஒருவரை தன் மகனாக ஆக்கி விட்டான் என அவன் கூறுவதாகும்; ஆனால் எனது பண்பு 'சமது' ஆகும். அதாவது தேவைகளற்றவன்; தன்னிறைவு பெற்றவன். எனக்கு எந்த மகனுமில்லை; நான் பிறக்கவுமில்லை. அதாவது நான் எவருடைய மகனுமல்லன். எவரும் எனக்கு சரிசமமானவரும் ஆக முடியாது. (முஸ்னது அஹ்மது ஹகீக்கத்துஸ் ஸாலிஹீன் ஹதீஸ் எண் 11)

عَنْ اَبِیْ ذَرٍّ رَضِیَ اللّٰہُ عَنْہُ عَنِ النَّبِیِّ صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَسَلَّمَ فِیْمَا یَرْوِیْ عَنِ اللّٰہِ تَبَارَكَ وَتَعَالٰی اَنَّہٗ قَالَ یَا عِبَادِیْ اِنِّیْ حَرَّمْتُ الظُّلْمَ عَلٰی نَفْسِیْ وَجَعَلْتُہٗ بَیْنَکُمْ مُحَرَّمًا فَلَا تَظَالَمُوْا ، یَا عِبَادِیْ کُلُّکُمْ ضَآلٌّ اِلَّا مَنْ ھَدَیْتُہٗ فَاسْتَھْدُوْنِیْ اَھْدِیْکُمْ ، یَا عِبَادِیْ کُلُّکُمْ جَائِعٌ اِلَّا مَنْ اَطْعَمْتُہٗ فَاسْتَطْعِمُوْنِیْ اُطْعِمْکُمْ ، یَا عِبَادِیْ کُلُّکُمْ عَارٍ اِلَّا مَنْ کَسَوْتُہٗ فَاسْتَکْسُوْنِیْ اَکْسُکُمْ، یَاعِبَادِیْ اِنَّکُمْ تُخْطِئُوْنَ بِاللَّیْلِ وَالنَّھَارِ وَاَنَا اَغْفِرُ الذُّنُوْبَ جَمِیْعًا فَاسْتَغْفِرُوْنِیْ اَغْفِرْلَکُمْ، یَاعِبَادِیْ اِنَّکُمْ لَنْ تَبْلُغُوْا ضُرِّیْ فَتَضُرُّوْنِیْ وَلَنْ تَبْلُغُوْا نَفْعِیْ فَتَنْفَعُوْنِیْ، یَاعِبَادِیْ لَوْ اَنَّ اَوَّلَکُمْ وَاٰخِرَکُمْ وَاِنْسَکُمْ وَجِنَّکُمْ کَانُوْا عَلٰی اَتْقٰی قَلْبِ رَجُلٍ وَاحِدٍ مِّنْکُمْ مَا زَادَ ذٰلِكَ فِیْ مُلْکِیْ شَیْئًا، یَاعِبَادِیْ لَوْ اَنَّ اَوَّلَکُمْ وَاٰخِرَکُمْ وَاِنْسَکُمْ وَجِنَّکُمْ کَانُوْا عَلٰی اَفْجَرِ قَلْبِ رَجُلٍ وَاحِدٍ مِّنْکُمْ مَا نَقَصَ ذٰلِكَ مِنْ مُلْکِیْ شَیْئًا، یَاعِبَادِیْ لَوْ اَنَّ اَوَّلَکُمْ وَاٰخِرَکُمْ وَاِنْسَکُمْ وَجِنَّکُمْ قَامُوْا فِیْ صَعِیْدٍ وَاحِدٍ فَسَاَلُوْنِیْ فَاَعْطَیْتُ کُلَّ اِنْسَانٍ مَسْئَالَتَہٗ مَا نَقَصَ ذٰلِكَ مِمَّا عِنْدِیْ اِلَّا کَمَا یَنْقُصُ الْمِخْیَطُ اِذَا اُدْخِلَ الْبَحْرَ، یَاعِبَادِیْ اِنَّمَا ھِیَ اَعْمَالُکُمْ اُحْصِیْھَا لَکُمْ ثُمَّ اُوَفِّیْکُمْ اِیَّاھَا فَمَنْ وَجَدَ خَیْرًا فَلْیَحْمَدِ اللّٰہَ وَمَنْ وَجَدَ غَیْرَ ذٰلِكَ فَلَا یَلُوْمَنَّ اِلَّا نَفْسَہٗ۔

பொருள்: அல்லாஹ்வின் புறமிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ் கூறுகிறான். என் அடியார்களே! நான் என் மீது அநீதியை ஹராமாக்கியுள்ளேன். எவர்களை நான் நேரான பாதையில் வழிநடத்துகிறேனோ அவர்களைத் தவிர நீங்கள் அனைவரும் வழிதவறிய பாதையில் இருக்கின்றீர்கள். என்னிடம் நேர்வழியை வேண்டுங்கள். நான் உங்களுக்கு நேர்வழி காட்டுவேன். என் அடியார்களே! நான் உணவு வழங்குபவர்களைத் தவிர நீங்கள் அனைவரும் பசியுள்ளவர்களாவீர்கள். எனவே என்னிடம் உணவை வேண்டுங்கள். நான் உங்களுக்கு உணவளிப்பேன். என் அடியார்களே! நீங்கள் இரவும் பகலும் தவறுகள் செய்தாலும் என்னால் உங்களை மன்னிக்க முடியும். எனவே என்னிடமே மன்னிப்பை வேண்டுங்கள். நான் உங்களை மன்னித்து விடுவேன். என் அடியார்களே! நீங்கள் எனக்கு நஷ்டத்தை ஏற்படுத்த எண்ணினால் உங்களால் எந்த நஷ்டத்தையும் எனக்கு ஏற்படுத்த முடியாது. நீங்கள் எனக்கு நன்மை செய்ய முயற்சி செய்தாலும் எனக்கு நீங்கள் எந்த நன்மையையும் செய்ய முடியாது. என் அடியார்களே! உங்களில் முன், பின் உள்ள அனைத்து மனிதர்களும், ஜின்களும் முதல் நிலை இறையச்சமுடையவராகவும், தூயவராகவும் ஆகி விட்டாலும் அப்படி ஆகுவது எனது அரசாட்சியில் ஓர் அணு அளவும் கூடுதலை ஏற்படுத்திவிட முடியாது. என் அடியார்களே! உங்களில் முன், பின் உள்ள அனைத்து மனிதர்கள் மற்றும் ஜின்களில் எவர் மிகத் தீயவராக இருப்பாரோ அவரது உள்ளம் மிக மோசமானதாக ஆகிவிட்டாலும் அப்படி ஆகுவது எனது அரசாட்சியில் ஓர் அணு அளவும் குறைவை ஏற்படுத்திவிட முடியாது. என் அடியார்களே! உங்களுடைய எல்லா மனிதர்களும் ஜின்களும் ஒரே மைதானத்தில் ஒன்று கூடி என்னிடம் தேவைகளைக் கேட்டு, நான் ஒவ்வொரு மனிதனின் தேவைகளையும் நிறைவேற்றினாலும் எனது கருவூலங்களில் இருந்து, கடலில் ஊசியை இட்டு அதை வெளியில் எடுப்பதால் கடலின் தண்ணீரில் குறைவு ஏற்படும் அளவுக்குக் கூட குறைவு ஏற்படாது. என் அடியார்களே! இவை உங்களின் செயல்களாகும். அவற்றை நான் கணக்கெடுத்துள்ளேன். நான் அவற்றிற்கு முழுமையான நற்கூலி கொடுப்பேன். எனவே எவருக்கு நல்ல விளைவு ஏற்படுமோ அவர் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தட்டும். மேலும் எவர் இவற்றைத் தவிர வேறொன்றைப் பெறுவாரோ அதாவது தோல்வியைக் கண்டால் அவர் தன்னையே தூற்றுவார். அதாவது அது அவருடைய தீய செயல்களின் விளைவேயாகும்.

(முஸ்லிம் கிதாபுல் பிர்ரி வஸ்ஸிலா. பாபு தஹ்ரீமுழ் ழுல்மு. ஹதீகத்துஸ் ஸாலிஹீன் ஹதீஸ் எண். 12)

عَنْ اَبِیْ ھُرَیْرَۃَ رَضِیَ اللّٰہُ عَنْہُ قَالَ : قَالَ رَسُوْلُ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَسَلَّمَ یَقُوْلُ اللّٰہُ تَعَالٰی اَنَا عِنْدَ ظَنِّ عَبْدِیْ بِیْ وَاَنَا مَعَہٗ حِیْنَ یَذْکُرُنِیْ فَاِنْ ذَکَرَنِیْ فِیْ نَفْسِہٖ ذَکَرْتُہٗ فِیْ نَفْسِیْ وَاِنْ ذَکَرَنِیْ فِیْ مَلَاٍ ذَکَرْتُہٗ فِیْ مَلَاٍ خَیْرٍ مِنْھُمْ وَاِنِ اقْتَرَبَ اِلَیَّ شِبْرًا اِقْتَرَبْتُ اِلَیْہِ ذِرَاعًا وَاِنِ اقْتَرَبَ اِلَیَّ ذِرَاعًا اِقْتَرَبْتُ اِلَیْہِ بَاعًا وَاِنْ اَتَانِیْ یَمْشِیْ اَتَیْتُہٗ ھَرْوَلَۃً۔

பொருள்: ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான், எனது அடியாரின் எண்ணத்திற்கேற்ப அவருடன் நடந்து கொள்கிறேன். அடியார் என்னை உள்ளத்தில் நினைவுகூரும் போது நான் அவனுடன் இருக்கிறேன். அவர் என்னை மனதில் நினைவுகூரும்போது நானும் அவரை மனதில் நினைவு கூருவேன். அவர் என்னை நோக்கி ஒரு ஜாண் அளவுக்கு வந்தால் நான் அவரை நோக்கி ஓர் அடி அளவுக்கு செல்வேன். அவர் என்னை நோக்கி நடந்து வந்தால் நான் அவரை நோக்கி ஓடிச் செல்வேன்.

(திர்மிதி. அப்வாபுத் தஃவாத். ஹதீகத்துஸ் ஸாலிஹீன் நபிமொழி எண்.80)

عَنْ عَبْدِ اللّٰہِ بْنِ عُمَرَ رَضِیَ اللّٰہُ تَعَالٰی عَنْھُمَا قَالَ قَرَأَ رَسُوْلُ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَسَلَّمَ ھٰذِہِ الْاٰیَۃَ وَھُوَ عَلَی الْمِنْبَرِ : وَالسَّمٰوٰتُ مَطْوِیّٰتٌ بِیَمِیْنِہٖ، سُبْحَانَہٗ وَتَعَالٰی عَمَّا یُشْرِکُوْنَ۔ قَالَ یَقُوْلُ اللّٰہُ اَنَا الْجَبَّارُ، اَنَا الْمُتَکَبِّرُ، اَنَا الْمَلِكُ، اَنَا الْمُتَعَالُ یُمَجِّدُ نَفْسَہٗ قَالَ فَجَعَلَ رَسُوْلُ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَسَلَّمَ یُرَدِّدُھَا، حَتّٰی رَجَفَ بِھَا الْمِنْبَرُ حَتّٰی ظَنَنَّا اَنَّہٗ سَیَخِرُّ بِہٖ۔

பொருள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபி நாயகம் (ஸல்) அவர்கள் மேடையில் குத்பா கொடுத்துக் கொண்டிருக்கும்போது வானம் சுருங்கியவாறு அவனது வலக் கையில் இருக்கும் என்ற வசனத்தை ஓதினார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் கூறுகிறான். நான் மாபெரும் ஆற்றல் கொண்டவனும், நஷ்டங்களை நீக்குபவனுமாவேன். பெருமைகள் எனக்கே உரியன. நான் அரசன் ஆவேன். நான் உயர்ந்த மகத்துவம் உடையவன். இவ்வாறு அல்லாஹ் தனது மகிமையையும், மகத்துவத்தையும் எடுத்துரைக்கிறான். மேடை அதிர்ந்து விடும் அளவுக்கு அவர்கள் இந்த வார்த்தைகளை மீண்டும் மீண்டும் ஆவேசத்துடன் கூறிக் கொண்டிருந்தார்கள். எதுவரையென்றால் அவர்கள் மேடையிலிருந்து கீழே விழுந்து விடக்கூடாதே என நாங்கள் அஞ்சினோம்.

(முஸ்னத் அஹ்மது – ஹதீகத்துஸ் ஸாலிஹீன் ஹதீஸ் எண். 10)

## இறை இருப்பு பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (ஸல்) அவர்களின் வழிகாட்டல்கள்

**தனக்குகொரு இறைவன் இருக்கின்றான்; அவன் எல்லாவற்றின் மீதும் ஆற்றல் கொண்டவன் என இதுவரை அறியாத மனிதன் எவ்வளவு துரதிஷ்டசாலியாவான். நமது சுவர்க்கம் நமது இறைவன் ஆவான். நமது உயர்ந்த இன்பங்கள் நமது இறைவனிடம் உள்ளன. ஏனெனில் நாம் அவனைக் கண்டோம். எல்லா அழகையும் அவனிடம் பெற்றோம்.**

**இறைவன் ஓர் அன்பிற்குரிய கருவூலமாவான். அவனுக்கு மதிப்பளியுங்கள். அவன் உங்களின் ஒவ்வோர் அடியிலும் உங்களுக்கு உதவி செய்பவனாவான். அவனையன்றி நீங்கள் ஒன்றுமே அல்ல. உங்களுடைய வழிவகைகளும் திட்டங்களும் ஒன்றுமல்ல.**

ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

தக்தீர் அதாவது உலகில் எல்லாப் பொருள்களும் ஒரு வரைமுறையின்படி, சட்டத்தின்படி செயல்படுவதும் நிற்பதும், அதனை இயக்கக்கூடிய ஒருவன் இருக்கின்றான் என்பதை எடுத்துரைக்கின்றது. அதற்கு ஒரு முகத்திர் அதாவது ஒருவர் விதிப்படி உருவாக்காவிட்டால் அது ஏன் இந்த அளவுக்கு முறைப்படி அமைப்புடன் தனது இயக்கத்தை நிலைநிறுத்தி நமக்கு பயனுள்ளதாக அமைகிறது! அவ்வாறே வானத்தின் கடிகாரமும் அதன் முறைப்படியும், கட்டுக்கோப்பிலும் அமையப் பெற்றிருப்பது, அது எண்ணத்தின் படி குறிப்பிட்ட நோக்கத்திற்காகவும், குறிக்கோளுக்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது. இவ்வாறு மனிதன், உருவாக்கப்பட்ட பொருளிலிருந்து உருவாக்கியவனையும், ஹதீஸிலிருந்து விதியை உருவாக்குபவனையும் அடையாளம் காண முடியும்.

ஆனால் இதை விட அதிகமாக அல்லாஹ் தனது இருப்புக்கு சான்றாக இன்னொரு வழிமுறையை ஏற்படுத்தி இருக்கிறான். அது என்னவென்றால், அவன் தான் தேர்ந்தெடுத்தவர்களுக்கு ஓர் இறை நியதியைப் பற்றி முன்னரே தெரிவித்து விடுகிறான். இன்ன நாளில், இன்ன நேரத்தில் நான் இன்ன விஷயத்தை விதித்துள்ளேன் என அவர்களுக்கு கூறி விடுகிறான். எவரை இறைவன் இந்த வேலைக்காக தேர்ந்தெடுத்துள்ளானோ அவர், இவ்வாறு நடக்கும் என முன்னரே மக்களுக்கு அறிவித்து விடுகிறார். பிறகு அவர் கூறியபடியே நடந்து விடுகிறது.

இறை இருப்புக்கு இது எத்தகைய சான்று என்றால், இந்தச் சந்தர்ப்பத்தில் எல்லா நாத்திகர்களும் வெட்கமடைந்து தலை குனிந்து விடுகிறார்கள். அல்லாஹ் இத்தகைய ஆயிரக்கணக்கான அடையாளங்களை நமக்குக் காட்டியுள்ளான். அவற்றால் அல்லாஹ்வின் இருப்பின் மீது இனிமையான ஈமான் உருவாகிறது. (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 286 காதியான் பதிப்பு)

ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

மனிதனுக்கொரு இறைவன் இருக்கின்றான். அவன் எல்லாவற்றின் மீதும் ஆற்றல் மிக்கவன் என இதுவரை அறியாத மனிதன் எவ்வளவு துரதிஷ்டசாலியாவான். நமது சுவர்க்கம் நமது இறைவன் ஆவான். நமது உயர்ந்த இன்பங்கள் நமது இறைவனிடம் உள்ளன. ஏனெனில் நாம் அவனைக் கண்டோம். மேலும் எல்லா அழகையும் அவனிடம் கண்டோம். உயிரைக் கொடுத்தாவது பெறத்தக்கது இந்த செல்வம். எல்லாவற்றையும் இழந்தவாறு பெறத்தக்கது இந்த மாணிக்கம். இழப்பிற்குரியோரே! இந்த நீரூற்றின் பக்கம் ஓடுங்கள். அது உங்களைக் காப்பாற்றும். நான் என்ன செய்வேன்? இந்த நற்செய்தியை மக்களின் மனங்களில் எவ்வாறு பதிய வைப்பேன்? இது உங்கள் இறைவன் ஆவான் என மக்கள் கேட்கும் பொருட்டு எந்த முரசு கொண்டு நான் வீதிகளில் பறைசாற்றுவேன்? கேட்பதற்கு மக்களின் காதுகள் திறப்பதற்கு நான் எந்த மருந்தைக் கொண்டு சிகிச்சை செய்வேன்?

நீங்கள் இறைவனுக்காக ஆகி விட்டால் இறைவன் உங்களுக்காகவே ஆவான் என உறுதி கொள்ளுங்கள். நீங்கள் தூங்கிக் கொண்டிருப்பீர்கள்; இறைவன் உங்களுக்காக விழித்திருப்பான். நீங்கள் பகைவர்களை விட்டு கவனமற்றவர்களாகி விட்டால் இறைவன் அவர்களைப் பார்த்துக் கொள்வான். அவர்களின் திட்டங்களை தூளாக்கி விடுவான். உங்கள் இறைவனிடம் என்னென்ன ஆற்றல்கள் இருக்கின்றன என்பதை நீங்கள் இன்னும் அறியவில்லை. நீங்கள் அறிந்திருந்தால் உலகத்திற்காக நீங்கள் கடுமையாக வருத்தப் படக்கூடிய எந்த நாளும் உங்களுக்கு வராது. தம்மிடம் கருவூலம் வைத்திருக்கும் ஒருவர் ஒரு பைசா வீணாகி விட்டதால் அழுவாரா? கூச்சலிடுவாரா? நாசமாவாரா? பிறகு இறைவன் உங்களுடைய ஒவ்வொரு தேவையின் நேரத்திலும் பயன்படக் கூடியவன் என்ற அந்தக் கருவூலத்தைப் பற்றி உங்களுக்கு தெரிந்திருந்தால், கவனமற்று எப்படி இருப்பீர்கள்?

இறைவன் எத்தகைய அன்பிற்குரியவனாவான் என்றால், அவனுக்கு மதிப்பளியுங்கள். அவன் ஒவ்வோர் அடியிலும் உங்களுக்கு உதவியாளனாவான். அவனையன்றி நீங்கள் ஒன்றுமற்றவர்களாவீர்கள். உங்களுடைய வழிவகைகளும் திட்டங்களும் ஒன்றுமற்றவையாகும்.

(கிஷ்தி நூஹ். ரூஹானி ஹஸாயீன் தொகுதி 19 பக்கம் 21-22)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

கேட்பவர்களே! கேட்டுக் கொள்ளுங்கள். இறைவன் உங்களிடம் எதை விரும்புகிறான்? நீங்கள் அவனுக்காகவே ஆகி விட வேண்டும் என்பதையே விரும்புகிறான். பூமியிலோ வானத்திலோ அவனுக்கு எவரையும் இணையாக்காதீர்கள். நமது இறைவன் முன்னர் உயிருடன் இருந்ததைப் போன்றே இன்றும் உயிருடன் இருக்கிறான். அவன் முன்னர் பேசியதைப் போன்றே இப்போதும் பேசுகின்றான். முன்னர் கேட்டதைப் போன்றே இப்போதும் கேட்கின்றான். அவன் இந்த காலத்தில் கேட்கின்றான்; ஆனால் அவன் பேசுவதில்லை என்பது காய்ந்த சிந்தனை ஆகும். மாறாக அவன் கேட்கவும் செய்கிறான்; பேசவும் செய்கிறான். அவனுடைய எல்லா பண்புகளும் ஆரம்பம் இல்லாததும், முடிவில்லாததும் ஆகும். எந்தப் பண்பும் செயலற்றுப்போகவில்லை. இனிமேலும் செயலற்றுப் போகாது. அவனே ஒருவனும் இணையில்லாதவனும் ஆவான். அவனுக்கு எந்த மகனுமில்லை. அவனுக்கு எந்த மனைவியுமில்லை. அவன் எந்த நிகரற்ற முன்னுதாரணமும் இல்லாதவன் ஆவான். அவனைப் போன்று எந்த நபரும் எந்த சிறப்பான பண்பினாலும் சிறப்பினைப் பெற்றவன் இல்லை. அவனுக்கு சரிசமமானவன் எவனுமில்லை. அவனது எந்த ஆற்றலும் குறைவானதல்ல. அவன் தூரமாக இருந்த போதிலும் அருகில் இருக்கிறான். மேலும் அருகில் இருந்த போதிலும் அவன் தொலைவில் இருக்கிறான். அவன் உவமையாக ஆன்மீகக் கனவு காண்பவர்களுக்கு தன்னைக் காட்ட முடியும். ஆனால் அவனுக்கென்று எந்த உடலும் இல்லை. எந்த வடிவமும் இல்லை.

அவன் எல்லாவற்றையும் விட உயர்வானவன்; எனினும் அவனுக்கு கீழே வேறு எவரும் இல்லை எனக் கூற முடியாது. அவன் அர்ஷில் இருக்கின்றான். ஆயினும் அவன் பூமியில் இல்லை எனக் கூற முடியாது. அவன் எல்லா முழுமையான பண்புகளை வெளிப்படுத்துபவனாவான். மேலும் உண்மையான புகழ்களுக்கு உரிமை பெற்றவன். மேலும் எல்லா ஆற்றல்களையும் ஒருங்கே கொண்டவன் ஆவான். எல்லா அருள்களின்

*தலையூற்று ஆவான். எல்லா பொருள்களும் அவன் பக்கமே திரும்புகின்றன. மேலும் அவன் எல்லா மேன்மைகளையும் கொண்டவன். மேலும் அவன் எல்லா குறையிலிருந்தும் பலவீனத்திலிருந்தும் தூயவன் ஆவான். பூமியில் உள்ளவர்களும் வானத்தில் உள்ளவர்களும் அவனையே வணங்க வேண்டும் என்பதில் அவன் சிறப்புத் தன்மையைக் கொண்டவன். அவனுக்கு முன்னால் எதுவும் இயலாதது இல்லை. எல்லா ஆன்மாக்களும், அவற்றின் ஆற்றல்களும் எல்லா அணுக்களும், அவற்றின் சக்திகளும் அவனால் உருவாக்கப்பட்டவையாகும். அவனை அன்றி எந்தப் பொருளும் வெளிப்பட முடியாது. அவன் தனது ஆற்றல்கள், தனது வலிமைகள், தனது அடையாளங்கள் மூலமாக தன்னைத் தானே காட்டுகின்றான். அவன் மூலமாகவே நாம் அடையாளம் காணப்பட முடியும். மேலும் அவன் மூலமாகவே அவனுடைய விருப்பத்திற்குரிய வழி கண்டறியப்படுகிறது. அவன் பௌதீகக் கண்களின்றி பார்க்கின்றான். மேலும் அவன் பௌதீகக் காதுகளின்றி கேட்கின்றான். அவன் பௌதீக நாவின்றி பேசுகின்றான். அவ்வாறே இல்லாமையிலிருந்து இருப்பை உருவாக்குவது அவனது வேலையாகும். நீங்கள் பார்ப்பதைப் போன்று கனவின் காட்சியில் எந்தக் காரணியுமின்றி ஓர் உலகத்தைப் படைப்பது அவனது வேலையாகும். ஒவ்வோர் அழிந்து விடக்கூடிய இல்லாமையிலிருந்து இருப்பைக் காட்டுகிறான்.*

*எனவே அவ்வாறே அவனுக்கு எல்லா ஆற்றல்களும் இருக்கின்றன. அவனது ஆற்றல்களை மறுப்பவர் அறிவிலி ஆவார். அவன் நுட்பமான ஆற்றல்களை அறியாதவனாக இருக்கிறான் எனக் கூறுபவன் குருடனாவான். அவன் எல்லாவற்றையும் செய்கின்றான். அவன் தனது கவுரவத்திற்கு மாற்றமாக இருக்கின்ற அல்லது அவனது வாக்குறுதிகளைத் தவிர எல்லாவற்றையும் செய்கிறான். அவன் தனது தன்மையிலும் பண்புகளிலும், செயல்களிலும், ஆற்றல்களிலும் தனித்தவன் ஆவான். ஃபுர்க்கானே மஜீத் திறந்திருக்கும் வாசலைத் தவிர அவனை சென்றடையும் எல்லா வாசல்களும் அடைபட்டுள்ளன. முன்னர் வந்த எல்லா நுபுவ்வத்துகளையும் எல்லா வேதங்களையும் தனியாகப் பின்பற்ற வேண்டிய தேவை இல்லை. ஏனெனில் முஹம்மதிய்ய நுபுவ்வத் அவை எல்லாவற்றையும் ஒருங்கே கொண்டது. அதைத் தவிர எல்லா வழிகளும் அடைபட்டுள்ளன. இறைவன் வரை கொண்டு செல்கின்ற எல்லா உண்மைகளும் இதிலேயே அடங்கி இருக்கிறது. இதற்குப் பிறகு எந்த புதிய உண்மையும் வராது. மேலும் இதில் இல்லாத எந்தவோர் உண்மையும் இதற்கு முன் இருந்ததுமில்லை. எனவே இந்த நுபுவ்வத்தின் மீது எல்லா நுபுவ்வத்துகளும் முடிந்து விட்டன. மேலும் அவ்வாறு இருக்கவும் வேண்டும்.*

*(அல் வஸிய்யத் ரூஹானி கஸாயீன் தொகுதி 20 பக்கம் 309)*

*(15-வது பக்கத்தின் தொடர்ச்சி ...)*

ஆதாரமாக மரணமடைந்தார். இது பழைய கிறிஸ்தவர்கள் மீதும் புது கிறிஸ்தவர்களின் மீதும் ஹுஸூர் அவர்களின் வெற்றி ஆகும்.

மூன்றாவது இந்த நாட்டில் ஆரியர்கள் அதிகமாக இருக்கின்றனர். அவர்களின் தலைவர்கள் லேக்ராம் ஆவார். அவரைக் குறித்து ஸபர் 1311 – ஆம் ஆண்டு வெளியிட்ட கராமத்துஸ் ஸாதிகீன் என்ற நூலில் ஒரு முன்னறிவிப்பு இருக்கின்றது. அதாவது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை இழிவுபடுத்துதல், அன்னாரைக் கெட்ட வார்த்தைகளில் பேசுதல் ஆகிய குற்றத்தால் லேக்ராம் ஆறு வருடங்களுக்குள் மரணமடைவான் என்று அவரைக் குறித்து நான் செய்த துஆவை ஏற்றுக் கொண்டு இறைவன் எனக்கு செய்தியை வழங்கி இருக்கின்றான். மேலும் 1893 பிப்ரவரி 23 ஆம் தேதி வெளியிட்ட விளம்பரத்தில் அவரின் மரணத்தின் முறையும் கூறப்பட்டிருக்கின்றது. عِجْلٌ جَسَدٌ لَّهٗ خُوَارٌ لَهٗ نَصَبٌ وَّعَذَابٌ அதாவது லேக்ராம் ஸாமிரியின் பசுவைப் போன்று உயிரற்ற சத்தம் மட்டும் இருக்கின்ற ஆன்மீகத் தன்மை முற்றிலும் இல்லாதவராக இருக்கிறான். அதனால் ஸாமிரி எவ்வாறு தண்டிக்கப்பட்டானோ அதே போன்று இவரும் தண்டிக்கப்படுவார். ஸாமிரியின் பசு துண்டு துண்டாக்கப்பட்டு எரிக்கப்பட்டு ஆற்றில் போடப்பட்டது. மேலும் 1893 பிப்ரவரி 12 ஆம் தேதி ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஓர் ஆன்மீகக் காட்சியைக் கண்டார்கள். ஓர் ஆற்றல் மிக்க பயமுறுத்துகின்ற முகத்தைக் கொண்ட ஒருவர், ஆற்றல் மிக்க வானவரைப் போன்ற ஒருவர் வந்து லேக்ராம் எங்கே? என்று கேட்கிறார்.

(அடிக்குறிப்பு பரக்காத் துஆ. ரூஹானி கஸாயீன் தொகுதி 6 பக்கம் 33)

கராமாத்துஸ் ஸாதீகீன் என்ற நூலில் வந்துள்ள கீழ்வருகின்ற கவிதையில் நாளும் குறிப்பிட்டுள்ளது.

وَبَشَّرَنِيْ رَبِّيْ وَقَالَ مُبَشِّرًا سَتَعْرِفُ يَوْمَ الْعِيْدِ وَالْعِيْدُ أَقْرَبُ அதாவது பெருநாளைக்கு பிறகு சனிக்கிழமை.

மேலும், الا اے دشمنِ نادان و بے راہ بترس از تیغِ برّانِ محمدؐ ஐந்து வருடங்–களுக்கு முன்னால் கொலை எவ்வாறு நிகழும்? என்று விளம்பரம் செய்தார்கள். கடைசியில் 1887 மார்ச் 6 ஆம் தேதி லேக்ராம் கொலை செய்யப்பட்டார். ஆக இந்த முன்னறிவிப்பு முழுமையான முறையில் நிகழ்ந்தது இறைஇருப்பிற்கான ஓர் அத்தாட்சியாகத் திகழ்ந்தது என்று அனைவரும் ஒப்புக் கொண்டனர். ஆக இறை அறிவிப்பு என்ற அத்தாட்சி இருக்கையில் இறை இருப்பை மறுப்பது வெட்கக்–கேடானதும் அநாகரிகமானதுமாக இருக்கின்றது.

**பத்தாவது ஆதாரம்**

ஒவ்வொரு சர்ச்சைக்குரிய விஷயத்திற்கும் தீர்மானமாக திருக்குர்ஆனில் ஒரு வசனம் வருகிறது. وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا அதாவது யார் எனது வழியில் முயற்சி செய்கின்றாரோ அவர்களுக்கு நாம் நமது வழியைக் காட்டுவோம். (29:70) எவரெல்லாம் இந்த வசனத்திற்கேற்ப செயல்பட்டார்களோ அவர்கள் அனைவரும் இலாபத்தில் இருக்கின்றனர். இறைவன் இருக்கின்றான் என்றால் இறை இருப்பை நிராகரிக்கின்றவர்களுக்கு மிகவும் கஷ்டம் ஏற்படும் என்று அவர் தெரிந்து கொள்ளட்டும். ஆக அவர்களது இதயத்தில் உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற வேதனை இருக்கின்றது என்றால் அவர் உருக்கத்துடன், என் இறைவா! உண்மையில் உன் மீது நம்பிக்கை வைத்திருக்கின்றவர் கூறுகின்றதைப் போன்று ஆற்றல்மிக்கவனாக நீ இருக்கிறாய் என்றால் நீ என் மீது கருணை செய்து எனக்கு உன் நேர்வழியைக் காட்டுவாயாக. மேலும் நானும் இந்த அருளை இழந்து விடக் கூடாது என்பதற்காக எனது உள்ளத்திலும் ஈமானை நிரப்புவாயாக எனக் கூறி இறைவன் முன்னால் மன்றாட வேண்டும். ஆக இவ்வாறு எவராவது துஆ செய்து 40 நாட்கள் இவ்வாறே செயல்பட்டால் அவர் எந்த மார்க்கத்தைச் சார்ந்தவர் ஆனாலும் சரி அல்லது எந்த நாட்டைச் சார்ந்தவரானாலும் சரி ரப்புல் ஆலமீன் அவருக்கு நிச்சயமாக நேரிய வழியை வழங்குவான். மேலும் அவரது உள்ளத்தில் சந்தேகத்தின் தூய்மையற்ற எந்த விஷயமும் இருக்காத அளவிற்கு இறைவன் அவரது உள்ளத்தில் தமது இருப்பை நிரூபிப்பான். ஆக இந்த செயல்முறையில் இவ்வாறு எடுக்கப்படுகின்ற தீர்மானத்தில் எந்த விதமான சதிக்கும் வாய்ப்பு இல்லை. ஆக உண்மையைத் தேடுகின்றவர்களுக்கு இவ்வாறு செயல்படுவதில் என்ன கஷ்டம் இருக்கின்றது?

திருக்குர்ஆனில் இன்னும் பல ஆதாரங்கள் இருக்கின்ற. ஆனாலும் இப்போது நான் இந்த பத்து ஆதாரங்களுடன் இந்தக் கட்டுரையை முடித்துக் கொள்கிறேன். எவராவது இதை சிந்தித்துப் பார்த்தால் மேலும் பல ஆதாரங்கள் அவர்களுக்கு வெளிப்படும்.

இறுதியாக எவர் கையில் இந்தப் பிரசுரம் வந்து சேர்ந்தாலும் அவர் இதைப் படித்த பிறகு அது மற்ற நண்பர்களுக்கும் பயன் தருவதாக இருந்தால் இதனை அவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (தஷ்ஹீஸுல் அஸ்ஹான் மார்ச் 1913)

**- தமிழாக்கம்: மவ்லவி வஸீம் அஹ்மது**

# இறை இருப்பிற்கான பத்து சான்றுகள்

*(ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது ரலியல்லாஹு அன்ஹு)*

أَفِي اللَّهِ شَكٌّ فَاطِرِ السَّمَاوَاتِ وَالْأَرْضِ இந்தக் காலத்தில் கொள்கைகள் மற்றும் நம்பிக்கைகள் தொடர்பாக உலகவாதிகள் என்னென்ன ஆட்சேபனைகளைச் செய்கின்றார்களோ அதில் மிகப் பெரிய ஆட்சேபனை இறை இருப்பை நிராகரிப்பதாகும். இணை வைப்பவர்கள் இறைவனுக்கு இணை வைத்தாலும் குறைந்தபட்சம் அவர்கள் இறை இருப்பை நம்புகின்றனர். நாத்திகர் இறை இருப்பை முற்றிலும் மறுக்கின்றனர். கண்கூடான சாட்சியங்கள்தான் அனைத்து விஷயங்களுக்கும் அடிப்படையாக இருக்கின்றது என்று தற்காலிக விஞ்ஞானம் கூறுகிறது. அதனால் இறைவன் இருக்கின்றான் என்றால் எங்களுக்கு காட்டுங்கள் என்றும் பார்க்காத ஒன்றின் மீது நாங்கள் எவ்வாறு நம்பிக்கை கொள்வோம் என்றும் நாத்திகவாதிகள் கேள்வி கேட்கின்றனர். ஏனெனில் தற்போதைய சூழலினால் பெரும்பாலான இளைஞர்களின் உள்ளங்களிலிருந்து அந்த தூயவனின் அடையாளங்கள் அளிக்கப்பட்டு விட்டது. கல்லூரிகளின் நூற்றுக்கணக்கான மாணவர்களும் பாரிஸ்டர்களும் இறை இருப்பை மறுக்கின்றவர்களாக ஆகி வருகின்றனர். இப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கின்றது. ஆயிரக்கணக்கான மக்கள் நாடு மற்றும் சமுதாயத்தின் பயத்தால் வெளிப்படையான முறையில் இறைவனை மறுப்பதில்லை. ஆனால் உண்மையில் இறைவன் மீது நம்பிக்கை சிறிதும் வைத்திருப்பதில்லை. அதனால் இந்த விஷயத்தில் அல்லாஹ் தவ்ஃபீக் வழங்கினால் ஒரு சிறிய புத்தகம் எழுதி வெளியிடலாம் என்று நான் முடிவு செய்தேன். ஒருவேளை இதிலிருந்து ஏதாவது தூய ஆன்மா பலன் பெறலாம்.

இறைவனை எங்களுக்கு காண்பித்து விட்டால் நாங்கள் ஏற்றுக் கொள்வோம் என்பதுதான் நாத்திகர் எழுப்புகின்ற முதல் கேள்வி ஆகும்.

பலமுறை இந்தக் கேள்வியைக் கேட்பதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்துள்ளது. ஒவ்வொரு முறையும் இந்தக் கேள்வியைக் கேட்கும்போதும் நான் வியப்படைந்து விடுவேன். மனிதன் வெவ்வேறு பொருட்களை வெவ்வேறு உணர்வுகளின் மூலமாக உணர்கிறான். சில பொருட்களைப் பார்த்து, சில பொருட்களைத் தொட்டு, சில பொருட்களை நுகர்ந்து, சில பொருட்களைக் கேட்டு, சில பொருட்களைச் சுவைத்தும் அவன் அறிந்து கொள்கின்றான். நிறத்தைப் பார்ப்பதன் மூலம்தான் அடையாளம் காண முடியும். வாசனை மூலமாகவோ, தொட்டுப் பார்த்தோ அல்லது ருசித்துப் பார்த்தோ அல்ல. பிறகு எவரேனும் ஒருவர் நிறத்தை அதன் ஓசை கேட்ட பிறகுதான் நம்புவேன் என்று கூறினால் அந்த நபர் முட்டாளா? இல்லையா? இதைப் போன்று ஓசையைக் காதினால் கேட்க வேண்டும். ஆனால் இன்ன நபரின் ஓசையைப் பார்த்தால்தான் அவர் பேசுகிறார் என்று நான் நம்புவேன் என்று யாராவது கூறினால் அவர் அறிவற்றவரா? இல்லையா? அதே போன்று நறுமணத்தை வாசனையின் மூலமாகவே அறிய முடியும். ஆனால் யாராவது ஒருவன் ரோஜா பூவின் நறுமணத்தை ருசித்துப் பார்த்தால்தான் நம்புவேன் என்று கூறினால் அந்த நபரை அறிவாளி என்று கூற முடியுமா? இதற்கு மாற்றமாக சுவைத்து அறியக் கூடிய பொருட்களான காரம், இனிப்பு, கசப்பு, உவர்ப்பு ஆகியவற்றை வாசனையின் மூலமாகவே கண்டுபிடிக்க முயன்றால் ஒருபோதும் அது நடக்காத காரியமாகும். ஆகவே கண்களுக்கு தென்படுகின்றன பொருட்களின் மீது மட்டும் நம்பிக்கை வைக்க வேண்டும் என்றும் கண்களுக்கு தென்படாத பொருட்களின் மீது நம்பிக்கை வைக்க வேண்டாம் என்றெல்லாம் கட்டாயமில்லை. அவ்வாறெனில், ரோஜாப்பூவின் நறுமணம், எலுமிச்சையின் புளிப்பு, தேனின் இனிப்பு, கற்றாழையின் கசப்பு ஆகியவற்றை நிராகரிக்க வேண்டியது வரும். ஏனென்றால் இவ்வனைத்தும் தென்படாத பொருட்களாகும். மாறாக நுகர்ந்து பார்த்தும் ருசித்துப் பார்த்தும் தொட்டுப் பார்த்தும் கேட்பதில் மூலமாகவும் தெரிய வருகின்றது. ஆகவே இறைவனை எங்களுக்கு காண்பித்தால் நாங்கள் நம்புவோம் என்ற ஆட்சேபனை எவ்வளவு தவறானதாகும். அவ்வாறு ஆட்சேபனை செய்கின்றவர் ரோஜாப்பூவின் நறுமணத்தைப் பார்த்து நம்புகிறாரா? அல்லது தேனின் இனிப்பைப் பார்த்து நம்புகிறாரா? அவ்வாறிருப்பின் இறைஇருப்பு தொடர்பாக மட்டும் கண்களுக்கு தென்பட்டால் மட்டும்தான் நம்பிக்கை கொள்வோம் என்ற நிபந்தனை ஏன் வைக்கப்படுகின்றது?

அதுமட்டுமல்லாமல் மனித உடலில் ஒரு சில பொருட்கள் இருக்கின்றன. அவைகளை பார்க்காமலேயே நம்புகின்றனர். நம்ப வேண்டியதாக உள்ளது. மனிதன் தமது இதயம், கல்லீரல், மூளை, குடல், நுரையீரல் மற்றும் சிறுநீர்ப்பை ஆகியவற்றைப் பார்த்ததற்குப் பிறகுதான் நம்புகிறாதா? அல்லது பார்க்காமல் நம்புகிறானா? இந்தப் பொருட்களைக் காண்பிக்க வெளியில் எடுக்கப்பட்டால் மனிதன் அப்போதே மரணமடைந்து விடுவான். அவைகளை பார்க்கக் கூடிய வாய்ப்பே இருக்காது.

எல்லாப் பொருட்களையும் பார்வையினால் மட்டும் தெரிந்து கொள்ள முடியாது. மாறாக, ஐந்து வெவ்வேறு உணர்வுகளால்தான் தெரிந்து கொள்ள முடியும் என்று கூறுவதற்காகத்தான் இந்த உதாரணங்களைக் கூறியுள்ளேன். இப்போது நான் கூறுவது என்னவென்றால், இந்த ஐந்து உணர்வுகளைக் கொண்டும் அறிய முடியாத விஷயங்களும் இருக்கின்றன. அவைகளைத் தெரிந்து கொள்வதற்கான வழிமுறை முற்றிலும் மாறுபட்டதாகும். உதாரணமாக புத்தி அல்லது ஞாபக சக்தி, நினைவாற்றல் போன்றவற்றை உலகத்தில் யாருமே மறுப்பதில்லை. ஆனால் யாராவது புத்தியைப் பார்த்திருக்கின்றாரா? அல்லது கேட்டிருக்கின்றாரா? அல்லது சுவைத்திருக்கின்றாரா? அல்லது நுகர்ந்திருக்கின்றாரா? அல்லது தொட்டுப் பார்த்திருக்கின்றாரா? பிறகு புத்தி இருக்கின்றது என்று எவ்வாறு தெரிய வந்தது? அல்லது ஞாபக சக்தி இருக்கின்றது என்று எவ்வாறு தெரிய வந்தது? ஒவ்வொரு மனிதனுக்குள்ளே இருக்கின்ற சக்தியை எடுத்துப் பாருங்கள். சிலரது சக்தி அதிகமாக இருக்கின்றது. சிலரிடம் குறைவாக இருக்கின்றது. ஆனால் கண்டிப்பாக ஒவ்வொருவருக்கு உள்ளேயும் சக்தி இருக்கின்றது. ஆனால் இன்று வரை யாராவது சக்தியைப் பார்த்திருக்கின்றாரா? அல்லது கேட்டிருக்கின்றாரா? அல்லது தொட்டிருக்கின்றாரா? அல்லது சுவைத்திருக்கின்றாரா? பிறகு சக்தி இருக்கின்றது என்று எவ்வாறு தெரிய வந்தது? இப்படிப்பட்ட விஷயங்களை நமது ஐம்புலன்களால் அறிந்து கொள்ள முடியாது என்றும் அவைகள் ஏற்படுத்துகின்ற தாக்கங்களின் மூலமாக நாம் இவைகளை அடையாளம் காண்கிறோம் என்பது அறிவற்ற மக்களுக்கும் கூட தெரிய விஷயமாகும். உதாரணமாக, மனிதன் பல்வேறு கஷ்டங்களால் சூழ்ந்திருக்கின்ற நேரத்தில் சற்று நேரம் யோசிக்கும்போது ஏதாவது யோசனை உள்ளத்தில் உருவாகின்றது. அந்த யோசனையால் அவன் தமது கஷ்டத்தை நீக்கி விடுகின்றான் என்பதை நாம் பார்த்திருக்கின்றோம். ஆக இவ்வாறு நீங்குவதை நாம் பார்க்கும்போது, இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் உதவக் கூடிய ஏதோவொரு பொருள் மனிதனுக்குள் இருக்கின்றது என்று நமக்கு உறுதியாகி விடுகின்றது. அந்தப் பொருளை நாம் புத்தி என்று அழைக்கின்றோம். ஆக புத்தியை நாம் நமது ஐம்புலங்களின் மூலமாக ஆராய்ந்து பார்க்கவில்லை. அந்நாள்

அதன் தந்திரங்களால் நமக்கு அதை குறித்து அறிந்து கொள்கின்றோம். அதே போன்று மனிதன் பெரும் பெரும் சுமையைத் தூக்கும்போது அவனுக்குள் சுமையைத் தூக்குவதற்கும் தம்மை விட பலவீனமான கட்டுப்படுத்த உதவி செய்யக் கூடிய ஏதேவொரு திறமை இருக்கின்றது என்று நமக்கு தெரிய வருகின்றது. அதனை நாம் சக்தி என்று அழைக்கின்றோம்.

இவ்வாறு எந்த அளவிற்கு நுட்பத்திலும் நுட்பமான பொருட்களை எடுத்துப் பார்ப்பீர்களோ அந்த அளவிற்கு அவைகள் மனிதனுடைய கண்களிலிருந்து மறைந்தே இருக்கும். அவைகளை பார்த்தோ நுகர்ந்தோ சுவைத்தோ அல்லது தொடுவதினாலோ நாம் அறிந்து கொள்வதில்லை. மாறாக அவைகள் ஏற்படுத்துகின்ற தாக்கங்களின் மூலமாகவே நாம் அவைகளை அறிந்து கொள்கின்றோம்.

ஆக அல்லாஹ் நுட்பத்திலும் நுட்பமானவன் ஆவான். அவனை குறித்த அறிவைப் பெறுவதற்காக அவன் கண்களுக்கு தென்பட்டால்தான் நம்பிக்கை கொள்வோம் என்ற வரையறையை வைப்பது எவ்வாறு முறையான காரியமாகும். யாராவது எங்கேயாவது மின்சாரத்தைப் பார்த்திருக்கின்றாரா? அவ்வாறிருப்பின் மின்சாரத்தின் உதவியால் இயங்குகின்ற தந்தியின் மூலம் பெறப்படும் செய்திகள் அல்லது மின்சாரத்தின் உதவியால் செயல்படுகின்ற இயந்திரங்கள் அல்லது வெளிச்சமாகுதல் ஆகியவற்றை நிராகரிக்க முடியுமா? ஈத்தரின் ஆராய்ச்சி அறிவியல் உலகத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தி இருக்கின்றது. ஆனால் இதுவரையிலும் விஞ்ஞானிகள் அதை பார்க்கவோ கேட்கவோ நுகர்ந்து பார்க்கவோ தொட்டுப் பார்க்கவோ ருசித்துப் பார்ப்பதற்கோ ஏதேனும் வழிமுறையைக் கண்டுபிடித்திருக்கின்றார்களா? ஆனால் அதன் இருப்பை ஏற்கவில்லை என்றால் சூரிய ஒளி பூமி வரை எவ்வாறு வந்தடையும்? என்பதற்கான விடையே கிடைக்காது. ஆக இவ்வாறெல்லாம் சான்றுகள் இருந்தும் கூட இறைவனை காண்பித்தால்தான் நாங்கள் நம்புவோம் என்று கூறுவது எவ்வளவு முறையற்ற விஷயமாகும்? இறைவன் தென்படுகிறான். ஆனால் அவனைப் பார்க்க தகுதியுடைய கண்களுக்கு மட்டும் அவனை யாராவது பார்க்க விரும்பினால் அவன் தமது வல்லமையினாலும் ஆற்றலினாலும் உலகின் முன்னால் வெளிப்படுகிறான். அவன் மறைந்திருந்தும் எல்லாவற்றையும் விட அதிகமாக வெளிப்படுகிறான். திருக்குர்ஆனில் இந்த விஷயத்தை மிகவும் சுருக்கமாக ஆனால் அற்புதமான முறையில் அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

لَا تُدْرِكُهُ الْاَبْصَارُ ۡ وَهُوَ يُدْرِكُ الْاَبْصَارَ ۚ وَهُوَ اللَّطِيْفُ الْخَبِيْرُ அதாவது இறைவன் எப்படிப்பட்டவன் என்றால் பார்வைகளால் அவனை அடையாது முடியாது. ஆனால் அவன் பார்வைகளை அடைகின்றான். அவன் நுட்பமானவனும் அனைத்தையும் அறிந்தவனுமாவான். **(6:104)**

இந்த வசனத்தில் மனிதனின் கண்கள் இறைவனை பார்க்கும் அளவிற்கு தகுதி பெற்றதல்ல என்பதன் பக்கம் அல்லாஹ் மனிதனுக்கு கவனமூட்டுகிறான். ஏனென்றால் அவன் நுட்பமானவன் ஆவான். நுட்பமான பொருள்கள் தென்படுவதில்லை. உதாரணமாக ஆற்றல், புத்தி, ஆன்மா, மின்சாரம், ஈதர் ஆகிய இந்தப் பொருட்கள் ஒருபோதும் எவருக்குமே தென்படாது. அவ்வாறிருப்பினும் மிகவும் நுட்பமான இறைவனை மனித பார்வையினால் எவ்வாறு அடைய முடியும்? பின்னர் இறைவனை மக்கள் எவ்வாறு பார்க்கலாம்? இறை ஞானம் பெறுவதற்கான வழிமுறைகள் என்ன? இதற்குப் பதில் وَهُوَ يُدْرِكُ الْاَبْصَارَ என்று கூறியுள்ளான். அதாவது அவன் தன்னை சுயமாக பார்வைகளை அடைகின்றான். மனிதனின் பார்வை பலவீனமாக இருந்தும் இறைவன் தன்னுடைய ஆற்றலினால் சக்தியினால் தமது முழுமையான பண்புகளை வெளிப்படுத்துவதன் மூலமாகவும் தமது இருப்பை மனிதனுக்கு வெளிக்காட்டுகிறான். மனிதனின் கண்களுக்கு அவனை பார்க்கக் கூடிய ஆற்றல் இல்லாதிருந்தும் இறைவன் தனது எல்லையில்லா ஆற்றலினாலும் சக்தியினாலும் பல்வேறு கோணங்களில் தன்னை வெளிக்காட்டுகிறான். சில நேரங்களில் கோபத்தின் அடையாளங்களாலும் சில நேரங்களில் இறை தூதர்களின் மூலமாகவும் சில நேரங்களில் பிரார்த்தனைகளை ஏற்றுக் கொள்வதன் மூலமாகவும் அவன் தன்னை வெளிக் காட்டுகிறான்.

அல்லாஹ்வை நேருக்கு நேர் பார்க்காத வரை அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ளமாட்டோம் என்ற விஷயத்துடன் சார்ந்திருந்தால், எந்தவொரு பொருளையும் நேருக்கு நேர் பார்க்காத வரை நம்பாமல் இருந்தால் உலகத்திலுள்ள பெரும்பாலான பொருட்களையும் நிராகரிக்க வேண்டியது வரும். சில தத்துவ ஞானிகள் எந்த அளவுக்கு கூறியிருக்கின்றார்கள் என்றால் உலகில் உள்ள எந்தவொரு பொருளும் தென்படுவதில்லை. மாறாக பண்புகள் மட்டும்தான் தென்படுகின்றன. இப்போது நான் இறை இருப்பை நிரூபிக்கின்ற ஆதாரங்களின் பக்கம் கவனம் செலுத்துகிறேன். இவைகளால் எனது படைப்பாளன் நான் இல்லை என்றும் மாறாக நான் படைக்கப்பட்டுள்ளேன் என்றும் தெரிய வருகிறது.

**முதல் ஆதாரம்**

திருக்குர்ஆனில் ஆன்மீக சிறப்பம்சங்களைப் பெறுவதற்கான அனைத்து வழிமுறையையும் குறிப்பிட்டிருக்கின்றது என்ற என்னுடைய கொள்கையின் அடிப்படையில் இறைஇருப்பின் அனைத்து ஆதாரங்களும் அல்லாஹ் நாடினால் திருக்குர்ஆனில் இருந்தே எடுத்து வைப்பேன்.

இந்த உலகத்திற்கு வந்த பிறகு காதுகளின் மூலமாகத்தான் மனிதனுக்கு முதன் முதலாக அறிவு கிடைக்கிறது. அதனால் முதலாவதாகக் கேட்கும் திறன் தொடர்பான ஆதாரத்தை எடுத்து வைக்கின்றேன்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறான்:

قَدْ اَفْلَحَ مَنْ تَزَكّٰى ○ وَذَكَرَ اسْمَ رَبِّهٖ فَصَلّٰى ○ بَلْ تُؤْثِرُوْنَ الْحَيٰوةَ الدُّنْيَا ○
وَالْاٰخِرَةُ خَيْرٌ وَّاَبْقٰى ○ اِنَّ هٰذَا لَفِى الصُّحُفِ الْاُوْلٰى ○ صُحُفِ اِبْرٰهِيْمَ وَمُوْسٰى ○

அதாவது தன்னைத் தூய்மைப்படுத்தி தனது கூற்றினால் இறைவனை ஒப்புக் கொண்டவன் வெற்றி பெறுகிறான். மேலும் அவன் கூற்றினால் மட்டுமல்ல. மாறாக தமது செயல்களாகிய இறை வணக்கங்களின் மூலமாகவும் அவர் தமது கூற்றிற்கு ஆதாரங்களைத் தருகிறான். ஆனால் நீங்கள் இவ்வுலக வாழ்க்கைக்கே முதன்மை கொடுக்கின்றீர்கள். அதே வேளையில் மறுமையோ மிகச் சிறந்ததும் நிலையானதுமாகும். **(87:15–20)** இவ்விஷயத்தை திருக்குர்ஆன் மட்டும் கூறவில்லை. மாறாக முன்னுள்ள வேதங்களிலும் இந்த வாதம் உள்ளது. ஆக ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) மற்றும் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களும் உலகின் முன் வைத்த போதனைகளில் இந்த விஷயம் உள்ளது.

இந்த வசனத்தின் மூலமாக அல்லாஹ் திருக்குர்ஆனை நிராகரிக்கின்றவர்களுக்கு எதிராக ஓர் ஆதாரத்தை எடுத்து வைக்கின்றான். அதாவது, தமது ஆன்மாவின் ஆசைகளிலிருந்து தவிர்ந்திருக்கின்றவர்களும் இறை இருப்பின் மீது நம்பிக்கை வைக்கின்றவர்களும் அவனுக்கு உண்மையான முறையில் கட்டுப்பட்டு நடக்கின்றவர்களும் எப்போதும் வெற்றி பெறுவார். முன்னுள்ள மார்க்கங்களிலும் இந்த விஷயம் பொதுவானதாக உள்ளது என்பது இந்தப் போதனைக்கு சான்றாக உள்ளது. ஆக அந்தக் காலத்தில் இருந்த முக்கியமான மார்க்கங்களான கிறிஸ்தவம், யூத மதம் மக்காவின் நிராகரிப்பாளர்கள் ஆகியவர்களுக்கு அத்தாட்சியை முழுமைப்படுத்துவதற்காக ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடைய உதாரணத்தை எடுத்துக் கூறுகிறான். இவர்களின் மீது நீங்கள் நம்பிக்கை வைத்திருக்கின்றீர்கள். இவர்களும் மேலே கூறி

போதனைகளைத்தான் வழங்கி இருக்கின்றார்கள். ஆக அனைத்து மார்க்கங்களும் ஒற்றுமையுடன் ஒப்புக் கொள்கின்ற, அனைத்து சமுதாயங்களிலும் பொதுவாக உள்ள ஒரு கருத்தை திருக்குர்ஆன் இறை இருப்பிற்கான மிகப்பெரிய சான்றாக எடுத்துக் வைக்கின்றது. எந்த அளவுக்கு இந்த சான்றைக் குறித்து யோசனை செய்யப்படு –கின்றதோ அந்த அளவுக்கு இது தெளிவாகவும் உண்மையானதாகவும் தெரிய வரும். உண்மை என்னவென்றால் உலகத்திலுள்ள அனைத்து மார்க்கங்களும் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்த ஒருவன் இருக்கின்றான் என்ற விஷயத்தில் ஒற்றுமையுடன் இருக்கின்றன. நாடுகள் பலதாக இருக்கின்ற காரணத்தினாலும் சூழ்நிலைகள் மாற்றமாக இருக்கின்ற காரணத்தாலும் சிந்தனைகளிலும் கொள்கைகளிலும் வேறுபாடுகள் இருக்கலாம். அவ்வாறிருந்தும் வரலாற்றின் அனைத்து மதங்களும் இறை இருப்பு தொடர்பாக ஒற்றுமையுடன் இருக்கின்றன. இறை பண்புகள் தொடர்பாக ஒரு சில கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் இக்காலத்தின் மார்க்கங்கள் அதாவது இஸ்லாம், கிறித்தவம், யூத மதம், புத்த மதம், சீக்கிய மதம், இந்து மதம், ஸுர்திஷி மதம் இவ்வனைத்தும் எலுஹீம், பரமேஷ்வர், பரம் ஆன்மா, சத்குரு அல்லது யச்தான் என்ற பல்வேறு பெயர்களில் அழைத்தாலும் ஏக இறைக் கொள்கையில் உள்ளன. இது மட்டுமல்லாமல் உலகத்திலிருந்து அழிந்துவிட்ட மார்க்கங்களும் ஏக இறைக் கொள்கையை வைத்திருந்ததாக தொல்லியல் ஆய்விலிருந்து தெரிய வருகிறது. அது அமெரிக்காவின் தொலை தூரத்திலுள்ள நாடுகளில் உருவானதானாலும் சரி அல்லது ஆப்பிரிக்காவின் காடுகளிலானாலும் சரி, ரோமாவிலானாலும் சரி, இங்கிலாந்திலானாலும் சரி, ஜாவா சுமத்திராவிலானாலும் சரி, ஜப்பானிலானாலும் சரி, சீனாவிலானாலும் சரி, சைபீரியா மன்சூரியாவிலானாலும் சரி மார்க்கங்களில் இந்த ஒற்றுமை ஏன் இருக்கின்றது? அமெரிக்காவில் வசிக்கின்றவர்களுக்கு இந்தியாவின் கொள்கைகளைக் குறித்தும் சீனாவில் வசிக்கின்றவர்களுக்கு ஆப்பிரிக்காவைச் சார்ந்தவர்களின் கொள்கைகளைக் குறித்தும் தகவல் கொடுத்தது யார்? இக்காலத்திலுள் இரயில், தந்தி, தபால் ஆகியவற்றின் ஏற்பாடு அக்காலத்தில் இல்லை. இக்காலத்தை போன்று கப்பல்களின் போக்குவரத்து அதிகமாக இருக்கவில்லை. மாறாக குதிரைகள் மற்றும் கோவேறு கழுதைகளின் சவாரிகள் இருந்தன. இன்றைய காலத்தில் ஒரு சில நாட்களில் செய்யக்கூடிய பயணம் பல மாதங்களில் செய்கின்ற பாய்மரப் படகுகளும் அன்றைய காலத்தில் இருந்தன. மேலும் பல பகுதிகள் அந்த நாட்களில் கண்டுபிடிக்கப்படவில்லை. அவ்வாறிருப்பின் ஒருவருக்கொருவர் அறியாதவராக இருந்த, வெவ்வேறான நாகரித்தன்மையுடனும் வெவ்வேறான சடங்கு சம்பிரதாயங்களுடன் இருந்த சமுதாயங்கள் எவ்வாறு இந்த ஒரு கொள்கையில் ஒற்றுமையுடன் இருந்தது. தேவையற்ற அற்பமான விஷயங்களில் கூட இரண்டு நபர்களுக்குள் ஒற்றுமை ஏற்படுவது சிரமமான விஷயமாகும். அவ்வாறிருப்பினும் தொடர்புக்கும் இணைப்பிற்கும் எந்தவொரு வழிமுறையும் இல்லாத சமுதாயங்களுள் இந்த விஷயத்தில் ஒற்றுமை இருக்கின்றது என்பது இதன் உண்மைத்துவத்திற்கு ஒரு சான்றல்லவா? மேலும் இஸ்லாம் கூறும் விஷயம் ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒவ்வொரு நாடுகளிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு சமுதாயங்கள் ஒற்றுமையுடன் இருக்கின்ற ஒரு கொள்கையின் உண்மைத்துவத்தைக் குறித்து சந்தேகப்படுவதற்கு இடமில்லை என்று வரலாற்று நிபுணர்கள் ஒற்றுமையுடன் கூறுகின்றனர். ஆக இந்த விஷயத்தில் ஆயிரக் –கணக்கான இலட்சக்கணக்கான சமுதாயங்கள் ஒற்றுமையுடன் இருக்கின்றது என்றால் அவர்கள் அனைவரும் ஓர் ஒளியைப் பார்த்து அவர்கள் இந்த விஷயத்தில் உறுதியடைந்துள்ளனர் என்று ஏன் நம்பக் கூடாது?

### இரண்டாவது ஆதாரம்

இறை இருப்பிற்கான ஆதாரமாக திருக்குர்ஆன் தரும் இரண்டாவது ஆதாரம் இந்த வசனங்களில் தெரிய வருகிறது.

تِلْكَ حُجَّتُنَآ اٰتَيْنٰهَآ اِبْرٰهِيْمَ عَلٰى قَوْمِهٖ ؕ نَرْفَعُ دَرَجٰتٍ مَّنْ نَّشَآءُ ؕ اِنَّ رَبَّكَ حَكِيْمٌ عَلِيْمٌ ○ وَوَهَبْنَا لَهٗۤ اِسْحٰقَ وَيَعْقُوْبَ ؕ كُلًّا هَدَيْنَا ۚ وَنُوْحًا هَدَيْنَا مِنْ قَبْلُ وَمِنْ ذُرِّيَّتِهٖ دَاوٗدَ وَسُلَيْمٰنَ وَاَيُّوْبَ وَيُوْسُفَ وَمُوْسٰى وَهٰرُوْنَ ؕ وَكَذٰلِكَ نَجْزِى الْمُحْسِنِيْنَ ○ وَزَكَرِيَّا وَيَحْيٰى وَعِيْسٰى وَاِلْيَاسَ ؕ كُلٌّ مِّنَ الصّٰلِحِيْنَ ○ وَاِسْمٰعِيْلَ وَالْيَسَعَ وَيُوْنُسَ وَلُوْطًا ؕ وَكُلًّا فَضَّلْنَا عَلَى الْعٰلَمِيْنَ ○

அதாவது, தம் மக்களுக்கு எதிராக எடுத்துக் காட்டுவதற்கு ஓர் ஆதாரத்தை நாம் இப்ராஹீமுக்கும் வழங்கினோம். நாம் விரும்பியவர்களுக்கு பதவிகளை உயர்த்துகின்றோம். நிச்சயமாக உம்முடைய இறைவன் நுட்பமான ஞானமுள்ளவனும் நன்கு அறிபவனுமாவான்.

நாம் அவருக்கு இஸ்ஹாக்கையும் யஃகூபையும் வழங்கினோம். இவ்வனைவருக்கும் நாம் நேர்வழியை வழங்கினோம். இதற்கு முன்னர் நாம் நூஹுக்கும் நேர்வழியினை வழங்கியுள்ளோம்.

மேலும் அவருடைய வழித்தோன்றல்களுள் தாவூது, சுலைமான், அய்யூப், யூஸுஃப், மூஸா, ஹாரூன் ஆகியவர்களுக்கும் இவ்வாறே நாம் நன்மை செய்கின்றவர்களுடன் நடந்து கொள்கின்றோம். மேலும் ஸக்கரியா, யஹ்யா, ஈஸா, இல்யாஸ் ஆகியோருக்கும் நாம் நேர்வழியைக் காட்டியுள்ளோம். இவ்வனைவரும் நல்லவர்களைச் சார்ந்தவர்களாக விளங்கினர்.

மேலும் இஸ்மாயீல், அல் யஸஃ, யூனுஸ், லூத் ஆகியோருக்கும் நேர்வழியினைக் காட்டினோம். இவர்களுக்கெல்லாம் அந்தந்த காலத்தில் இருந்த மக்களின் மீது மேன்மையை வழங்கினோம். **(6:84–87)**

மேலும் சில வசனங்களுக்குப் பிறகு கூறுகிறான்:

اُولٰٓئِكَ الَّذِيْنَ هَدَى اللّٰهُ فَبِهُدٰىهُمُ اقْتَدِهْ மேலும் கூறுகிறான்: இவ்வனைவரும் இறைவன் நேர்வழி காட்டப்பட்ட மக்களாகும். ஆகவே நீர் இவர்களின் நேர்வழியைப் பின்பற்றுவீராக. **(6:91)**

இந்த வசனங்களில் அல்லாஹ் கூறுவது என்னவென்றால் இத்தனை நற்பெயர் பெற்ற தூய மக்கள் சாட்சி கூறுகின்ற விஷயத்தை ஒப்புக் கொள்ளவா அல்லது அறிவில்லாத தமது நிலைபாட்டினால் மேற்கூறிய மக்களை எதிர்க்க இயலாதவர்கள் கூறுகின்ற விஷயத்தை ஒப்புக் கொள்ளவா? நிச்சயமாக தமது அசைவுகள் மற்றும் தமது செயல்கள் மூலம் உலகிற்கு முன்னால் தமது நன்மை, தூய்மை, தீமைகளிலிருந்தும், பொய்யிலிருந்தும் தவிர்ந்திருத்தல் ஆகியவற்றை நிரூபித்தவர்கள் கூறுகின்ற விஷயங்கள்தான் நம்பத் தகுந்ததாகும். ஆக இப்படிப்பட்டவர்களை பின்பற்றுவதும் அவர்களுக்கு எதிராகக் கூறப்படுகின்ற விஷயங்களை நிராகரிப்பதும் ஒவ்வொருவரின் கடமையாகும். ஆக எந்த அளவிற்கு நன்மையையும் நல்லொழுக்கத்தையும் பரப்புகின்ற –வர்களும் உலகத்தில் தமது உண்மைத்துவத்தை நிரூபித்த மக்கள் அனைவரும் வெவ்வேறு மொழிகளில் அல்லாஹ், God அல்லது பரமேஷ்வரன் என்று கூறுப்படுகின்ற ஓர் இருப்பைக் குறித்து சாட்சி கூறுகிறார்கள். இந்தியாவின் தீர்க்கதரிசிகளான ராம்சந்தர், கிருஷ்ணர், ஈரானின் தீர்க்கதரிசியான ஸுர்தஷ், எகிப்தின் தீர்க்கதரிசி மூஸா, நாசிராவின் தீர்க்கதரிசி மஸீஹ், பஞ்சாபின் தீர்க்கதரிசி நானக் மற்றும் அனைத்து தீர்க்கதரிசிகளின் கிரீடம் அரபின் ஒளியுமான முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள், அவரைப் பார்த்து அவர்களின் சமுதாயம் குழந்தைப் பருவத்திலேயே உண்மையாளர் என்ற பட்டத்தைச் சூட்டியுள்ளது.

மேலும் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: فَقَدْ لَبِثْتُ فِيْكُمْ عُمُرًا நான் இதற்கு முன்னர் உங்களிடையே ஒரு நீண்ட வாழ்நாளைக் கழித்திருக்கின்றேன். (10:17) எனது ஏதாவது பொய்யை நீங்கள் நிரூபிக்க முடியுமா? என்று கூறுகின்ற தமது சமுதாயம் மூலமாக எந்த ஓர் ஆட்சேபனையும் செய்யப்படாத முஹம்மது (ஸல்) அவர்களும் மேலும் இந்த உலகத்தில் வெவ்வேறு காலங்களில் தோன்றியுள்ள ஆயிரக்கணக்கான தீர்க்கதரிசிகளும் ஒரு நாவால் ஓர் இறைவன் இருக்கின்றான் என்று கூறுவது மட்டுமல்ல..... நாங்கள் அவனை

பார்த்திருக்கின்றோம் என்றும் அவனிடம் உரையாடி இருக்கின்றோம் என்றும் உறுதி அளித்துள்ளார்கள். இப்படிப்பட்டவர்கள் ஒருவர் செய்த நற்செயல்களில் ஆயிரத்தில் ஒரு பகுதி கூட செய்யாதவர்களாக பெரும் பெரும் தத்துவஞானிகள் என்று அழைக்கப்படுகின்றவர் உள்ளனர். மாறாக இவர்களுடைய வாழ்க்கையையும் தத்துவ ஞானிகளின் வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தத்துவஞானிகளின் வாழ்க்கையில் செயல்கள் மிகவும் குறைவாகவும் கூற்றுகள் மிகவும் அதிகமாகவும் இருக்கின்றன. இவர்கள் முன் வைத்த விசுவாசமும் நேர்மையும் தத்துவஞானிகள் எங்கே செய்திருக்கின்றனர்? அவர்கள் மக்களுக்கு நேர்மையைப் போதிக்கின்றனர். ஆனால் அவர்களோ பொய்யிலிருந்து விலகி இருப்பதில்லை. ஆனால் நான் எடுத்துக் கூறிய அந்த நபர்கள் உண்மைக்காக ஆயிரக்கணக்கான சிரமங்களை மேற்கொண்டனர். ஆனால் ஒருபோதும் அவர்கள் தமது நிலைபாட்டை மாற்றிக் கொள்ளவில்லை. அவர்கள் தமது ஊர்களிலிருந்து வெளியேற்றப் –பட்டார்கள். அவர்களை தெருக்களிலும் கடைவீதிகளிலும் இழிவுபடுத்த முயற்சி செய்யப்பட்டது. மக்கள் அவர்களை முற்றிலும் புறக்கணித்து விட்டனர். ஆனால் அவர்கள் ஒருபோதும் தமது கொள்கையை விட்டுவிடவில்லை. ஒருபோதும் மக்களுக்காக பொய் கூறிக் கொண்டு தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவில்லை. அவர்களின் செயல் அவர்களின் உலகத்தின் மீதான வெறுப்பு, பகட்டிலிருந்து விலகி இருத்தல் போன்ற பழக்கங்கள் அவர்களுக்கு எந்தவித உலக நோக்கங்களும் இல்லை என்றும் தமது சுயநலத்திற்காக அவர்கள் எந்தச் செயலும் செய்யவில்லை என்றும் நிரூபிக்கின்றது. ஆக, இப்படிப்பட்ட உண்மையாளர்களும் நம்பத்தகுந்தவர்களும் ஒரு நாவாக நாங்கள் இறைவனை பார்த்திருக்கின்றோம் என்றும் அவனுடைய தோற்றத்தைப் பார்த்திருக்கின்றோம்; அவனின் ஒலியைக் கேட்டிருக்கின்றோம் என்றும் கூறும்போது அதை நிராகரிப்பதற்கு ஏதாவது காரணம் எவரிடமாவது இருக்கின்றதா? தினமும் பொய் கூறக்கூடிய ஒரு சிலர் ஒன்று சேர்ந்து ஒரு விஷயத்தைக் குறித்து சாட்சி கூறினால் அதை நாம் நம்ப வேண்டியதாக இருக்கின்றது. அதே போன்று நமக்கு முற்றிலும் தெரியாதவர்கள் தமது ஆராய்ச்சிகளை பத்திரிகைகளில் வெளியிடும் போது நாம் அதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் இந்த உண்மையாளர்களுடைய கூற்றுக்களை நம்புவதில்லை. உலகம் இலண்டன் என்ற ஒரு நகரம் இருக்கின்றது என்று கூறுகின்றது. நாம் அதை நம்புகிறோம். புவியியல் நிபுணர்கள் அமெரிக்கா என்ற ஒரு கண்டம் இருக்கின்றது என்று கூறுகின்றனர். நாம் அதையும் நம்புகிறோம். அதே போன்று சைபீரியா என்ற ஒரு பரந்த பகுதி இருக்கின்றது என்றும், மனிதர்கள் வாழாக இடமாக இருக்கின்றது என்றும் பயணிகள் கூறுகின்றனர். நாம் அதையும் நம்புகிறோம். ஏன்? ஏனென்றால் பல்வேறு மக்கள் அதன் மீது சாட்சி கூறியிருக்கின்றனர். ஆனால் காட்சிகளைக் குறித்து நமக்கு எதுவுமே தெரியாது. அவர்கள் பொய்யர்களா? அல்லது உண்மையாளர்களா? என்றும் நமக்கு தெரியாது. ஆனால் அல்லாஹ்வை குறித்து கண் கண்ட சாட்சி கூறியிருக்கின்றவரின் உண்மைத்துவம் பகல் போன்று தெளிவான –தாகும். அவர்கள் தமது செல்வம், உயிர், நாடு, கண்ணியம், கௌரவம் ஆகியவற்றை இழந்து நேர்மையை இந்த உலகத்தில் நிலை நாட்டினார்கள். ஆக மேற்குறிப்பிட் புவியில் நிபுணர்களும் பயணிகளும் கூறுகின்ற விஷயங்களை ஒப்புக் கொண்டு இந்த உண்மையாளர்கள் கூறுகின்ற விஷயங்களை ஒப்புக் கொள்ளாமல் இருப்பது எவ்வாறு உண்மைத்தன்மையாக இருக்கும். ஒரு சிலர் கூறுவதைக் கேட்டு இலண்டன் இருக்கின்றது என்று நம்பலாம் என்றால் ஆயிரக்கணக்கான உண்மையாளர்களின் கூற்றை ஆதாரமாக வைத்து இறை இருப்பை ஏன் நிரூபிக்க முடியாது?

ஆக, இறை இருப்பைக் குறித்து ஆயிரக்கணக்கான உண்மையாளர்களின் கண்கண்ட சாட்சியத்தை எந்நிலையிலும் மறுக்க முடியாது. எவர்கள் இந்தக் கூடாரத்தில் உள்ளனரோ அவர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் இருக்கின்றனர் என்று கூறுகின்றனர். ஆனால் எவர்கள் ஆன்மீகக் கூடாரத்திற்கு வெளியே உள்ளனரோ அவர்கள் இறைவன் இருக்கிறான் என்று கூறுவதை நம்பக் கூடாது என்று கூறுவது மிகவும் ஆச்சரியத்திற்குரிய விஷயமாகும். சாட்சி கூறுவதன் விதிகளைப் பொருத்தவரையில் இரண்டு உண்மையாளர்கள் கூட ஒரு விஷயத்தைக் குறித்து சாட்சி கூறும்போது அதில் ஒருவர் ஒரு பொருளை நான் பார்த்தேன் என்றும் ஒருவர் அந்தப் பொருளை நான் பார்க்கவில்லை என்றும் கூறினால் நான் அந்தப் பொருளைப் பார்த்தேன் என்று கூறக்கூடியவர் உடைய சாட்சியத்திற்கு நான் அந்தப் பொருளைப் பார்க்கவில்லை என்று கூறுபவரின் சாட்சியத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்படும். ஏனென்றால் நான் அந்தப் பொருளைப் பார்க்கவில்லை என்று கூறுகின்றவருடைய பார்வை ஒருவேளை அந்தப் பொருளின் மீது படாமல் இருந்திருக்கலாம். நான் அந்தப் பொருளைப் பார்த்தேன் என்று கூறுகின்றவரின் பார்வை அந்தப் பொருளின் மீது படாமலேயே அதை நான் பார்த்தேன் என்று கூறுவதற்கு வாய்ப்பு இல்லை. ஆக இறைவனை பார்த்தேன் என்று கூறுகின்றவருடைய சாட்சியத்திற்கு அதை மறுக்கின்றவரை விட முக்கியத்துவம் இருக்கிறது.

**மூன்றாவது ஆதாரம்**

திருக்குர்ஆனிலிருந்து தெரிய வருகின்ற மூன்றாவது ஆதாரம் மனித இயல்பு ஆகும். மனித இயல்பு இறை இருப்பின் ஓர் ஆதாரம் ஆகும். ஏனென்றால் ஒரு சில பாவங்களை மனித இயல்பு முற்றிலும் வெறுக்கின்றது. (உதாரணமாக) தாய், மகள் போன்றவர்களுடன் விபச்சாரம், மனிதக் கழிவுகள் போன்ற பொருட்களுடன் தொடர்பு, பொய் ஆகிய விஷயங்கள் எப்படிப்பட்டவை என்றால் நாத்திகவாதிகள் கூட இவைகளிலிருந்து தவிர்ந்திருக்கின்றனர். ஆனால் ஏன்? இறைவன் இல்லை என்றால் அவர்கள் ஏன் தமது மற்றும் சகோதரிக்கும் பிற பெண்களுக்கும் இடையில் ஒரு வித்தியாசத்தை காண்பிக்கிறான். பொய்யை ஏன் வெறுக்கிறான்? ஒரு பெரிய சக்தியின் அச்சம் அவரின் உள்ளத்தில் இல்லை என்றால் மேற்கூறப்பட்ட விஷயங்களிலிருந்து ஏன் தவிர்ந்திருக்கின்றான்? அவன் பொய்யையும் உண்மையையும் அநீதியையும் நீதியையும் ஒன்றாகவே பார்க்க வேண்டும். அவன் என்ன விரும்புவானோ அதை செய்யலாமே. அவன் உள்ளத்தில் தமது அரியணையை வைத்தவாறு எந்த ஷரீஅத் அவன் உணர்வுகளின் மீது ஆட்சி செய்கின்றது. நாத்திகவாதி எவ்வளவு தான் நாவினால் இறைவன் ஆட்சியில் இருந்து விலகியிருந்தாலும் இறைவன் உருவாக்கிய இயல்பிலிருந்து அவனால் விலகி இருக்க முடியாது. மேலும் தீமைகளிலிருந்து விலகி இருப்பதும் அல்லது அதை வெளிப்படுத்துவதிலிருந்து தவிர்ந்திருப்பதும் ஏதோவொரு எஜமானருக்கு பதில் கூற வேண்டும் என்ற அச்சம் அவனுக்குள் இருப்பதை நிரூபிக்கின்றது. அந்த எஜமானனை அவன் நிராகரித்தாலும் சரியே. திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்:

لَآ أُقْسِمُ بِيَوْمِ الْقِيٰمَةِ ○ وَلَآ أُقْسِمُ بِالنَّفْسِ اللَّوَّامَةِ அதாவது மக்கள் இறைவன் மறுமை நாள் இல்லை என்றெல்லாம் கூறுகின்றனர். ஆனால் அவ்வாறு இல்லை. (75:2,3) மாறாக இந்த விஷயங்களுக்கு ஆதாரமாக இரண்டு விஷயங்களை முன் வைக்கலாம். ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒரு மறுமை நாள் இருக்கின்றது என்றும் அந்த நாளில் அதன் தீர்ப்பு முடிவடைகின்றது என்பது முதலாவதாகும். அந்த நாளில் நன்மைக்குப் பதிலாக நன்மையையும் தீமைக்குப் பதிலாக தீமையும் கிடைத்து விடும். இறைவன் இல்லை என்றால் எவ்வாறு நற்கூலியும் தண்டனையும் கிடைக்கிறது. மறுமை என்பது இந்த உலகத்திலேயே ஆரம்பித்து விடுகின்றது என்பது மறுமையை நிராகரிக்கின்ற மக்கள் தெரிந்து கொள்ளட்டும். விபச்சாரி சிபிலிஸ் வேட்டை நோய்களின் காரணத்தால் நோயாளியாகி விடுகின்றான். ஆனால் திருமணம் ஆனவர்களுக்கு அந்த நோய் வருவதில்லை. இரண்டு தரப்பினருமே ஒரே வேலையைச் செய்கின்றனர். இரண்டாவது அதாரம் நஃப்ஸே

லவ்வாமா ஆகும். அதாவது மனிதனின் உள்ளம் சுயமாக தீமைகளை வெறுக்கின்றது. நாத்திகவாதிகள் கூட விபச்சாரம், பொய், ஆணவம், பொறாமை ஆகியவற்றை நல்ல பண்புகள் அல்ல என்று நம்புகின்றனர். ஆனால் ஏன்? அவர்களிடம் எந்த ஷரீஅத்தும் இல்லையே. அவர்களுடைய உள்ளம் அதை வெறுக்கின்றது. உள்ளம் ஏன் வெறுக்கின்றது என்றால் ஓர் உச்ச சக்தியின் சார்பாக இந்த தீமைகளுக்கு தண்டனை கிடைத்து விடும் என்ற அச்சம் உள்ளத்தில் இருக்கின்றது. நாவினால் அதை கூறவில்லை என்றாலும் சரியே.

இதற்கு ஆதரவாக மற்றோரிடத்தில் திருக்குர்ஆனில் இவ்வாறு வருகிறது. அல்லாஹ் ஒவ்வோர் ஆன்மாவிலும் நன்மை எது? தீமை எது? என்று இல்ஹாம் இறக்கி இருக்கின்றான். ஆக நன்மை தீமை குறித்துள்ள பகுத்தறிவு இறை இருப்பிற்கான வலுவான ஆதாரம் ஆகும். இறைவன் இல்லை என்றால் ஒரு விஷயத்தை நன்மை என்றும் இன்னொன்றை தீமை என்றும் குறிப்பிடுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. மாறாக உள்ளத்தில் தோன்றுவதையெல்லாம் மக்கள் செய்யலாம்.

**நான்காவது ஆதாரம்**

இறை இருப்பிற்கான நான்காவது ஆதாரம் திருக்குர்ஆனில் இருந்து தெரிய வருகிறது என்னவென்றால்,

وَاَنَّ اِلٰی رَبِّکَ الْمُنْتَھٰی ○ وَاَنَّہٗ ھُوَ اَضْحَکَ وَاَبْکٰی ○ وَاَنَّہٗ ھُوَ اَمَاتَ وَاَحْیَا ○
وَاَنَّہٗ خَلَقَ الزَّوْجَیْنِ الذَّکَرَ وَالْاُنْثٰی ○ مِنْ نُّطْفَۃٍ اِذَا تُمْنٰی ○

அதாவது எல்லாப் பொருளும் இறைவனிடமே முடிவடைகிறது என்ற ஞானத்தை ஒவ்வோர் இறை தூதருக்கும் வழங்கப்பட்டிருக் –கின்றது. அது மகிழ்ச்சியின் விஷயங்கள் ஆனாலும் சரி அல்லது துயரத்தின் விஷயங்கள் ஆனாலும் சரி அது இறைவன் தரப்பிலிருந்து தான் வருகிறது. மேலும் மரணமும் வாழ்வும் அவன் கையில்தான் இருக்கின்றது. மேலும் மிகவும் சிறிய பொருளிலிருந்து அவன் ஆண்களையும் பெண்களையும் படைத்தான். (53:43–47)

ஒவ்வொரு வேலைக்கும் அதை செய்பவன் நிச்சயமாக இருக்க வேண்டும் என்பதன் பக்கம் அல்லாஹ் இந்த வசனங்களில் கவனமூட்டுகிறான். இந்தப் பிரபஞ்சத்தைக் குறித்து சிந்தித்துப் பார்த்தால் ஒவ்வொரு பொருளும் இறைவனிடமே முடிவடைகின்றது என்றும் அவனது வழிகாட்டலின்படி அனைத்தும் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்றும் நீங்கள் வழிகாட்டப்படுவீர்கள்.

ஆகவே இறைவன் மனிதனை அவனின் ஆரம்பக் காலத்தைக் குறித்து கவனமூட்டியவாறு இவ்வாறு கூறுகிறான்: நீர் ஒரு விந்துத் துளியிலிருந்து படைக்கப்பட்டுள்ளாய். நீர் சற்று பின்னோக்கிச் செல்லச் செல்ல மேலும் சொற்பமாகிக் கொண்டே செல்கிறாய். பிறகு நீர் எவ்வாறு சுயமாக படைத்திருக்க முடியும். படைப்பாளி இல்லாமல் படைப்பினம் எவ்வாறு இருக்க முடியும்? மனிதன் தமது படைப்பாளி இல்லை என்றால் அவனது நிலையைக் குறித்து சிந்தித்துப் பார்க்கும் போது அவன் மிகவும் முக்கியத்துவமற்ற சிறிய நிலையிலிருந்து தற்போதுள்ள நிலைக்கு மாறியிருக்கின்றான். அவன் தற்போதுள்ள நிலையில் படைப்பாளி இல்லை என்றால் இதை விட பலவீனமான நிலையில் எவ்வாறு படைப்பாளி ஆக முடியும். ஆகவே அவனைப் படைத்தது வேறு ஒருவனாகும் என்றும் அவனுடைய சக்தி எல்லை இல்லா சக்தியாகும் என்றும் அவனுடைய வல்லமை எல்லையைத் தாண்டியதுமாகும். ஆக மனிதனின் படிப்படியான வளர்ச்சியைக் குறித்து ஆராய்ச்சி செய்து பார்க்கும்போது அதன் காரணிகள் நுட்பத்திலும் நுட்பமாக ஆகி விடுகிறது. இறுதியில் ஓரிடத்தில் அனைத்து உலகியல் அறிவுகளும் இதற்குப் பிறகு எங்களுக்கு எதுவும் தெரியாது என்று கூறி விடுகின்றது. அந்த இடம் அல்லாஹ்வின் கைகள் செயல்படும் இடமாகும். இங்கு ஒவ்வொரு விஞ்ஞானியும், وَاَنَّ اِلٰی رَبِّکَ الْمُنْتَھٰی ○ என்றும் ஒவ்வொரு பொருளுக்கும் ஓர் எல்லை இருக்கின்றது என்றும் இறுதியில் ஒரு சக்தி இருக்கின்றது என்றும் அந்தச் சக்தி நமது சிந்தனைக்கு அப்பாற்பட்டதாகும் என்றும் அது இறைவன் ஆகும் என்றும் கூற வேண்டியது வரும். இது படிப்பறிவற்றவர் கூட புரிந்து கொள்ளக்கூடிய மிகவும் எளிதான ஆதாரமாகும்.

ஒருவர் ஒரு காட்டுவாசியிடம் இறை இருப்பிற்கான என்ன ஆதாரம் உன்னிடம் இருக்கின்றது என்று கேட்டார். அதற்கு அவர் காட்டில் ஒட்டகச் சாணியைப் பார்த்தால் இந்த வழியில் ஒட்டகம் கடந்து சென்றிருக்கின்றது என்று நான் கூறுவேன். ஆக இந்த அளவிற்கு பெரிய படைப்பினங்களைப் பார்த்து இதற்கு இரு படைப்பாளி இருக்கின்றது என்று என்னால் கணிக்க முடியாதா? என்று பதில் கூறினார். உண்மையிலேயே இது ஓர் உண்மையான இயல்பிற்கு சாதகமான பதில் ஆகும். மேலும் இந்தப் படைப்பினங்கள் குறித்து மனிதன் கவனம் செலுத்தினால் இறுதியில் இவை அனைத்தையும் படைத்த இறைவன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டியது வரும்.

**ஐந்தாவது ஆதாரம்**

இறை இருப்பிற்கான ஐந்தாவது ஆதாரம் திருக்குர்ஆனில் இருந்து தெரிய வருவது மேற்கூறப்பட்டதைப் போன்றே ஆகும். ஆனால் இதை விடச் சிறந்ததாகும்.

بالاولی تَبٰرَکَ الَّذِیْ بِیَدِہِ الْمُلْکُ ۡ وَھُوَ عَلٰی کُلِّ شَیْءٍ قَدِیْرُ ○ الَّذِیْ خَلَقَ الْمَوْتَ
وَالْحَیٰوۃَ لِیَبْلُوَکُمْ اَیُّکُمْ اَحْسَنُ عَمَلًا ؕ وَھُوَ الْعَزِیْزُ الْغَفُوْرُ ○ الَّذِیْ خَلَقَ سَبْعَ
سَمٰوٰتٍ طِبَاقًا ؕ مَا تَرٰی فِیْ خَلْقِ الرَّحْمٰنِ مِنْ تَفٰوُتٍ ؕ فَارْجِعِ الْبَصَرَ ۙ ھَلْ تَرٰی
مِنْ فُطُوْرٍ ○ ثُمَّ ارْجِعِ الْبَصَرَ کَرَّتَیْنِ یَنْقَلِبْ اِلَیْکَ الْبَصَرُ خَاسِئًا وَّھُوَ حَسِیْرٌ ○

அதாவது எவன் கையில் ஆட்சி இருக்கின்றதோ அவன் மிகவும் அருளுக்குரியவன் ஆவான். அவன் எல்லாவற்றின் மீதும் ஆற்றல் உள்ளவன் ஆவான். உங்களில் எவர் நன்மைகள் செய்கிறார் என்பதைப் பார்ப்பதற்காக அவன் மரணத்தையும் வாழ்வையும் படைத்தான். மேலும் அவன் வல்லமையுள்ளவனும் மன்னிக்கக் கூடியவனும் ஆவான். அவன் ஏழு வானங்களையும் படைத்து அதற்கிடையில் ஓர் இணக்கத்தையும் தொடர்பையும் உருவாக்கினான். இறைவனின் படைப்பில் நீ எந்த வேறுபாட்டையும் காணமாட்டாய். ஆகவே தம் பார்வையை ஒருமுறை சுற்றி விடு. ஏதாவது பிளவு தென்படுகிறதா? மீண்டும் ஒருமுறை தம் பார்வையைச் சுற்றி விடு. உன் பார்வை களைப்பு ஏற்பட்டு திரும்பி விடும். (67:2–5)

சில மக்கள் அனைத்து பிரபஞ்சமும் தற்செயலாக உருவாகி விட்டது என்றும் தற்செயலாக அனைத்து பொருட்களும் ஒன்றுடன் இன்னொன்று இணைந்ததன் காரணத்தால் உருவாகி விட்டது என்றும் கூறுகின்றனர். இந்த உலகம் தானாகவே ஒன்றோடொன்று இணைந்து இயங்கிக் கொண்டிருக்கின்றது என்றும் விஞ்ஞானம் மூலமாக நிரூபிக்க முயற்சியும் செய்கின்றனர். ஆனால் இந்த வாதங்களுக்கான பதில் அல்லாஹ் மேலே கூறப்பட்ட வசனங்களில் கூறுகிறான். அதாவது தற்செயலாக இணைந்து விடும் பொருட்களில் ஒருபோதும் அமைப்பு முறையும் ஒழுங்கும் இருக்காது. மேலும் அதில் ஒரு கட்டமைப்பும் இருக்கும். நிறங்கள் சேர்ந்து ஓர் ஓவியம் உருவாகின்றது. ஆனால் வெவ்வேறான நிறங்கள் ஒரு காகிதத்தில் தெளித்து விட்டால் அது ஓர் ஓவியமாக மாறி விடுமா? செங்கல்கள் கொண்டே கட்டடம் கட்டப்படுகின்றது. அதனால் அவற்றை ஒன்றின் மேல் ஒன்றை எறிவதால் கட்டடம் உருவாகி விடுமா? ஒரு சில சம்பவங்கள் தற்செயலாக நடக்கின்றது என்று ஒரு வாதத்திற்கு நாம் நம்பினாலும் இந்த பிரபஞ்சத்தின் அமைப்பைப் பார்த்து இது அனைத்தும் தற்செயலாக உருவானதாகும் என்று எவராலும் கூற முடியாது. பதார்த்தங்களிலிருந்து பூமி தற்செயலாக உருவாகி விட்டது என்றும் தற்செயலாக மனிதன் பிறந்து விட்டான் என்றும் நாம் ஒரு வாதத்திற்காக நம்பினாலும் மனிதப் படைப்பின் மீதும் கொஞ்சம் பார்வையைச் செலுத்துங்கள். இவ்வளவு முழுமையான பிறப்பு தற்செயலாக உருவாக முடியுமா? ஒரு பொருளின் பண்புகளைப்

பார்த்தால் அதன் படைப்பாளியைக் குறித்து தெரிய வரும் என்பது பொதுவான கருத்தாகும். உதாரணமாக ஓர் அழகான ஓவியத்தைப் பார்த்தால் ஒரு பெரிய ஓவியர்தான் இதை வரைந்திருப்பார் என்ற எண்ணம் நமக்கு வந்து விடும். ஒரு நல்ல கட்டுரையைப் பார்த்தால் ஒரு பெரிய எழுத்தாளர் தான் இதை எழுதியிருப்பார் என்றும் நமக்கு புரிந்து விடும். எந்த அளவுக்கு ஒன்றோடு தொடர்பு அதிகரிக்குமோ அதே அளவு அதை உருவாக்கியவர் அல்லது எழுதியவரின் சிறப்பும் மாண்பும் மனதில் பதிந்து கொண்டே செல்கிறது. அவ்வாறிருப்பின் இந்த அளவுக்கு சீரமைப்புடன் விளங்கும் பிரபஞ்சம் எவ்வாறு தற்செயலாக உருவாக முடியும்? இந்த விஷயத்தைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். அதாவது மனிதனுக்கு எவ்வாறு வளர்ச்சி அடையக்கூடிய தன்மை இருக்கின்றதோ அதே போன்று தமது சிந்தனைகளைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வரக்கூடிய அறிவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் அவனுடைய உடலும் அதற்கேற்ப உருவாக்கப்பட்டிருக்கின்றது. உணவிற்காக கடினமாக உழைக்க வேண்டியதிருந்ததால் நடந்து திரிந்து அதை சம்பாதிப்பதற்கான ஆற்றலை மனிதனுக்கு வழங்கினான். மரத்திற்கு உணவு பூமிக்குக் கீழ் வைக்கப்பட்டுள்ளதால் உணவை ஈர்ப்பதற்காக அதற்கு வேர்கள் வழங்கப்பட்டுள்ளது. சிங்கத்திற்கு உணவாக மாமிசம் வைக்கப்பட்டுள்ளதால் வேட்டையாடுவதற்காக அதற்கு நகங்கள் வழங்கப்பட்டுள்ளது. புல்லை உணவாக எடுக்கக் கூடிய குதிரைக்கும் காளைக்கும் அதை குனிந்து உண்ணக்கூடிய கழுத்து வழங்கப்பட்டுள்ளது. மரங்களின் இலைகளும் முற்களும் உணவாக எடுக்கும் ஒட்டகத்திற்கு உயர்ந்த நீளமான கழுத்து வழங்கப்பட்டுள்ளது. இவ்வனைத்தும் தற்செயலாக உருவானதா? தற்செயலாக ஒட்டகத்திற்கு நீளமான கழுத்தும், சிங்கத்திற்கு சிறிய கழுத்தும், மரத்திற்கு வேரும், மனிதனுக்கு கால்களும் சரியான முறையில் எவ்வாறு அமைந்தது? தற்செயலாக உருவாகும் அமைப்புகளில் இந்த அளவுக்கு சீரமைப்பு இருக்கும் என்று நம்புவது சிந்தனைக்கு உட்பட்டதா? மேலும் மனிதனுக்கு நுரையீரல் உருவாக்கப்பட்டிருக்கின்றது என்றால் அதற்கேற்ப காற்றும் படைக்கப்பட்டுள்ளது. தண்ணீர் அவனுடைய வாழ்க்கைக்கு அடிப்படையாக இருக்கின்றது என்றால் சூரியன் மூலமாக மேகங்களிலிருந்து அவனுக்கு தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது. கண்கள் வழங்கப்பட்டது என்றால் அதன் செயல் திறனுக்காக சூரியனின் ஒளி வைக்கப்பட்டுள்ளது. காற்று கொடுப்பட்டதால் அழகான குரல்களும் படைக்கப்பட்டுள்ளது. நாவுடன் ருசியான உணவுகள் படைக்கப்பட்டது. மூக்குடன் நறுமணமும் வழங்கப்–பட்டுள்ளது. தற்செயலாக மனிதனில் நுரையீரல் உருவாகலாம். ஆனால் அதற்கேற்ப காற்றும் எவ்வாறு உருவானது. மனிதனின் கண்ணும் தற்செயலாக உருவாகி இருக்கலாம். ஆனால் அதன் சுமூகமான செயல்பாட்டிற்குக் கோடிக்கணக்கான மைல் கல் தொலைவில் சூரியனும் தற்செயலாக உருவானது என்பது மிகவும் விசித்திரமானதாகும். ஒரு பக்கம் தற்செயலாக காது உருவாகி விட்டது. ஆனால் இன்னொரு பக்கம் அதற்கேற்ப ஒலியை எந்த சக்தி உருவாகி இருக்கின்றது. பனி அதிகமாக இருக்கின்ற நாடுகளில் நாய்களும் கரடிகளும் தற்செயலாக பிறந்தது என்று நாம் நம்பினாலும் அந்த நாய்களின் மற்றும் கரடிகளின் முடி எந்தக் காரணத்தால் இவ்வளவு நீளமாக உள்ளது. தற்செயலாக ஆயிரக்கணக்கான நோய்கள் உருவாகி விட்டது. அதே போன்று தற்செயலாகத்தான் அதன் சிகிச்சை உருவாகி விட்டது. தொடுதல் மூலமாக அரிப்பு ஏற்படும் செடி தற்செயலாக உருவாகி விட்டது. மேலும் அதன் சிகிச்சைக்கான கீரை தாவரங்களும் தற்செயலாக உருவாகி விட்டது. நாத்திகவாதிகளின் இந்த யதார்த்தம் என்ற தத்துவம் மிகவும் விசித்திரமானதாகும். ஏனென்றால் இந்த யதார்த்தம் எவைகளுக்கு மரணம் நிர்ணயிக்கப்பட்டதோ அவைகளுடன் இனப்பெருக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதே போன்று எவைகளும் மரணம் நிர்ணயிக்கப் படவில்லையோ அவைகளுடன் இப்படிப்பட்ட எந்தத் தொடரும் ஏற்படுத்தவில்லை. மனிதன் பிறந்ததற்குப் பிறகு அவனுக்கு மரணம் ஏற்படவில்லை என்றால் சில வருடங்களிலேயே இந்த உலகம் அழிந்து போயிருக்கும். அதனால் அவனுடன் அழிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் சூரியனும் சந்திரனும் பூமியும் புதிதாக உருவாகுவதும் இல்லை; அழிந்து விடுவதும் இல்லை. பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் ஓர் ஈர்ப்பு சக்தி இருந்தாலும் அவை இரண்டும் ஒன்று மற்றொன்றுடன் மோதாமல் இருப்பதற்கு இரண்டுமே போதுமான அளவில் தொலைவில் வைக்கப்பட்டுள்ளன என்பது மிகவும் வியப்பிற்குரிய ஏற்பாடு ஆகும். ஆக இந்த அனைத்து விஷயங்களில் இருந்து நிரூபணமாவது என்னவென்றால், இந்த அனைத்துப் பொருட்களையும் படைத்தவன் அறிவாளி மட்டுமல்ல. மாறாக எல்லையில்லா அறிவின் உரிமையாளன் ஆவான். மேலும் அவனது விதிமுறைகள் எந்த அளவிற்கு முழுமையாக உள்ளது என்றால் அதில் எந்த முரண்பாடும் எந்தக் குறைபாடும் இல்லை. எனக்கு எனது விரல்கள் கூட அவனது இருப்பிற்கான ஓர் ஆதாரமாகத் தெரிகிறது. எனக்கு அவன் அறிவை வழங்கியதுடன் சிங்கத்தின் கைகள் கிடைத்திருந்தால் என்னால் எழுத இயலுமா? சிங்கத்திற்கு அறிவு வழங்கப்படவில்லை கால் வழங்கப்பட்டுள்ளது. எனக்கு அறிவும் அதை எழுதுவதற்கு விரல்களும் வழங்கப்பட்டுள்ளன.

ஆயிரக்கணக்கான இராஜ தந்திரவாதிகள் பேரரசுகளின் சீர்திருத்தத்திற்காக வேலை செய்கின்றனர். ஆனாலும் அவர்கள் ஒரு சில தவறுகள் செய்து விடுகின்றனர். அதன் மூலமாக பேரரசுகளுக்கு பேரிழப்புகள் ஏற்படுகின்றது என்பது மட்டுமல்லாமல் சில நேரங்களில் அழிந்தே போய் விடுகின்றது. ஆக ஆயிரக்கணக்கான புத்திசாலி–களுக்கு தவறுகள் ஏற்படலாம். ஆனால் முற்றிலும் தற்செயலாக இயங்கிக் கொண்டிருக்கும் இந்த உலகத்தில் எந்தக் குழப்பமும் ஏற்படுவதில்லை என்பது விசித்திரமான காரியமாகும். உண்மை என்னவென்றால் இந்தப் பிரபஞ்சத்திற்கு அறிவுமிக்க ஆற்றல் மிக்க ஒரு படைப்பாளி இருக்கின்றான். அவன் இல்லையென்றால் இந்த அருமையான நிர்வாகம் இருக்க வாய்ப்பில்லை. ஆக நீங்கள் வேண்டுமானாலும் பார்வையை விரட்டிக் கொள்ளுங்கள். திருக்குர்ஆனின் வசனங்களுக்கேற்ப சோர்வடைந்தும் நிராசை அடைந்தும் உங்கள் பார்வை திரும்பி வரும். ஒவ்வொரு பொருளிலும் உங்களுக்கு ஒரு நிர்வாகம் தென்படும். நல்லவர்கள் நற்கூலியைப் பெறுகின்றனர்; கெட்டவர்கள் தண்டனை பெறுகின்றனர். ஒவ்வொன்றும் தத்தமது வட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஒரு நாளிகைக்குக் கூட சோம்பல் ஆவதில்லை. இது ஒரு விரிவான விஷயமாகும். ஆனால் நான் இதை இங்கேயே முடித்துக் கொள்கிறேன். அறிவுடையவருக்கு சைகையே போதுமானது.

**ஆறாவது ஆதாரம்**

இறைவனை நிராகரிப்பவர்கள் எப்போதும் இழிவையும் அவமானத்தையும் அடைவார்கள் என்று திருக்குர்ஆனிலிருந்து தெரிய வருகிறது. அவர்கள் ஆதாரமற்ற கருத்தில் இருக்கின்றனர் என்பதற்கு இதுவும் ஓர் ஆதாரமாகும். ஏனென்றால் தன்னைப் பின்பற்றக் கூடியவர்களுக்கு அல்லாஹ் எப்போதும் தங்களுடைய எதிரிகளின் மீது வெற்றியை வழங்குவான். இறைவன் இல்லை என்றால் அந்த உதவியும் ஆதரவும் எங்கிருந்து தான் வருகிறது. ஆக ஃபிர்அவ்ன் மற்றும் மூஸாவைப் பற்றி இவ்வாறு வருகிறது.

فَقَالَ أَنَا رَبُّكُمُ الْأَعْلَىٰ ○ فَأَخَذَهُ اللَّهُ نَكَالَ الْآخِرَةِ وَالْأُولَىٰ ○ அதாவது ஹஸ்ரத் மூஸா (அலை) இறைவனுக்கு கட்டுப்படுவதைக் குறித்து ஃபிர்அவ்னுக்கு எடுத்துக் கூறியபோது ஃபிர்அவ்ன் ஆணவத்துடன் இறைவனா? எந்த இறைவன்? இறைவன் நான் ஆவேன் என்று பதில் கூறினான். (79:25,26) ஆக இறைவன் அவனை இந்த உலகத்திலும் மறுவுலகத்திலும் இழிவிற்கு ஆளாக்கினான். இறை மறுப்பாளர்கள் எவ்வாறு இழிவிற்கும் அழிவிற்கும் ஆளாகி விடுகின்றனர் என்பதற்கு ஃபிர்அவ்னின் சம்பவம் மிகவும் தெளிவான ஆதாரமாகும். எங்கேயும் எந்தவொரு நாத்திகவாதியும் ஒரு பேரரசை எழுப்பியது கிடையாது.

மாறாக உலகத்தை வென்றவரும் பெரிய சீர்திருத்தவாதிகளும் வரலாற்றை உருவாக்கக் கூடியவர்களும் இறைவன் மீது நம்பிக்கை வைக்கக் கூடியவர்களாகத்தான் இருந்தனர். அவர்களின் அவமானவும் இழிவும் சமூக நிலையில் ஒருபோதும் உலகத்திற்கு முன்னால் வராமல் இருப்பதற்கு எந்த முக்கியத்துவமும் இல்லையா?

### ஏழாவது ஆதாரம்

இறைவன் மீது உண்மையான ஈமான் கொண்டவர்கள் எப்போதும் வெற்றி பெறுகின்றனர். எதிரிகள் அவர்களை எவ்வளவு எதிர்த்தாலும் அவர்கள் மீது எந்தத் துன்பமும் ஏற்படுவதில்லை. இறை இருப்பை போதிக்கின்றவர் எல்லா நாடுகளிலும் இருந்திருக்கின்றனர். எந்த அளவுக்கு அவர்கள் எதிர்க்கப்பட்டார்களோ அந்த அளவிற்கு வேறு யாருமே எதிர்க்கப்படவில்லை. அவ்வாறிருந்தும் அவர்களுக்கு எதிராக உலகம் அவர்களை எதுவும் செய்ய முடியவில்லை. ராமரைக் காட்டிற்கு அனுப்பி வைத்தவர்களுக்கு என்ன கிடைத்தது? ராவணனுக்கு என்ன இலாபம் கிடைத்தது, ராமர் ஆயிரக்கணக்கான வருடங்களுக்காக உயிர் பெற்றவராக ஆகவில்லையா? ராவணன் எல்லா காலத்திற்கும் களங்கம் ஏற்பட்டவனாக ஆகவில்லையா?

மேலும் கிருஷ்ணரின் கூற்றை நிராகரித்த கேளரவருக்கு என்ன கிடைத்தது? குருக்ஷேத்தர் மைதானத்தில் அவர் அழிக்கப்பட வில்லையா? ஸ்ரீ இஸ்ராயீல் மக்களக்கு மாபெரும் துன்பத்தைக் கொடுத்த அரசன் ஆகிய ஃபிர்வன் ஒரு சாதாரண மனிதனாகிய மூஸாவை எதிர்த்தான். ஆனால் அவனால் மூஸாவிற்கு ஏதாவது தீங்கு விளைவிக்க முடிந்ததா? அவன் கடலில் மூழ்கினான். மூஸா அரசர் ஆனார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த உலகத்தில் எவ்வாறு எதிர்க்கப்பட்டார்கள் என்பதும் அன்னார் எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்தார்கள் என்பதும் பிரபலமான விஷயமாகும். அன்னாரின் எதிரிகள் அழிந்து போனார்கள். மேலும் அன்னாரின் சீடர்கள் பல நாடுகளின் அரசர் ஆனார்கள். நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தத் தூயவனின் பெயர் இந்த உலகத்தில் எல்லாவற்றையும் விட அதிகமாக எட்ட வைத்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இறைவனை நினைத்து பைத்தியமாக இருந்தார்கள் (நவூதுபில்லாஹ்) என்றும் ஒவ்வொரு நொடிப்பொழுதும் இறைவா! இறைவா! என்று கூறிக் கொண்டிருந்தார்கள் என்று கூறியிருக்கிறார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஏழு சமுதாயங்கள் எதிர்த்தன. சொந்த உறவினர்களும் ஊர் மக்களும் எதிரிகள் ஆனார்கள். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உலகத்தின் பொக்கிஷங்களை வெல்லவில்லையா? இறைவன் இல்லையென்றால் யார் உதவி செய்தார்? அவ்வனைத்தும் தற்செயலாகத்தான் நடக்கின்றது என்றால் இறைஇருப்பை நிரூபிக்க எவராவது வந்தால் உலகம் அவரை இழிவுபடுத்தி விடும். ஆனால் இறைவனின் பெயரை உயர்த்துவதற்காக எழுந்தவர் கண்ணியம் மிக்கவராகவும் வெற்றி பெற்றவராகவும் ஆனார்.

ஆகவே அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

مَنْ يَّتَوَلَّ اللهَ وَرَسُوْلَهٗ وَالَّذِيْنَ اٰمَنُوْا فَاِنَّ حِزْبَ اللهِ هُمُ الْغٰلِبُوْنَ அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நம்பிக்கையாளர்களையும் நேசர்களாக ஆக்குகின்றவர்கள் இறை நம்பிக்கையாளர்களாக இருப்பர். மேலும் அவரேதான் வெற்றி பெறுவார். (5:57)

### எட்டாவது ஆதாரம்

இறைவன் பிரார்த்தனைகளை ஏற்றுக் கொள்கிறான் என்பது தான் திருக்குர்ஆனிலிருந்து தெரிய வருகிற இறை இருப்பிற்கான எட்டாவது ஆதாரமாகும். மனிதன் நிம்மதியிழந்த நிலையில் இறைவனிடம் துஆ செய்யும்போது அவன் அதை ஏற்றுக் கொள்கிறான். இது ஒரு குறிப்பிட்ட காலத்தில் முற்றுப்பெற்று விடவில்லை. மாறாக எல்லாக் காலங்களிலும் இதை நாம் காண முடிகிறது. எனவே அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

اِذَا سَاَلَكَ عِبَادِىْ عَنِّىْ فَاِنِّىْ قَرِيْبٌ ؕ اُجِيْبُ دَعْوَةَ الدَّاعِ اِذَا دَعَانِ ۙ
فَلْيَسْتَجِيْبُوْا لِىْ وَلْيُؤْمِنُوْا بِىْ لَعَلَّهُمْ يَرْشُدُوْنَ ○

அதாவது எனது அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றி கேட்டால் நான் அருகில் இருக்கிறேன். பிரார்த்தனை செய்கிறவர் என்னை அழைக்கின்றபோது நான் அவருடைய அழைப்பை ஏற்றுக் கொள்கிறேன். எனவே அவர்களும் என் கட்டளையினை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள். (2:187) ஒரு சிலரது காரியங்கள் தற்செயலாக நடக்கிறது. ஒரு சிலரது காரியங்கள் நடைபெறுவதும் இல்லை. அதனால் இறைவன் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறான் என்று எவ்வாறு உறுதியாகக் கூற முடியும் என்று ஒரு சிலர் கூறுகின்றனர். அனைத்து பிரார்த்தனைகளும் ஏற்றுக் கொள்ளப்படுவதாக இருந்தால் ஆட்சேபனைக்கு இடமில்லை என்றும் ஒரு சிலரது துஆக்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்போது அது தற்செயலாக நடந்ததல்ல. மாறாக, இறைவன்தான் அதை ஏற்றுக் கொண்டான் என்று எவ்வறு தெரிய வரும் என்ற கேள்வி எழலாம். இதன் பதில் என்னவென்றால் துஆவின் ஏற்றுக் கொள்ளுதல் தமக்குள்ளேயே ஓர் அடையாளத்தைக் கொண்டுள்ளது. ஆக ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி மஸீஹ் மவ்வூது மஹ்தியே மவ்வூது (அலை) அவர்கள் இறை இருப்பிற்கான சான்றுகளில் இந்த விஷயத்தையும் கூறியிருக்கின்றார்கள். அதாவது கடுமையான நோயினால் பாதிக்கப்பட்ட ஒரு சில நோயாளிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பிறகு இரண்டு குழுவாகப் பிரித்து விட்டு ஒரு குழுவிற்கு மருத்துவர்கள் சிகிச்சை அளிக்க வேண்டும். இரண்டாவது குழுவிற்காக நான் துஆ செய்வேன். எந்தக் குழு குணமடைகிறது என்று நாம் பார்ப்போம். இப்படிப்பட்ட செயல்முறையில் ஏதாவது சந்தேகம் இருக்க வாய்ப்பு இருக்கிறதா? ஆக ஒரு வெறிநாய் தாக்கிய ஒருவரை கசோலியின் அனைத்து மருத்துவரும் இவரைக் காப்பாற்ற முடியாது என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் துஆ செய்தார்கள். அந்த துஆவின் மூலமாக அவர் குணமடைந்தார். வெறிநாய் கடித்தவர் வெறிநாய் போல் ஆகிவிட்டும் குணமடைவது இல்லை. ஆக துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதால் இந்த துஆக்களை ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒருவன் இருக்கின்றான் என்பதற்கு சான்றாக உள்ளது. மேலும் துஆக்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதல்ல. மாறாக எல்லாக் காலத்திலும் இதன் காட்சிகள் தென்படுகின்றன. பழைய காலங்களில் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதைப் போன்று இன்றும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

### ஒன்பதாவது ஆதாரம்

திருக்குர்ஆனிலிருந்து தெரிய வருகின்ற இறை இருப்பிற்கான ஒன்பதாவது ஆதாரம் வெளிப்பாடுகள் ஆகும். இந்த ஆதாரத்தை ஒன்பதாவது இடத்தில் வைத்தாலும் இது இறை இருப்பை உறுதியுடன் நிரூபிக்கின்ற மேன்மைமிக்க ஆதாரமாகும். எனவே அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

يُثَبِّتُ اللهُ الَّذِيْنَ اٰمَنُوْا بِالْقَوْلِ الثَّابِتِ فِى الْحَيٰوةِ الدُّنْيَا وَفِى الْاٰخِرَةِ அதாவது அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களை இந்த உலகத்திலும் மறுமையிலும் உறுதியான காரியத்தைக் கூறி உறுதிப்படுத்துகின்றான். (14:28) ஆக ஒவ்வொரு காலகட்டதிலும் பல்வேறு மக்களுடன் உரையாடுகின்றான் என்ற நிலையில் அவனை நிராகரிப்பது எவ்வாறு சரியான விஷயமாகும். அவன் தூதர்களுடன் மட்டுமல்ல. மாறாக இறை நேசர்களுடன் பேசுகிறான். ஒரு சில நேரங்களில் தமது பலவீனமான அடியானின் ஆறுதலுக்காக அவனிடம் கருணையுடன் பேசுகிறான். ஆக இந்த எழியவனுடனும் அவன் உரையாடிக் கொண்டு தமது இருப்பைக் குறித்து சான்றை வழங்கி இருக்கின்றான். இது மட்டுமல்ல. சில நேரங்களில் மிகக் கெட்ட மனிதர்களுடனும் பாவிகளுடனும் அவர் மீது தமது அத்தாட்சியை முழுமைப்படுத்து

–வதற்காக அவன் உரையாடுகிறான். அதனால் சில நேரங்களில் தோட்டிகளுக்கும் விபச்சாரிகளுக்கும் கூட கனவுகளும் வெளிப்பாடுகளும் வருகின்றன. மேலும் அவர்கள் ஆற்றல் மிக்கவரிடம் இருந்துதான் வந்திருக்கின்றன என்பதற்கு ஆதாரங்களும் இருக்கின்றன. இது ஒரு மனிதனின் கூற்று இல்லை அல்லது ஒரு பைத்தியம் பிடித்தவரின் முணுமுணுத்தல் இல்லை என்பதற்கு அத்தாட்சியாக சரியான காலம் வரும்போது நிகழ்ந்து விடுகின்ற மறைவான விஷயங்களும் அதில் இருக்கின்றன. நிகழ் காலத்தில் நடக்கின்ற சம்பவங்கள் ஒருவனுக்கு கனவில் வந்து அது தற்செயலாக நிகழ்ந்து விட்டிருக்கின்றது என்று யாரும் ஆட்சேபனை செய்யக் கூடாது என்பதற்காக சில வெளிப்பாடுகளில் நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு பிறகுள்ள செய்திகளும் கூறப்படுகின்றது. எனவே தான் இன்று உலகம் அதிர்ச்சி அடைகின்ற கிறிஸ்தவரின் வளர்ச்சியை குறித்து திருக்குர்ஆனில் மிகத் தெளிவான வார்த்தைகளில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இது மட்டுமல்ல எதிர்காலத்தில் நிகழவிருக்கும் சம்பவங்களைக் குறித்தும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. உதாரணமாக, إِذَا الْعِشَارُ عُطِّلَتْ அதாவது ஒட்டகங்கள் கைவிடப்படுகின்ற ஒரு காலம் வரும். (81:5) மேலும் முஸ்லிமின் ஒரு ஹதீஸில் இதன் விளக்கம் வருகிறது.

وَلَيُتْرَكَنَّ الْقِلَاصُ فَلَا يُسْعٰى عَلَيْهَا ஒட்டகங்கள் பயன்படுத்தப்படாது. ஆக இந்தக் காலத்தில் இரயில் கண்டுபிடிக்கப்பட்டதால் இந்த முன்னறிவிப்பு நிகழ்ந்து விட்டது. இரயிலைக் குறித்து ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஹதீஸிலிருந்து கிடைக்கின்ற குறிப்புகளிலிருந்து இரயிலின் வரைபடம் நமது முன்னால் வந்து விடுகின்றது. அதே போன்று ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கூற்றில் ஒரு நீராவியில் ஓடுகின்ற ஒரு வாகனத்தைக் குறித்து குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அது தமது முன்னால் ஒரு புகையின் மலையை உருவாக்கும் என்றும் அது கழுதையைப் போன்று இருக்கும். அது புறப்படுகின்ற நேரத்தில் ஓர் ஒலியை எழுப்பும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இரண்டாவது, إِذَا الصُّحُفُ نُشِرَتْ அதாவது புத்தகங்களும் இதழ்களும் மிக அதிகமாக வெளியிடப்படும். (81:11) தற்போதைய காலத்தில் எந்த அளவிற்கு அதிகமாக புத்தகங்கள் வெளியிடப்படுகின்றது என்பதைக் குறித்து அதிகமான விளக்கம் தேவை இல்லை.

மூன்றாவது, إِذَا النُّفُوسُ زُوِّجَتْ (81:8) மனித குலத்தின் பரஸ்பர தொடர்புகளின் வழிமுறைகள் எந்த அளவிற்கு எளிதானதாக ஆகி விடும் என்பது இன்றைய காலத்தை விட அதிகமாக அதனை கற்பனை செய்ய முடியாது.

நான்காவது, تَرْجُفُ الرَّاجِفَةُ تَتْبَعُهَا الرَّادِفَةُ அசாதாரண நிலநடுக்கங்கள் தொடர்ந்து நிகழும். எதுவரை என்றால் இந்தப் பூமி நடுங்கிக் கொண்டே இருக்கும். (79:6) ஆக இந்தக் காலத்தில் இது அதிகமாக நடைபெறுகின்றது.

ஐந்தாவது, وَإِنْ مِّنْ قَرْيَةٍ إِلَّا نَحْنُ مُهْلِكُوهَا قَبْلَ يَوْمِ الْقِيٰمَةِ أَوْ مُعَذِّبُوهَا மறுமை நாளுக்கு முன்னால் நாம் அழிக்காமலோ அல்லது ஓரளவிற்கு தண்டனை கொடுக்காமலோ எந்த ஊரையும் விடுவதில்லை. (17:59)

ஆக, இந்தக் காலத்தில் பிளேக்கினாலும் நிலநடுக்கத்தினாலும் புயலினாலும் எரிமலையின் சீற்றத்தினாலும் பரஸ்பரம் போர்களினாலும் மக்கள் அழிந்து விடுகின்றனர். எந்த அளவிற்கு இந்தக் காலத்தில் அழிவிற்கான காரணிகள் இருக்கின்றதோ அந்த அளவிற்கு வேறு எந்தக் காலத்திலும் இருந்ததில்லை. ஆற்றல் மிக்கவனும் அறிவுள்ளவனுமாகிய ஓர் இறைவன் இருக்கின்றான் என்று நிரூபிப்பதற்கு ஒவ்வொரு நூற்றாண்டிலும் இறை அறிவிப்பில் இருந்து அருள் பெற்று அசாதாரண அடையாளங்களைக் காட்டி பல மக்கள் தோன்றுகின்ற மார்க்கம் இஸ்லாம் ஆகும். எனவே இந்தக் காலத்தில் அனுப்பப்பட்டவருக்கு எவராலும் அறியப்படாதவராகவும் ஆதரவற்றவராகவும் இருந்த காலத்தில் இறைவன் இல்ஹாம் மூலமாக

يَأْتِيكَ مِنْ كُلِّ فَجٍّ عَمِيقٍ يَنْصُرُكَ رِجَالٌ نُوحِيْ إِلَيْهِمْ مِّنَ السَّمَاءِ
وَلَا تُصَعِّرْ لِخَلْقِ اللّٰهِ وَلَا تَسْئَمْ مِنَ النَّاسِ

என்று அறிவிக்கின்றான். (பராஹீனே அஹ்மதிய்யா பதிப்பு 1881 பக்கம் 241. ரூஹானி கஸாயீன் தொகுதி 1 பக்கம் 267 ஹர்ஷியா)

அதாவது ஒவ்வொரு தரப்பிலிருந்தும் மக்கள் உன்னிடம் வருவார்கள். மேலும் மிகத் தொலைவிலிருந்து வருவார்கள். என்னுடைய சைகையில் ஒரு சிலர் உமக்கு உதவி செய்வார்கள். ஆக உன்னிடம் வருகின்ற இறை அடியார்களிடம் நீ மோசமான முறையில் நடந்து கொள்ளக் கூடாது. மேலும் அவர்களைச் சந்திப்பதில் நீ சோர்வடைந்து விடக் கூடாது. வளர்ச்சி அடைந்து உலகம் தெரியாத கிராமத்தில் வசிக்கின்ற ஒரு நபர் ஓர் அறிவிப்பை அறிவிக்கின்றான். மேலும் கடுமையான எதிர்ப்பும் தடைகளும் இருக்கும். ஆப்பிரிக்கா, அமெரிக்கா போன்ற பல நாடுகளிலிருந்தும் பல்வேறு மக்கள் இங்கு வருகை தருகின்றனர். மக்களுடைய எண்ணிக்கை எந்த அளவுக்கு இருந்தது என்றால் ஒரு சாதாரண மனிதனால் அவர்கள் அனைவரிடமும் கைகுலுக்குவது கூட அசாத்தியமான விஷயமாகும். மேலும் சிலர் தமது பிரியமான சொந்த நாட்டை விட்டு விட்டு இங்கு வசிக்க ஆரம்பித்து விடுகின்றனர். அவ்வாறு முழு உலகிலும் காதியானின் பெயர் பிரபலமாகி விட்டது. இது ஒரு சிறிய விஷயமா? இது மறுக்க முடியாத ஒரு அடையாளமாகும். இதனை சாதாரண விஷயமாகக் கருதி விட்டு விட இயலுமா?

இரண்டாவதாக, அமெரிக்காவில் டூயி நுபுவ்வத் வாதம் செய்தார். மேலும் தமது தூய்மையற்ற வார்த்தைகளால் இஸ்லாம் இந்த உலகிலிருந்து அழிந்து போய் விடுவதற்காக நான் இறைவனிடம் பிரார்த்தனை செய்கின்றேன். 'இறைவா! நீ இவ்வாறே செய். இறைவா! இஸ்லாத்தை அழித்து விடு!' என்று கூறினார். அந்த நேரத்தில் நமது இமாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மட்டும்தான் அவர்களை எதிர்கொண்டு நபித்துவ வாதம் செய்கின்றவரே வாருங்கள்! என்னிடம் முபாஹலா செய்யுங்கள். 'நமது போட்டி துஆ மூலமாக நடக்கும். நாம் இருவரும் நம்மில் யார் பொய்யராக இருப்பாரோ முதலில் அவர் இறந்து போகட்டும்' என்று துஆ செய்ய வேண்டும் என்று பிரசுரம் வெளியிட்டார்கள். (டெலிகிராஃப் 5 ஜூலை 1903) ஆனால் அவர் இறுமாப்புடன் இவ்வாறு கூறினார்: 'நான் இந்த கொசுக்களுக்கும் ஈக்களுக்கும் பதில் கூறுவேன் என்று நினைக்கின்றீர்களா? எனது காலை அதன் மீது வைத்து அதனை நசுக்கி விடுவேன்.' (டூயி கா பர்ச்சா டிசம்பர் 1903) ஆனால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 23 ஆகஸ்டு 1903 –ல் வெளியிட்ட பிரசுரத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள். 'டூயி இந்தப் போட்டியிலிருந்த ஓடிப் போனாலும் சரி கண்டிப்பாக அவரின் ............ மீது விரைவில் ஆபத்து வர இருக்கின்றது. இறைவா! எனது முழுமையான இறைவா! இந்தத் தீர்மானத்தை விரைவில் எடுப்பாயாக. மேலும் டூயியின் பொய்யை மக்களுக்கு முன்னால் வெளிப்படுத்துவாயாக.'

மதிப்பிற்குரிய வாசகர்களே! அதற்குப் பிறகு என்ன நடந்தது? என்று கேளுங்கள். இளவரசனைப் போன்று வாழ்ந்திருந்த ஏழு கோடி ரொக்கம் செல்வதற்குச் சொந்தக்காரரான அவர்களின் மனைவியும் மகனும் அவருக்கு எதிரிகளாகி விட்டனர். அவர் தமது மகன் விபச்சார சந்ததி ஆவான் என்று விளம்பரம் செய்தார். ஆக இறுதியில் அவருக்கு பக்கவாதம் ஏற்பட்டது. பிறகு துயரத்தின் காரணமாக அவர் பைத்தியமாகி விட்டார். பிறகு இறைவன் தமது தூதருக்கு ஏற்கனவே தகவல் வழங்கியதற்கேற்ப ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 20 பிப்ரவரி 1907 –ஆம் தேதி வெளியிட்ட 'இறைவன் கூறுகின்ற மாபெரும் வெற்றியைக் கண்ட முழு உலகத்திற்கும் அடையாளமாக நான் ஒரு புத்தம் புதிய அடையாளத்தை வெளிப்படுத்துவேன்' என்ற விளம்பரத்திற்கேற்ப வருத்தத்துடனும் துயரத்துடனும் மார்ச் மாதம் 1907 –ஆம் ஆண்டு இறைஇருப்பிற்கு ஓர்

(தொடர்ச்சி 7-வது பக்கம்...)

# நமது இறைவன்

*(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எம்.ஏ ரலியல்லாஹு அன்ஹு)*

***இந்தக் காலத்தில் இறைவன் மீது நம்பிக்கை கொள்வதன் நிலை:***

முதன்முதலில் நான் இந்த இடத்தில் பரிதாபத்திற்குரிய மேலும் மிகவும் ஆபத்தான சூழல் தொடர்பாக வெளிப்படுத்த விரும்புகிறேன். அது இந்தக் காலத்தில் இறைவன் மீது நம்பிக்கை தொடர்பாக மக்களிடம் பொதுவாகக் காணப்படும் விஷயமாகும். எந்த அளவுக்கு மார்க்கங்கள் இந்த உலகத்தில் இருக்கின்றனவோ அவை அனைத்துமே இறைஇருப்பை ஒப்புக் கொள்கின்றன எனலாம். ஆனால் உண்மை என்னவென்றால் அவை இறைவனை ஏற்றுக் கொள்வதில்லை. மேலும் அவர்களுடைய உள்ளம், வசிப்பவர் இல்லாத வீடு காலியாக இருக்குமோ அதே போன்று நம்பிக்கையிலிருந்து முழுவதுமாக காலியாக இருக்கின்றது.

அனைத்து மதங்களையும் பின்பற்றுபவர்கள் அதாவது ஸ்ர்திஷ்தி, புத்தம், இந்து, யூதம், கிறிஸ்தவம், சீக்கியம், முஸ்லிம் போன்றவை அனைத்திலுமே இந்த விஷம் அதை நம்பிக்கை இல்லாமையின் விஷம் என்று சொல்ல வேண்டும். ஏறக்குறைய அனைத்திலுமே பரவிவிட்டது. மேலும் பௌதீகத்தின் சூடு மேலும் தீங்கு விளைவிக்கக் கூடிய காற்று உலகின் எந்த நம்பிக்கையின் பூஞ்சோலையையும் விட்டு வைக்கவில்லை. அதை எரித்து மண்ணாக்கி விட்டது. இது சூரியன் ஆகும். மேலும் இது சந்திரன் ஆகும். மேலும் இது மலையாகும். மேலும் இது நதியாகும். மேலும் இது நம்முடைய வீடாகும். மேலும் இவர் நம்முடைய தந்தை ஆவார். மேலும் இவர் நம் நண்பர் ஆவார். அவர்களுக்கு இறைவன் தொடர்பாக இவ்வாறான நம்பிக்கை உள்ளதா? ஒருவேளை இவ்வாறு இல்லை என்றால் பிறகு நன்கு புரிந்து கொள்ளுங்கள்; எந்த விதமான நம்பிக்கையும் இல்லை.

**இறைவன் இருக்கின்றான் என்றால் நமக்கு ஏன் தென்படுவதில்லை?**

இறைவன் தொடர்பாக பொதுவாக மக்களுடைய உள்ளத்தில் ஒரு சந்தேகம் எழுகின்றது. அது இறைவன் இருக்கின்றான் என்றால் அவன் ஏன் நமது பார்வைக்கு தென்படுவதில்லை என்பதாகும்? இந்த சந்தேகம் இன்றல்ல. மாறாக, எப்பொழுதுமே இருந்து வருகிறது. உலகில் ஒவ்வொரு பொருளையும் அறிந்து கொள்வதற்கு பல்வேறு விதமான வழிவகைகள் இருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக ஏதாவது ஒரு பொருளைப் பற்றி நாம் பார்ப்பதனால் அதனுடைய அறிவு கிடைக்கின்றது. ஏதாவது ஒன்றைக் கேட்பதால் ஏதாவது ஒன்றை சுவைப்பதால் ஏதாவது ஒன்றை நுகர்வதால் ஏதாவது ஒன்றை தட்டிப் பார்ப்பதால் மேலும் ஏதாவது ஒன்றை தொடுவதால் போன்றவையாகும்.... இந்த அனைத்து அறிவுமே ஒரே நம்பிக்கை மற்றும் உறுதி கொண்டது ஆகும். இன்ன பொருள் தொடர்பாக இன்ன வழிமுறை மூலமாக எனக்கு அறிவு வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன் என்று சொல்வதற்கு நமக்கு உரிமை இல்லை. எதுவரை என்னுடைய கண்களின் மூலமாக இன்ன நறுமணத்தை நான் பார்க்கவில்லையோ அதுவரை நான் இதை ஏற்றுக் கொள்ளமாட்டேன். அல்லது எதுவரை மூக்கின் மூலமாக இன்ன நிறத்தை நுகரவில்லையோ நாம் ஒருபோதும் ஒப்புக் கொள்ள மாட்டோம் அல்லது எதுவரை இன்ன குரலை கையால் அடித்து அறியவில்லையோ அதுவரை எங்களுக்கு மன நிறைவு கிடைக்காது. இவ்வாறு சொல்வது மடமையாகும். இவ்வாறாக எந்த நபர் ஆட்சேபனை வைக்கிறாரோ அவர் பைத்தியம் என்று அழைக்கப்படுவார். மேலும் ஒருவேளை அவர் மனநலம் பாதிக்கப்பட்ட இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்றாலும் குறைந்தபட்சம் தெருவில் இருக்கும் சேட்டைகள் செய்யும் சிறுவர்களின் கிண்டலுக்கு கண்டிப்பாக ஆளாவார். நான் மேலே கூறியது போன்று உலகத்தின் பல்வேறு பொருட்கள் சம்பந்தமான அறிவைப் பெறுவதற்கு பல்வேறு விதமான வழிவகைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

அன்பிற்குரியவர்களே! இந்த விஷயத்தை நன்கு நினைவில் கொள்ளுங்கள். ஏதாவது ஒரு பொருள் எந்த அளவுக்குத் திண்ணமாக இருக்கின்றதோ அதை புரிதல் அதாவது அது சம்பந்தமான அறிவைப் பெறுவது மனிதனுடைய வெளிப்படையான புலன்களுக்கு அருகாமையில் இருக்கின்றது. மேலும் எந்த அளவுக்கு ஏதாவது ஒரு பொருள் நுட்பமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அதன் தன்மை மனிதனுடைய வெளிப்படையான புலன்களிலிருந்து தூரமாக இருக்கும். ஆகையால்தான் நாம் பார்க்கின்றோம். எந்தப் பொருளில் மிக அதிகமான நுட்பங்கள் இருக்கின்றனவோ அதன் தன்மையைப் புரிவதற்கு பொதுவாக அதன் தாக்கம் அதன் செயல்கள் மற்றும் விளைவுகளின் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டியதுள்ளது. ஏனென்றால் அதன் தன்மை நம்முடைய வெளிப்படையன புலனுக்கு நேரடியாக புலப்படுவது சாத்தியமில்லை. எதுவரை இந்த வெளிப்படையான கண்களினால் நாம் இறைவனை பார்க்கவில்லையோ ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால் ஒருவேளை இறைவன் இந்த வெளிப்படையான கண்களில் தென்பட்டு விட்டால் அவன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டிய தகுதிக்கு அவன் இல்லை என்று நான் கூறுகின்றேன். ஏனென்றால் அவனை ஒப்புக் கொள்வது நமக்கு எளிமையானதாக ஆகி விடும். இவ்வாறான சூழலில் அதனுடைய மற்ற பண்புகளும் பொய் எனக் கூற வேண்டும். உதாரணமாக, அவன் நுட்பமானவன் என்றாலும் இவ்வாறான சூழலில் அவன் நுட்பமானவனாக இருக்க மாட்டான். மாறாக, திண்ணமான பொருளாக ஆகிவிடுவான். அவன் எல்லையற்றவனாக இருக்கின்றான். ஆனால் இந்த சூழலில் அவன் எல்லைக்குட்பட்டவனாக ஆகிவிடுவான்.

சுருக்கம் என்னவென்றால், அல்லாஹ்வின் மகத்துவம் என்ன விரும்புகின்றது என்றால் அவன் நுட்பமானவன் ஆவான். மேலும் வெளிப்படையான கண்களிலிருந்து மறைந்திருக்க வேண்டும். ஆனால் இதன் காரணமாக அவனுடைய இருப்பு தொடர்பாக ஒருபோதும் எந்த சந்தேகமும் வருவதில்லை. ஏனென்றால் அவனை அறிந்து கொள்வதற்கு இந்த வழியை விட மிக அதிக உறுதியான மேலும் நிர்ணயிக்கப்பட்ட வழிகள் திறந்திருக்கின்றன. அவை நம்முடைய இந்த பௌதீகக் கண்களிலிருந்து மறைந்திருக்கின்றன.

**இறைவன் தொடர்பாக ஏன் ஆராய்ச்சி செய்ய வேண்டும்?**

இயல்பு மற்றும் மனித அறிவு இவை இரண்டும் இறைஇருப்பு தொடர்பான கேள்விகளை எவ்வாறான முறையில் நமக்கு முன்பு வைக்கின்றது என்றால் நாம் இந்த ஆராய்ச்சிக்கு வருவதை மறுக்க இயலாது. நம்மைப் படைத்த ஒருவன் இருக்கிறானா? இல்லையா? என்ற இந்தக் கேள்வி நம்முடன் தொடர்பில்லாத கேள்வியா? நம்மை யாராவது ஒருவன் படைத்தான் என்றால் அவன் யார்? மேலும் எங்கு இருக்கிறான்? என்ற இந்தக் கேள்வி நம்முடன் தொடர்ப இல்லாத கேள்வியா? மேலும் எவ்வாறான பண்புகளைக் கொண்டவன்? நம்மைப் படைத்த ஒருவன் இருக்கின்றான் என்றால் அவன் நம்மைப் படைப்பதற்கான நோக்கம் என்ன என்ற கேள்வி நம்முடன் தொடர்பு இல்லாத கேள்வியா? நம்மைப் படைத்ததற்கான நோக்கம் இருக்கின்றது என்றால் அந்த நோக்கம் எவ்வாறு நிறைவேறும்? இந்தக் கேள்விகள் நம்முடன் தொடர்புடையது என்றால் எந்த அறிவுடையவர் இதை ஆராய்ச்சி செய்ய மறுப்பார்? உலகத்தில் என்ன மார்க்கங்கள் எல்லாம் இருக்கின்றனவோ அவை அனைத்துமே இறைவனுடைய இருப்பு தொடர்பாக கேள்வியை நமது முன்பு வைக்கின்றது. மேலும் அதை நம் முன்பு வைப்பது மட்டுமல்லாமல் அதனுடைய போதனைகளின் மையம் அல்லாஹ்வின் இருப்பு என்ற பண்பாகும்.

உலகத்தில் பல்வேறு மார்க்கங்களின் போதனைகளில் எந்த அளவுக்கு வேறுபாடுகள் இருந்தாலும் அவை அனைத்துமே ஒரு விஷயத்தில் ஒத்த கருத்தைக் கொண்டதாக இருக்கின்றது. அது இந்த அண்ட சராசரத்தைப் படைத்து ஆதிக்கம் செலுத்தும் ஒருவன் இருக்கின்றான். அவனுடைய கட்டுப்பாட்டில் நமது உயிர் உள்ளது. மேலும் இந்தப் படைத்து ஆட்சி செய்கின்ற அவன் நம்முடைய வாழ்க்கைக்கான ஒரு நோக்கத்தையும் நிர்ணயித்துள்ளான். அதை அடைவதற்கான வழிவகையையும் தாமே கூறியும் இருக்கின்றான். மேலும் மரணம் என்பது மனித வாழ்வின் முடிவல்ல. மாறாக மரணத்திற்குப் பிறகு வேறொரு வாழ்க்கை இருக்கிறது. அதில் மனிதன் தன்னுடைய தற்போதைய வாழ்க்கையுடைய செயல்களின் பலனைப் பெறுவான் போன்றவையாகும்.

***இறைவன் தொடர்பாக ஆராய்ச்சி செய்வதற்கான வழிவகை:***

இப்பொழுது நான் மிகவும் சுருக்கமாக இந்த விஷயத்தைக் கூற விரும்புகின்றேன். அதாவது இறைவன் தொடர்பாக ஆராய்ச்சி செய்வதற்கான வழி என்னவாக இருக்க வேண்டும்? ஏனென்றால் ஏதாவது ஒரு பொருள் தொடர்பாக சரியான ஆராய்ச்சி செய்வதற்கான வழி என்ன? என்பது தெரியவில்லையோ அதுவரை அதில் நாம் வெற்றி அடைவது மிகவும் கடினமாகும். ஒரு தவறான வழியை நாம் பின்பற்றி நடந்தால் நம்முடைய முழு முயற்சியும் பயனற்றதாக ஆகிவிடும்.

***ஆராய்ச்சியின் தளத்தில் எண்ணங்களின் புகுதல்:***

ஒரு தத்துவவாதி போன்ற முறையில் இறைவனை ஆராய்வது பயனற்றதாகும். அவர் வெறும் அறிவின் கருவூலத்தை அதிகப்படுத்திக் கொள்வதற்காக இந்த மைதானத்தில் காலெடுத்து வைக்கிறார். அவருக்கு இறைவன் இருக்கின்றான் என்றால் அவன் எவ்வாறான பண்புகளைக் கொண்டவன். மேலும் அவனுக்கு தன்னுடைய அடியார்களுடன் என்ன தொடர்பு உள்ளது? மேலும் அடியார்களுக்கு அவனுடன் என்ன தொடர்பு இருக்க வேண்டும்? மேலும் அவன் வரை சென்று அடைவதற்கான வழி என்ன? என்பதில் எவ்விதமான நோக்கமும் இல்லை.

என்னுடைய அன்பர்களே! நீங்கள் ஒருபோதும் இறைவன் தொடர்பாக தத்துவஞானிகளின் வழியின் முறையைப் பின்பற்றாதீர்கள். ஏனென்றால் இவ்வாறான முறையில் நீங்கள் ஒருபோதும் இறைவனை அடைய முடியாது. மேலும் இந்த தேடுதல் பயனற்றதாகும். இவ்வாறான முயற்சியின் விளைவாக இறைவன் தன்னடைய முகத்தை ஒருபோதும் வெளிப்படுத்த மாட்டான். மாறாக அவன் பார்க்கின்றான். நாம் ஓர் உண்மையான தேடல் மூலமாக அவனை அடைகின்றோமா? இதன் மூலமாக அவனுடைய நெருக்கத்தின் அருட்களில் நாம் மூழ்கி விட வேண்டும். மேலும் அவனுடன் சொந்த தொடர்பை உருவாக்கி நமக்கென முன்னேற்றத்தின் கதவுகளைத் திறக்க முடியும். அதுதான் மனிதனுடைய வாழ்வின் நோக்கமாகும். இந்த முறையில்தான் அவன் வெளிப்படுவான்.

***ஈமான்பில்லாஹ் (இறைநம்பிக்கை) என்பதன் இரண்டு படித்தரங்கள்:***

ஈமான் பில்லாஹ் இரண்டு படித்தரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆரம்பப் படித்தரம் என்னவென்றால் அதைப் பெறுவதற்கு ஒற்றை அறிவின் உதவியால் சாத்தியமாகும். மேலும் இரண்டாவது படித்தரம் என்னவென்றால் அதை ஒற்றை அறிவால் பெறுவது சாத்தியமற்றதாகும். மாறாக அதற்கென்று அறிவின் உதவிக்காக இறைவன் புறமிருந்து சிறப்பான ஓர் ஏற்பாடு உள்ளது. ஒரு படித்தரம் 'இருக்க வேண்டும்' ஆகும். மேலும் இரண்டாவது தரம் 'உள்ளது' ஆகும். ஒற்றை அறிவு ஒருபோதும் நம்மை 'உள்ளது' என்ற தரம் வரை கொண்டு செல்லாது. மாறாக அதன் பணி எந்த அளவு இருக்கின்றது என்றால் இறைவன் தொடர்பாக 'இருக்க வேண்டும்' என்கின்ற அந்த உறுதிப்பாட்டை நம்மில் உருவாக்கி விடுகின்றது.

***இறை இருப்பு தொடர்பாக அறிவுசார்ந்த ஆதாரங்கள்:***

**முன்னெச்சரிக்கை சான்றுகள்:** ஒரு நபர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம், 'இறைவனுடைய இருப்புக்கு என்ன ஆதாரம் உள்ளது?' என்று வினவினார். அன்னார், கேள்வி கேட்பவர் சாதாரண இயல்பு கொண்ட மனிதராக இருப்பதாகப் பார்க்கிறார். பாருங்கள்! ஒருவேளை எந்த இறைவனும் இல்லை என்றால் ஏற்றுக் கொள்பவர், மறுப்பவர் இருவருமே சமமாக இருப்பார்கள். எவருக்கும் எந்தப் பாதிப்பும் இல்லை. ஒருவேளை இறைவன் இருக்கிறான் என்றால் நன்கு நினைவில் கொள்ளுங்கள். நிராகரிப்பவர்களுக்கு ஒருபோதும் நன்மை ஏற்படாது. உங்களுக்கு இந்தப் பதில் போதுமானதாக இருக்கும் என்று பதிலளித்தார்கள். அந்த நபருக்கு இந்தச் சான்றின் மூலமாக மனநிறைவு ஏற்பட்டு விட்டது. மேலும் அவர் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. உண்மையிலேயே ஒருவேளை இறைவன் இல்லையென்றால் நாம் ஏற்றுக் கொள்வதனால் என்ன பாதிப்பு வரப்போகிறது? இறைவனை ஏற்றுக் கொள்வதனால் எந்த விஷயங்களை நாம் விட்டுவிட வேண்டியது உள்ளது? நீங்கள் ஆகுமான முறையில் உண்ணுங்கள்; பருகுங்கள்; உறங்குங்கள்; விழித்தெழுங்கள்; எழுந்திருங்கள்; அமருங்கள்; விளையாடுங்கள்; எழுதுங்கள்; படியுங்கள்; உலகத்தின் பணிகளைச் செய்யுங்கள்; செல்வங்களைச் சம்பாதியுங்கள்; நட்புகளை உருவாக்குங்கள்; திருமணம் முடித்து இல்லறத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்; சந்ததிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் இறைவன் மீது நம்பிக்கை கொள்வதனால் ஒருபோதும் எந்தப் பணியிலிருந்தும் உங்களை தடுப்பதில்லை. மாறாக உங்களுடைய இருப்பிற்கு அல்லது மற்றவர்களுடைய இருப்பிற்கு ஏதாவது தீங்கு மற்றும் பாதிப்பு ஏற்படுமேயானால் அவ்வாறான விஷயங்களிலிருந்து தான் தடுக்கிறது. மேலும் இவ்வாறான வேலைகளிலிருந்து தவிர்ந்து இருப்பது உங்களுடைய இயல்பு, அறிவு மற்றும் நாகரிகத்தின் சட்டம் மற்றும் அரசியல் சட்டத்தின் உரிமையாக இருக்கின்றது.

**இயல்பின் சான்றுகள்:** இறைஇருப்பிற்கான முதலாவது சான்றாக இயல்பின் சான்றை வைக்க வேண்டுமென்று விரும்புகின்றேன். நமது இயல்பு தாமே இந்தக் கேள்வியை நமக்குள் உருவாக்குகின்றது. அதாவது இந்த அகில உலகங்களையும் படைத்தவன், மேலும் அதிபதி இருக்கிறானா? இல்லையா? ஆகையால் இந்தக் கேள்வியை நாம் ஒருபோதும் புறந்தள்ளிவிட முடியாது. (குறிப்பு: இந்தத் தலைப்பில் ஒரு முழுமையான கட்டுரை இந்த வெளியீட்டில் இணைக்கப்பட்டுள்ளது. படிப்பவர்கள் அங்கிருந்து பயன் பெறலாம்.)

***அண்டசராசரத்தின் படைப்பு மற்றும் அகில உலக அமைப்பின் ஆதாரம்:***

சான்றின் முதலாவது பகுதி படைப்பின் இருப்பிலிருந்து படைப்பாளனின் இருப்பின் பக்கம் செல்வதுடன் தொடர்புடையதாகும். தம்முடைய வெளிப்படையான வடிவத்தில் மிகவும் சாதாரணமான –தாகும். இந்த உலகில் இலட்சக்கணக்கான மக்கள் எவ்வறானவர்களாக இருக்கின்றார்கள் என்றால் இந்த பூமி, இந்த வானம், இந்த விலங்கினங்கள், இந்த செடி கொடிகள், வானத்தில் இருக்கும் பொருட்கள், இந்த பூமியினுடைய பகுதிகள், இந்த மனிதனுடைய உடல் ஒரு படைப்பாளியுடைய படைப்பின் பலன் இல்லை. மாறாக

**திருக்குர்ஆனிலிருந்து...**

(எல்லாக் கால முஸ்லிம்களிடமும் நாம் கூறுகிறோம்:) நீர் (மற்றவர்களிடம்) கூறுவீராக: (உண்மையில்) அல்லாஹ் ஒருவனே ஆவான். அல்லாஹ் (எந்தத்) தேவை(யும்) அற்றவன். (எல்லாவற்றிற்கும், அவன் தேவையானவன்.) அவன் எவரையும் பெற வில்லை. அவன் எவராலும் பெறப்படவுமில்லை. (அவனது பண்புகளில்) அவனுக்கு இணை எவரும் இல்லை. (112:2–5)

A. NASIR AHMAD, *Ameer, Melapalayam*

தாமாகவே ஆரம்பத்திலிருந்து வந்து கொண்டிருக்கின்றது என்று நம்மை ஒப்புக் கொள்ள வைக்க நினைக்கின்றார்கள் என்பது பரிதாபமாக உள்ளது. அதாவது அவர்களுடைய கூற்றை நான் எவ்வாறு ஏற்றுக் கொள்வேன்? எனது முன்பு அரேபியக் காட்டரபியின் ஒரு கூற்று உள்ளது. அவரிடம் யாரோ ஒருவர், உம்மிடம் இறைவன் தொடர்பான ஆதாரம் என்ன உள்ளது? என்று வினவினார். அதற்கு அவர் பதில் கூறினார்.

البعرة تدل على البعير واثر القدم على السفير فالسماء
ذات البروج والارض ذات الفجاج اما تدل على قدير

அதாவது ஒரு நபர் ஒரு காட்டைக் கடந்து செல்லும்பொழுது வழியில் ஒட்டகத்தின் சாணத்தைப் பார்க்கிறார் என்றால் அவர் புரிந்து கொள்வார். இந்த வழியாக ஓர் ஒட்டகம் கடந்து சென்றுள்ளது. மேலும் அவர் பாலைவனத்தின் மணலில் மனிதனின் காலடித் தடத்தைப் பார்க்கின்றார் என்றால் அவர் உறுதி கொள்வார். இங்கு ஒரு பயணி கடந்து சென்றிருக்கிறார். என்ன! உங்களுக்கு இந்தப் பூமி அதன் அனைத்து பரந்த வழிகளும், இந்த வானம் அதன் சூரியன் மற்றும் சந்திரன் மற்றும் நட்சத்திரங்களைப் பார்த்து இதைப் படைத்த ஒருவன் இருக்க வேண்டும் என்ற சிந்தனை வரவில்லையா?

அல்லாஹ்! அல்லாஹ்! என்ன ஒரு சத்தியம். பொய்ப்புனைவில் இருந்து தூய்மை, ஆனால் அறிவினால் முழுமையடைந்த ஒரு கூற்று ஆகும். இது அந்த பாலைவனத்தைச் சார்ந்த படிப்பறிவில்லாத ஒருவருடைய நாவிலிருந்து வெளிப்பட்டுள்ளது. ஆனால் அதன் ஆழம் வரை ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் தத்துவவாதிகள் தங்களுடைய நுட்பமான ஞானம் மற்றும் பகுத்தறிவில் அங்கு வரை செல்ல முடியவில்லை.

**மேற்கத்திய ஆய்வாளர்கள் மற்றும் இறைவன் தொடர்பான கொள்கை:**

மூலப்பொருளில் பல்வேறு விதமான உருவங்களை உருவாக்கக் கூடிய சிறப்புத்தன்மை அதன் இயல்பிலேயே இருக்கின்றது என்று அவர்கள் கூறுகின்றனர். மேலும் மூலப்பொருளில் ஒரு நேரத்தில் மிக அற்பமான நிலையிலிருந்து மிக உயர்வான நிலைக்கு முன்னேற்றம் அடையக் கூடியதாக இருக்கிறது. இந்தச் சிறப்பியல்பு அதில் உள்ளது. இரண்டாவதுமுறை மேற்கத்திய ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இந்த உலகம் எப்பொழுதுமே ஒரு சிறப்பான நிர்ணயிக்கப்பட்ட சட்டங்களுக்கு உட்பட்டவாறு தன் வேலையைச் செய்து கொண்டிருக்கிறது. மேலும் இப்பொழுதும் உலகத்தின் ஒவ்வொரு பொருளும் ஒரு சிறப்பான சட்டத்திற்குட்பட்டவாறு நடந்து கொண்டிருக்கிறது. மேலும் நாம் அறிவின் ஆராய்ச்சியின் மூலமாக ஒவ்வொரு மாற்றம் ஒவ்வோர் அசைவு மற்றும் ஒவ்வோர் இருப்பின் உடைய காரணத்தை தெரிந்து கொள்ளலாம்.

நாம் சிறப்பான கவனம் செலுத்தி பார்த்தோம் என்றால் இந்த ஆட்சேபனை ஒரு மகத்துவ மாற்றமாகும். வளர்ச்சி என்பது இறை இருப்பிற்கு எதிரான சான்றாக ஒருபோதும் நாம் கூற முடியாது. ஏனென்றால் இந்த விஷயம் அகில உலகத்தின் உண்மையான ஆரம்பம் சம்பந்தமாக எந்த விதமான கருத்தையும் கூற முடியாது. இதனுடைய தொடர்பு உலகினுடைய தற்போதைய பொருட்கள் எப்பொழுதுமே இதே போன்று இல்லை. மாறாக சிறியதிலிருந்து முன்னேற்றமடைந்தவாறு தம்முடைய தற்போதைய நிலையை வந்தடைந்துள்ளது. ஆனால் அந்த ஆரம்பக் காலத்தில் இருந்த மிகவும் அற்பமான அந்தப் பொருள் எங்கிருந்து வந்தது என்ற கேள்வி உள்ளது? இது தொடர்பாக வளர்ச்சிக்கு சாட்சியாக பேசக் கூடியவர்கள் அறிவு சார்ந்த ஓர் உறுதியான விஷயத்தை அவர்கள் வைக்கவில்லை. வெறும் வளர்ச்சி தொடர்பான இந்த விஷயத்தை இறைவனை மறுப்பதற்கான ஆதாரமாக மட்டுமே அவர்கள் பயன்படுத்துகின்றார்கள். இது எவ்விதமான தாக்கத்தையும் தராது.

நாம் நன்கு கவனித்துப் பார்த்தோம் என்றால் பௌதீக உலகத்தின் அந்த ஆரம்பகால நிலை எவ்வாறு சொல்லப்படுகிறது என்றால் (அதன் பார்வையில் இருந்து அகற்றுவது என்பது சரியா? அல்லது தவறா?) அது தற்போதைய உலகை விட மிகவும் வியக்கத்தக்கதாக மேலும் மனிதனுடைய அறிவை வியப்பில் கொண்டு போய் சேர்ப்பதாகவும் இருக்கின்றது. ஏனென்றால் வெளிப்படையாக தற்போதை உலகிற்கு அந்த ஆரம்ப நிலை விதையைத் தூவும் பணியாக இருந்தது. மேலும் ஒவ்வோர் அறிவுடையவரும் புரிந்து கொள்வார். அதாவது விதை என்பது மரத்துடன் ஒப்பிடும்பொழுது மிக அதிகமாக வித்தியாசத்தையும் மேலும் அதிகமான நுட்பமானதாக இருக்கும். இப்பொழுது எஞ்சியுள்ளது இரண்டாவது ஆட்சேபனையாகும். அதாவது உலகத்தின் ஒவ்வொரு பொருள் ஒவ்வொரு மாற்றம் மேலும் ஒவ்வோர் இருப்பு ஒரு சிறப்பான சட்டத்திற்கு உட்பட்டதாகும். மேலும் நாம் இப்பொழுது ஒவ்வொரு நாளும் இந்த மறைமுகமான இயற்கைச் சட்டம் தொடர்பாக அதிகமதிகமான அறிவை அடைந்து கொண்டு செல்கிறோம். இது மிகவும் பலவீனமான வீணான ஆட்சேபனை ஆகும்.

உண்மை என்னவென்றால், உலகத்தின் அமைப்பு மேலும் இயற்கையின் சட்டங்கள் எந்த அளவுக்கு தன்னுடைய மகத்துவத்தை வெளிப்படுத்துகின்றது என்றால் அந்த அளவுக்கு கீழ் உலகமும் பார்வையுடைய நபர்களின் முன்பு நுட்பமான ஞானங்களும் முழுமையான அறிவும் வல்லமைமிக்க மேலும் புகழப்பட்ட படைப்பாளியின் பக்கம் திரும்புவதற்கு மிக அதிகமான தெளிவை நமக்குக் காட்டுகின்றது. ஆகையால்தான் மேற்கத்திய ஆராய்ச்சியாளர்களில் ஒரு மிகப்பெரிய பிரிவினர் இறைவன் மீது நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கின்றார்கள். மேலும் இந்த புதிய கண்டுபிடிப்புகள் அவர்களுடைய நம்பிக்கையின் வழியில் எவ்விதமான தடையும் ஏற்படுத்துவதில்லை. மாறாக அவர்கள் இதை நாகத்திகத்திற்கு எதிராக ஓர் ஆயுதமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

இதுமட்டுமின்றி மேலும் ஒரு விஷயத்தை நினைவில் கொள்வது அவசியமாகும். மக்கள் அறிவியல் தொடர்பாக பொதுவாக பல அதிபயங்கர தவறில் மூழ்கியிருப்பதுதான் துர்பாக்கியமாகும். அது அறிவியல் அறிஞர்களுடைய கணிப்பு மற்றும் அறிவியலால் நிரூபிக்கப்பட்ட உண்மை இவற்றை பிரித்தறிவதில்லை. அறிவியல் அறிஞர்களின் அறிவிப்புகள் மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்று, அறிவியல் அறிஞர்களுடைய கணிப்புகள். இரண்டு, அறிவியலின் முழுமையடையாத அனுபவங்கள். மூன்று, அறிவியலின் நிரூபிக்கப்பட்ட உண்மைத்துவம். இந்த மூன்றும் தனித்தனியான மகத்துவம் மற்றும் தனித்தனியாக படித்தரங்களைக் கொண்டவை ஆகும். மேலும் இவை அனைத்திற்கும் ஒன்றுபோல் மதிப்பளிப்பது ஒரு மாபெரும் தவறாகும். சிறிதேனும் அறிவு கொண்ட ஒவ்வொரு நபரும் அறிந்து கொள்ளலாம். அதாவது கணிப்புகள் மற்றும் முழுமை அடையாத அனுபவங்கள் வேறாகும். மேலும் நிரூபிக்கப்பட்ட உண்மை என்பது வேறு ஒன்றாகும்.

**இறைவன் படைப்பினம் அல்ல:**

ஓரிடத்தில் ஒரு தவறை சரிசெய்வது அவசியமாகும். அது இந்தச் சந்தர்ப்பத்தில் சில புரியாத மக்கள் சிறப்பாக இளைஞர்களுடைய உள்ளத்தில் இது உருவாகின்றது. மேலும் அது என்னவென்றால்

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவனே அல்லாஹ்; அவனை அன்றி வேறு வணக்கத்திற்குரியவன் இல்லை. அவன் மறைவானதையும், வெளிப்படையானதையும் அறிபவன் ஆவான். அவன் அளவற்ற அருளாளனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (59:23)

A. SAMSUL ALAM
*Qaid, Melapalayam*

இந்த உலகத்தை இறைவன் படைத்திருக்கிறான் என்றால் பிறகு இறைவனை யார் படைத்தார்?

இதை நாம் ஒருவேளை ஒப்புக் கொண்டோமேயானால் எந்த ஓர் இருப்பு இந்த உலகத்தைப் படைத்து அதிபதியாக இருக்கின்றதோ அதை மேலும் வேறு யாராவது ஒருவர் படைத்திருக்க வேண்டும் என்றால் அந்தப் படைப்பாளிக்கான பெயரை நாம் இறைவன் என்று வைக்கின்றோம். மேலும் இதற்கு கீழுள்ள அந்த இருப்பைப் படைப்பினத்தில் சேர்ப்போம்.

ஒவ்வொரு இருப்பு தொடர்பாக அவனுடைய படைப்பாளி மற்றும் அதிபதி யார் என்ற கேள்வி எவருடைய சிந்தனையிலாவது எழுகின்றது என்றால் அதனால் எந்த இருப்பும் நிரூபணம் ஆகாமல் போய்விடும். இதனால் முதலாவது இருப்பு யார் என்பது பற்றி எதையும் நாம் கூற முடியாது. இதற்கு பதில் என்னவென்றால் அறிவு அடிப்படையில் இது சாத்தியமற்றதாகும். அதாவது இந்தத் தொடருக்கு ஓர் ஆரம்ப இருப்பு எதுவும் இல்லை. ஒருவேளை ஏதாவ ஓர் ஆரம்ப இருப்பை நாம் ஒப்புக் கொள்ளவில்லை என்றால் பிறகு நிச்சயமாக இதன் விளைவு என்னவாகும் என்றால் கீழே இருக்கும் அனைத்து இருப்பின் அந்த உண்மைத்துவம் ஆரம்ப அந்த இருப்பின் விளைவால் உருவாக்கப் –பட்டதாகும். மேலும் அதில் ஒன்று இந்த உலகமும் ஆகும். அதை நாம் மறுக்க வேண்டியது வந்துவிடும்.

இறைவனை படைத்து ஆளுகின்றவன் யார்? என்ற இந்தக் கேள்வியே உண்மையில் தவறானதாகும். ஏனென்றால் இறைவன் தொடர்பாக இவ்வாறான கேள்வி உருவாகவே முடியாது. படைப்பாளி மற்றும் படைப்பினம் இந்த இரண்டினுடைய உட்கருத்து ஒன்று மற்றொன்றிற்கு முழுவதுமாக எதிர்மறையானதாகும். மேலும் இந்த விஷயம் அறிவியல் அடிப்படையில் சாத்தியம் இல்லாததாகும். இந்த இரண்டு உட்கருத்து ஓர் இருப்பில் ஒன்று சேர முடியாது. ஏனென்றால் இறைவனுடைய இருப்பிற்கான அந்த விஷயம் விரும்புவது என்னவென்றால் அந்த இருப்பிற்கு இறைவன் என்று பெயர் வைக்க வேண்டும் என்பதாகும். அது எல்லாவற்றிற்கும் மிகவும் உயர்வானதாகும். அங்கு படைப்பினத்திற்கான உட்கருத்து இதற்கு எதிரானதாக உள்ளது. எந்தவோர் இருப்பை நாம் படைப்பினம் என்று கூறுகின்றோமோ அதற்கு மேலே ஒன்று உள்ளது. ஆகையால் இந்த இரண்டு அர்த்தம் எந்த செயலுமே ஓரிடத்தில் ஒன்று திரளாது.

அதாவது, ஓர் இருப்பு இறைவனாகவும் இருக்க மேலும் படைப்பினமாகவும் இருப்பது என்பது சாத்தியமில்லை. மேலும் இது சாத்தியம் இல்லை என்றால் பிறகு நமக்கு ஒப்புக் கொள்ள வேண்டியது வந்து விடும். அதாவது ஓர் இருப்பை நாம் இறைவன் என்று ஒப்புக் கொண்டோம் என்றால் பிறகு அது தொடர்பாக நாம் எங்கு அது உருவானது என்று கேள்வி எழுப்ப முடியாது. மேலும் அதைப் படைத்தவன் யார்? என்ற கேள்வியும் எழுப்ப முடியாது.

மூன்றாவது பதில், இந்த சந்தேகம் தொடர்பாக நான் தர விரும்புவது என்னவென்றால், நாம் சிறிது நேரத்திற்கு இறைவன் படைப்பினம் என்று ஒப்புக் கொள்வோம். மேலும் பிறகு பார்ப்போம். இதன் விளைவு என்னவாக ஆகின்றது? ஒருவேளை இறைவனை படைப்பினம் என்று ஒப்புக் கொண்டோம் என்றால் அவனுடைய அனைத்துப் பண்புகளையும் மறுக்க வேண்டியது வந்து விடும். உதாரணத்திற்கு இறைவன் படைப்பினம் ஆவான் என்றால் அவன் பழமையானதாக இருக்க மாட்டான். மாறாக அவனை ஒரு நிகழ்வாக ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும். ஒருவேளை இறைவன் படைப்பில் இருக்கின்றான் என்றால் அவன் அழிவிலிருந்து ஒருபோதும் தவிர்ந்து இருக்க முடியாது. மாறாக அவனுக்கும் அழிவு ஏற்பட்டு விடும். ஒருவேளை இறைவன் படைப்பினமாக இருக்கின்றான் என்றால் மிகப் பழமையான இருப்பு என்று அவன் ஆக முடியாது. மாறாக அந்தப் பழமையான இருப்பின் உதவியுடன் இருக்கின்றான். அந்த இருப்பு அவனுடைய படைப்பாளியும் அதிபதியும் என்று ஒப்புக் கொள்ள வேண்டியது வரும்.

**ஏன் இந்த உலகத்தையே நாம் படைக்கப்பட்டது இல்லை என்று புரிந்து கொள்ளலாமா?:**

இதற்குப் பிறகு நான் மேலும் ஒரு சந்தேகத்திற்கு பதில் தர விரும்புகின்றேன். ஒரு வேளையில் நாம் இறைவனை படைக்கப்பட்டவன் இல்லை என்று கூறி அவனை தாமே நிரந்தரமாகப் படைப்பாளி மற்றும் அதிபதி இல்லாமல் இருக்கிறான் என்று ஒப்புக் கொண்டோம் என்றால் ஏன் நான் இந்த உலகத்தையும் நிலையானதாகவும் படைக்கப்பட்டது இல்லை என்றும் கூறி விடலாமே! இந்த சந்தேகம் முழுவதுமே சிந்திப்பதன் குறைவினால் உருவானது. மேலும் குருட்டு கற்பனையின் விளைவாகும். இதற்கு மேல் அதற்கு எந்த விதமான மதிப்பும் இல்லை. நாம் உலகத்தை படைக்கப்பட்டது என்று ஒப்புக் கொண்டோம். அதற்கு அனைத்து பொருளுமே படைப்பினமாக இருக்க வேண்டும் என்பது அவசியம் என்பதற்காக அல்ல. இதனால் உலகமும் படைப்பினமாக இருக்க வேண்டும். மாறாக, உலகத்தின் நிலை அதைப் படைக்கப் –பட்டதாக நிரூபிக்கின்றது. ஒவ்வொரு பொருளும் தனக்கென ஒரு சிறப்பான நிலையைக் கொண்டதாக இருக்கின்றது. மேலும் அந்த சிறப்பான நிலைக்குக் கீர் அது தொடர்பாக ஏதாவது ஒரு கருத்தை நிலைநாட்டி விடலாம். உலகத்திலுள்ள எந்த பொருளுமே அதை படைக்கப்பட்டது என்று ஒப்புக் கொள்வது நமக்கு அதனுடைய ஏதாவது ஒரு குறிப்பிட்ட பண்பை இறைவனுக்கு எதிராக மறுக்க வேண்டியது வரும். இது எவ்வாறெனில், அவனை படைப்பினம் என்று ஒப்புக் கொள்வதினால் அனைத்துப் பண்புகளையும் மறுக்க வேண்டியது வருகின்றது.

**நன்மை தீமை தொடர்பாக அறிவின் சான்று:**

இதற்குப் பிறகு இறைஇருப்பிற்கான அறிவுசார்ந்த சான்றுகள் தொடர்பாக இந்த இடத்தில் கூற விரும்புகின்றேன். அது சட்ட ஒழுங்குடன் தொடர்புடையதாகும். அது ஒவ்வொரு மனிதனுடைய இயல்பிலும் வைக்கப்பட்டுள்ளது. நன்மை மற்றும் தீமை தொடர்பான புரிதல் இயல்பாகவே ஒவ்வொரு மனிதனிடமும் வைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தப் புரிதல் மிகப்பெரிய ஆதாரமாகும். மனிதன் தற்செயலாக தாமாகவே உருவாகி விட்டான் என்பதல்ல. மேலும் ஒரு குருட்டு சட்டத்தின் விளைவாகவும் அல்ல. மாறாக ஒரு நன்கு அறிந்த மேலும் நுட்பமான ஞானத்தைக் கொண்ட ஓர் இருப்பு அவனை ஒரு சிறப்பான நோக்கத்தின் கீழ் உருவாக்கியுள்ளது. மேலும் அந்த நோக்கம் என்னவென்றால் மனிதன் தன்னுடைய இந்த இயல்பின் புரிதலை அதாவது ஒரு விதை அவனுக்குள் வைக்கப்பட்டுள்ளது. அது வளர்ந்து தன்னுடைய உயர்வான முன்னேற்றங்களின் கதவுகளைத் திறக்கிறது. மேலும் அந்த முழுமையான ஊற்றின் அழகும் அவனுடைய கருணையும் மேலும் அந்த உயிரின் ஒற்றை ஊற்று அதாவது உயர்வான இறைவனின் பிம்பத்தை தனக்குள் உருவாக்கி எப்பொழுதும் நிலைத்து நிற்கக்கூடிய எல்லாவிதமான அழகும் கருணையும் கொண்ட மிக உயர்வான அந்த உச்சியின் பக்கம் ஏறிக் கொண்டே செல்ல வேண்டும். ஆகையால் தான் திருக்குர்ஆனில் சொல்லப்பட்டுள்ளது. فَأَلْهَمَهَا فُجُورَهَا وَتَقْوَاهَا அதாவது இறைவன் ஒவ்வொரு மனிதனின் இயல்பில் தீமை மற்றும் நன்மைக்கான புரிதலை வைத்திருக்கின்றான். (91:9) மேலும் அவனுக்கு அவனுடைய இயல்பின் மூலமாக இந்த வழி தவறானதாகும். மேலும் இந்த வழி சரியானதாகும்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவனே அல்லாஹ்; படைப்போன்; ஆக்குவோன்; (எல்லாவற்றிற்கும் அவற்றின் நிலைக்கேற்ப) வடிவமைப்போன் ஆவான். மிகச் சிறந்த பண்பு(பெயர்)கள் அவனுக்கே உரியன. வானங்களிலும் பூமியிலும் உள்ளவையெல்லாம் அவனது தூய்மையினை எடுத்துரைக்கின்றன. மேலும் அவன் வல்லவனும், நுண்ணறிவுள்ளவனும் ஆவான். (59:25)

S.S.H. MUHAMMED LEBBAI
*Sec. Taleem, Melapalayam*

மேலும் வேறோர் இடத்தில் கூறுகின்றான்: وَهَدَيْنٰهُ النَّجْدَيْنِ அதாவது நாமே மனிதனுக்கு நன்மை மற்றும் தீமை இந்த இரண்டின் வழியை (அவனுடைய இயல்பின் மூலமாக) காண்பித்துள்ளோம். (90:11)

### பொதுவாக ஏற்றுக் கொள்வதன் சான்று:

இதற்குப் பிறகு நான் கூறப்போகும் சான்று பொதுவான ஏற்றுக் கொள்வதன் சான்றாகும். மேலும் இந்தச் சான்று எவ்வாறான கோட்பாட்டில் பிணைந்துள்ளது என்றால் உலகத்தில் எந்த சிந்தனை அல்லது கொள்கை உலகளாவிய முறையில் இருக்கின்றது. அது எல்லாக் காலத்திலும் நிலைநிற்கக் கூடியதாகும். இதுவே அதன் ஆதாரமாகும். அதாவது அந்த சிந்தனை அல்லது கொள்கை தன்னுடைய கோட்பாட்டின் அடிப்படையில் உண்மை மற்றும் நேர்மையால் பிணைக்கப்பட்டதாகும்.

இப்பொழுது நான் இந்தக் கோட்பாட்டின்படி நம்முடைய விவாதத்தின் கீழுள்ள இந்தக் கேள்வியைக் கவனித்தோம் என்றால் இறைவன் மீது நம்பிக்கை கொள்கின்ற இந்தக் கொள்கை ஒரு எவ்வாறான கொள்கை என்பது நிரூபணமாகி விடும். இதன் மூலமாக அறிவுடைய எந்த மனிதனும் மறுப்பைத் தெரிவிக்க மாட்டான். உலகத்தில் எத்தனை சமுதாயங்கள் இருக்கின்றனவோ அவை பெரிதாக இருந்தாலும் அல்லது சிறிதாக இருந்தாலும், நாகரீகமாக இருந்தாலும் அல்லது நாகரீகமற்றதாக இருந்தாலும், கல்வியறிவு பெற்றதாக இருந்தாலும் அல்லது அறிவீனர்களாக இருந்தாலும் சரியே, எத்தனை சமுதாயமாக இருந்தாலும் மேலும் அவை எங்கு இருந்தாலும் அவை அனைத்து பல்வேறு விதமான கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்த போதிலும் ஒரு விஷயத்தில் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளது. அது உலகம் மற்றும் உலகத்தில் என்னவெல்லாம் இருக்கின்றனவோ அவை அனைத்தும் தாமாகவே உருவாகவில்லை. மாறாக அவற்றைப் படைத்து ஆளுகின்ற ஒருவனைக் கொண்டுள்ளது. மேலும் இந்த சிந்தனை இந்தக் காலகட்டத்தினுடைய சமுதாயம் வரை மட்டுமல்ல. மாறாக எந்தெந்த காலகட்டத்தின் வரலாறு நமது முன்பு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதோ அதில் எந்த சமுதாயமும் விடுபடவில்லை. இந்தக் காட்சிதான் நமக்கு தென்படுகின்றது. எந்த சமுதாயமே இந்தக் கொள்கையில் இருந்து விடுபட்டதாக இல்லை. இந்த உலகம் ஏதோ ஒரு மிகப்பெரிய இரும்பினால் படைக்கப்பட்டதும் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாகவும் உள்ளது.

### என்ன கடவுள் கொள்கை மூடநம்பிக்கையின் விளைவா?

சில மேற்கத்திய எழுத்தாளர்கள் எழுதியுள்ளார்கள். உலகத்தில் சில சமுதாயம் எவ்வாறாக் வாழ்ந்திருக்கின்றது என்றால் ஓரிறைக் கொள்கையைப் பற்றி அவர்கள் அறியாதவர்களாக இருந்தார்கள். இந்த இடத்தில் எவருக்காவது ஐயம் எழுமேயானால் இதற்கு பதில் என்னவென்றால் சில எழுத்தாளர்கள் இவ்வாறு எழுதி இருக்கலாம். ஆனால் நன்கு கவனித்தால் உண்மை தெளிவாகத் தெரிகின்றது. அந்த எழுத்தாளர்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் முழுமையாக ஆராயவில்லை. மேலும் அவர்கள் சில பண்டைய இணைவைக்கும் சமுதாயங்களின் இணைவைப்பின் கொள்கைகளை வெறும் அச்சம் மற்றும் அறிவீனம் மற்றும் மூட நம்பிக்கை என்று நிர்ணயித்துக் கொண்டது. அவர்களின் பிரத்யேக தவறாகும். மேலும் தவறான முறையில் புரிந்து கொண்டார்கள். மேலும் உண்மை என்னவென்றால் இணைவைப்பின் கொள்கை அது அறிவீனத்தின் விளைவாகத்தான் இருக்கும். ஆனால் நிச்சயமாக அது இறை நம்பிக்கையின் ஒரு பகுதியாகும். ஒருபோதும் அசலாக ஆகாது. அதாவது இணைவைப்பின் கொள்கை எப்பொழுதும் இறைவன் மீது நம்பிக்கை கொள்வதில் உருமாறிய நிலையின் விளைவினால் உருவானதாகும். மேலும் இறைநம்பிக்கை முழுவதுமாக அழிந்ததின் விளைவினால் இணைவைப்பின் கொள்கை உருவாகியது என்று ஒருபோதும் கிடையாது. ஆகையால்தான் உலகத்தின் வரலாற்றில் இவ்வாறான உதாரணங்கள் இருக்கின்றன என்றால் ஒரு சமுதாயம் முதலில் இறை நம்பிக்கையின் கொள்கையில் இருப்பது தெரிய வருகின்றது. பிறகு சிறிது சிறிதாக அவர்களில் இணைவைப்பின் சிந்தனைகள் ஊடுருவ ஆரம்பித்து விடுகின்றது.

### நபிமார்களின் வெற்றிக்கான சான்று:

எப்பொழுது இருந்து உலகின் வரலாறு பாதுகாப்பாக இருக்கின்றதோ நாம் பார்க்கின்றோம். அப்பொழுது இருந்து இறைவன் மீது நம்பிக்கை வைக்கும் நபர்கள் மற்றும் இறைவனை மறுக்கின்றவருக்கு (அந்த மறுப்புக் கொள்கைரீதியாக இருந்தாலும் சரியே அல்லது செயல்ரீதியாக இருந்தாலும்) எதிராக போட்டி நடக்கின்றது. வெற்றி எப்பொழுதுமே நம்பிக்கை கொண்டவர்களுடன் இணைந்திருக்கின்றது. இதிலிருந்து தெரிய வரும் விஷயம் என்னவென்றால் நம்பிக்கை கொள்பவர்களுக்கு மறைமுகமான ஒரு கையின் மூலமாக உதவி கிடைக்கின்றது. எல்லா விதமான கருத்து வேறுபாடுகளில் நிராகரிப்பவர்களுக்கு எதிராக நம்பிக்கை கொண்டவர்கள் வெற்றி அடைவார்கள் என்பது என்னுடைய கூற்றின் நோக்கம் அல்ல. ஏனென்றால் பொதுவான நிலைகளில் வெற்றி மற்றும் தோல்வி இயற்கையின் விதிகளுக்கு உட்பட்டதாக இருக்கின்றது. மேலும் நிராகரிப்பவர்கள் வெற்றிக்கான வழியைப் பின்பற்றி வந்தார் என்றால் மேலும் ஒரு நம்பிக்கையாளர் அதைப் பின்பற்றவில்லை என்றால் நிராகரிப்போருக்கு வெற்றி கிடைக்கக் கூடாது. மாறாக நம்பிக்கையாளருக்கு கிடைக்க வேண்டும் என்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. பொதுவான சூழல்களில் இவ்வாறு ஒருபோதும் நடப்பதில்லை. மாறாக வெற்றி எவருடைய பங்கில் இருக்கிறது என்றால் எவர் வெற்றிக்கான வழிகள் செய்கின்றாரோ அவருக்கு தான் கிடைக்கின்றது. அவர் யாராக இருந்தாலும் சரியே. இந்த இடத்தில் உலகத்தின் பொதுவான கருத்து வேறுபாடுகள், போட்டிகள் என்னுடைய நோக்கமல்ல. மாறாக என்னுடைய நோக்கம் என்னவென்றால் எப்பொழுதெல்லாம் ஏதாவது ஒரு நேர்வழியைப் பெற்ற நபர் இந்த வாதத்துடன் உலகத்தின் முன்பு நிற்கின்றாரோ அதாவது இறைவன் புறமிருந்து என்னுடைய வாழ்க்கையின் நோக்கம் நான் நம்பிக்கையை உலகத்தில் நிலைநாட்ட வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதாவது பிறகு அவர் தம்முடைய அந்த நோக்கத்தில் வெற்றி அடைந்தே தீருவார். மேலும் உலகின் எந்த சக்தியும் அவருடைய வெற்றியின் வழியில் தடையாக இருக்காது. ஆகையால்தான் திருக்குர்ஆனின் கூறப்பட்டுள்ளது. كَتَبَ اللّٰهُ لَاَغْلِبَنَّ اَنَا وَرُسُلِىْ அதாவது அவனும் அவனுடைய ரஸூலும் எப்பொழுதும் வெற்றி அடைவார்கள் என்று அல்லாஹ் நிர்ணயித்து வைத்துள்ளான்.

### நல்லடியார்களின் சான்று:

இறைஇருப்பு தொடர்பாக கடைசியான அறிவு சார்ந்த சான்று இந்தக் கட்டுரையில் நான் கூற விரும்புவது என்னவென்றால் அது நல்லடியார்களின் சாட்சியுடன் தொடர்புடையதாகும். அதாவது எவ்வாறான நிபந்தனைகளுடன் இது நிலைநிறுத்தப்பட்டுள்ளது என்றால் பெரும்பாலான நபர்களின் உண்மையான பேச்சுகள் நிரூபணமாகியுள்ளது. மேலும் அவர்களுடைய அறிவு சரியானதாக இருந்தது என்பதில் எந்த விதமான ஐயமும் இல்லை. இந்த விஷயத்துடைய சொந்த சாட்சிகள் முன்னிறுத்தப்பட்டுள்ளன. அதாவது உண்மையிலேயே நம்முடைய ஓர்


**திருக்குர்ஆனிலிருந்து...**

(தூதரே!) என் அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றிக் கேட்டால், நான் அருகில் இருக்கின்றேன்; பிரார்த்தனை செய்கின்றவர் என்னை அழைக்கின்றபோது நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள் கிறேன். எனவே, அவர்களும் என் கட்டளையினை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள் (என்று பதில் அளிப்பீராக). (2:187)

M. SABAHUL ISLAM & A. MOHAIDEEN ALI
Melapalayam

இறைவன் இருக்கின்றான். அவனையே நாம் அதே போன்றுதான் பார்த்துள்ளோம். மேலும் அடையாளம் கண்டுள்ளோம். அவ்வாறு ஒரு தெரியாத பொருளை பார்க்கின்றோம்.மேலும் அறிகின்றோம்.

**இறைவன் மீது நம்பிக்கை கொள்தலின் மகத்துவமிக்க பயன்:**

இதற்குப் பிறகு இறைஇருப்பு தொடர்பாக சில சான்றுகளைக் கூற விரும்புகின்றேன். அது கொள்கையில் நிலைத்து நிற்கக் கூடியதாகும். அதாவது இறைவன் மீது நம்பிக்கை கொள்வதில் தனக்குள் எவ்வாறான மிக முக்கியமான பயன்களை வைத்துள்ளது. அவை அவன் மீது நம்பிக்கை கொள்ளவில்லை என்றால் வேறு எந்த வழியிலும் முழுமையை அடைய முடியாது.

**இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுதல் என்பது ஒருமை மற்றும் சகோதரத்துவத்தின் ஆன்மாவை உருவாக்குகின்றது:**

இறைவன் மீது நம்பிக்கை கொள்வதால் முதன் முதலில் நமக்கு கிடைக்கும் பயன் என்னவென்று கூற விரும்புகிறேன். அது மக்களுடைய உள்ளத்தில் ஒருமை மற்றும் சகோதரத்துவத்தின் ஆன்மாவை உருவாக்குவதற்கு மிக முக்கிய வழியாக ஆகின்றது. மேலும் இந்த ஆன்மா மனித சந்ததிகளின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்கு மிக அவசியமான மற்றும் பயனுள்ள காரணியாகும். இந்த இடத்தில் எவருடைய உள்ளத்திலும் ஒரு சந்தேகம் எழலாம். அதாவது இறைவனை மறுக்கக் கூடியவர்கள் கூட சில நேரங்களில் மற்றவர்களுடன் நேசம் மற்றும் கருணையுடன் நடந்து கொள்கின்றனர். பொதுத் தொண்டின் பணிகளில் ஆர்வம் காட்டுகின்றனர். இதில் இருந்து தெரிய வரும் விஷயம் என்னவென்றால் அவர்களிடம் அந்த ஆன்மாவை உருவாக்குவதற்கு இறைவனிடம் நம்பிக்கை கொள்வது அவசியம் இல்லை. இதற்குப் பதில் என்னவென்றால் இந்த ஆன்மா உருவாகுவதற்கு இறைவன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். மேலும் வேறு எந்த வழியிலும் இது உருவாகாது என்று ஒருபோதும் வாதம் செய்யவில்லை. மாறாக பெரும்பாலான பொருட்கள் இதற்கு காரணியாக அமைகின்றது என்பதுதான் நம்முடைய கூற்றாகும். ஆனால் நாம் உறுதியான இந்த விஷயத்தைக் கூறுகிறோம். அனைத்து ஆதமுடைய சந்ததிகளும் ஒட்டுமொத்தமாக அதன் ஆரம்பமும் முடிவும் அதற்குள் ஏற்படுகின்ற இந்த ஆன்மா இறைவன் மீது நம்பிக்கை கொள்வதன் காரணத்தால் தான் உருவாக முடியும். மேலும் மீதமுள்ள அனைத்து வழியும் தன்னுடைய சூழல் மற்றும் அதன் வீரியம் இதற்குப் போட்டியிட முடியும்.

**இறை நம்பிக்கை என்பது தீமையைத் தூண்டுவதிலிருந்து தடுக்கிறது. மேலும் நன்மையின் பக்கம் ஆர்வத்தைத் தூண்டுகிறது:**

இரண்டாவது மிகப் பெரிய பயன் இறைவன் மீது நம்பிக்கை கொள்வதால் உலகிற்கு கிடைப்பது என்னவென்றால் இறைவன் மீது நம்பிக்கை கொள்வது மனிதனை தீமை செய்வதிலிருந்து தடுக்கின்றது. ஏனென்றால் யாராவது ஒருவர் இறைவன் மீது நம்பிக்கை கொள்கின்றான். அதனுடன் அவர் ஒரு விஷயத்தின் மீது உறுதி கொள்கின்றார். அதாவது நான் தீமையைச் செய்தேன் என்றால் இறைவன் என்னில் கோபித்துக் கொள்வான். மேலும் அவன் அந்த கோபத்தின் விளைவாக எனக்கு ஏதாவது ஒரு கஷ்டம் ஏற்படும் அல்து ஏதாவது ஒரு தண்டனையை அனுபவிக்க வேண்டியது வரும். மேலும் நான் தீமையிலிருந்து என்னைக் காத்துக் கொண்டேன் என்றால் இறைவன் என்னிடம் மகிழ்ச்சி அடைவான். மேலும் அவனது மகிழ்ச்சி எனக்கு பயனுள்ளதாக இருக்கும். மேலும் நான் அன்பளிப்பு மற்றும் கண்ணியத்திற்கு உரிமையாளராக ஆக்கப்படுவேன். ஆகையால் இந்த சிந்தனையின் விளைவாக ஒவ்வொரு நபரும் இறைவன் மீது நம்பிக்கை கொள்கின்றார். மேலும் அவருடைய நம்பிக்கை வெறும் பகட்டு அல்ல. அவர் மற்றவரை விட அதிகமாக பாவத்திலிருந்து தப்பித்தவராக இருப்பார்.

**இறைவன் தொடர்பான கொள்கை பொருட்களின் உண்மைத் –துவத்தை அறிந்து கொள்வதற்கான உதவியாக இருக்கின்றது:**

இறைவன் மீது நம்பிக்கை கொள்கின்ற நபருடைய உள்ளம் நம்பிக்கை மற்றும் உறுதி மூலமாக நிறைந்திருக்கின்றது. அதாவது உலகத்தின் ஒவ்வொரு பொருளும் என்னுடைய இறைவனால் உருவாக்கப்பட்டதாகும். மேலும் இறைவன் ஒவ்வொரு பொருளையும் ஒரு சிறப்பான நோக்கத்திற்காக படைத்திருக்கின்றான். ஆகையால் உலகத்தின் எந்தப் பொருளும் வீணானதும், பொய்யும் அல்ல. மாறாக தம்முடைய படைப்பின் நோக்கத்திற்குக் கீழ் அதற்கு நிர்ணயிக்கப்பட்ட அந்தப் பணியை முழுமைப்படுத்துகின்றன. மேலும் நிரூபணமாகும் விஷயம் என்னவென்றால் இந்த உறுதி பொருட்களின் உண்மைத்துவத்தை ஆராயும் விஷயத்தில் மனிதனுக்குள் ஒரு சிறப்பான ஆர்வத்தையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்துகிறது. அது இல்லாமல் ஒருபோதும் இந்த நிலையை அடைய முடியாது.

**இறைஇருப்பின் கொள்ளை உள்ளத்தில் அமைதியை உருவாக்குகின்றது**

ஐந்தாவது மிகப்பெரிய பயன் இறைஇருப்பின் கொள்கை உலகத்திற்கு கிடைக்கப்போவது என்னவென்றால் இறைவன் மீது நம்பிக்கை கொள்வது மனிதனுடைய உள்ளத்தில் ஒரு நிம்மதியான சூழலை உருவாக்குகின்றது. மேலும் இந்த உள்ளத்தில் நிம்மதி வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் மனிதனுக்கு பயனடையக் கூடியதாக இருக்கின்றது.

**இறைஇருப்பின் கொள்கையின் மூலமாக ஒழுக்கத்தின் தரம் உயர்வனாகதாக இருக்கின்றது:**

ஆறாவது மிகப் பெரிய பயன் இறைவன் மீது நம்பிக்கை கொள்வதன் விளைவாக உலகத்திற்கு கிடைப்பது என்னவென்றால் இறைவன் மீது நம்பிக்கை கொள்வது உலகத்தில் ஒழுக்கத்தின் தரத்தை உருவாக்கக் கூடியதாக இருக்கின்றது. அது இறைவன் இல்லாமல் ஒருபோதும் நிலைநாட்ட முடியாது. நிரூபணம் என்னவென்றால் மனிதன் ஓர் உயர்வான இருப்பினால் படைக்கப்பட்டவன் ஆவான். மேலும் நிரூபணம் என்னவென்றால் இவ்வாறான சூழலில் மனிதனுக்கு அந்த உயர்வான இருப்பைத் தவிர வேறு எந்த முன்மாதிரியும் பின்பற்றத் தகுதி பெற்றதாக இல்லை. மேலும் அவனுடைய ஒழுக்கத்தின் அந்தத் தரம் அவனைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. அந்த படைப்பாளியும் அதிபதியுமான இறைவனுடைய பண்புகளில் தம்மை மாய்த்துக் கொள்ள வேண்டும்.

ஆகையால்தான் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: تَخَلَّقُوا بِأَخْلَاقِ اللهِ அதாவது மக்களே! உங்களுடைய ஒழுக்க நெறிகளை இறைவனுடைய ஒழுக்க நிலைக்கு ஏற்றவாறு ஆக்கிக் கொள்ளுங்கள்.

**- தமிழாக்கம்: மவ்லவி சஹாபுத்தீன்**

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவனே அல்லாஹ்; அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு இல்லை. அவன் அரசன்; தூயவன்; சாந்தியின் பிறப்பிடம்; பாதுகாப்பு அளிப்பவன்; கண்காணிப்பவன்; வல்லவன்; உடைந்த உள்ளங்களை இணைப்பவன்; மிக மேலானவன். அவர்கள் (அவனுக்கு) இணைவைக்கின்றவற்றிலிருந்து அல்லாஹ் தூயவன். (59:24)

A. BASHEER AHMAD
*Naib Sec. Mal, Melapalayam*

# குர்ஆன், ஹதீஸ், மல்ஃபூஸாத்தின் ஒளியில் இறை பண்புகள்

(மஃமுனூர் ரஷீது தப்ரேஸ் – முரப்பி ஸில்ஸிலா, அஹ்மதிய்யா வரலாற்றுத் துறை)

இறைவன் அனைத்துலகங்களின் படைப்பாளனாக இருப்பதுடன் அவன் அனைத்து இருப்புகளின் உயிர் ஆவான். அவன் எல்லா இடங்களிலும் இருக்கிறான். எல்லாப் பொருட்களும் அவனது கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அவன் அறிவுக்கு அப்பாற்பட்ட ஒன்றும் இல்லை. மனிதன் தனது பௌதீகக் கண்களால் அவனை காண முடியாது. ஆயினும் உலகப் பொருட்களும் கூறுகளும் அவற்றின் பண்புகளைக் கொண்டு அறியப்படுவதைப் போன்று இறைத் தோற்றத்தைத் தேடுபவர்கள் இறைவனை அவனது பண்புகளின் வாயிலாக உணர்கின்றனர். உண்மை யாதெனில் இறை இருப்பின் உணர்வானது இறை பண்புகளின் வெளிப்பாட்டில் தான் ஏற்படுகிறது. மனித இருப்பும் கூட இதற்குச் சான்றாகும். ஏனெனில் மனிதனையும் இறைவன் தனது பண்புகளின் வெளிப்பாடாகவே படைத்துள்ளான்.

தனது பண்புகள் குறித்து இறைவன் சுயமாக திருக்குர்ஆனில் கூறுகிறான்:

وَلِلّٰهِ الْاَسْمَآءُ الْحُسْنٰى فَادْعُوْهُ بِهَا ۖ وَذَرُوا الَّذِيْنَ يُلْحِدُوْنَ فِيْٓ اَسْمَآئِهٖ ۚ سَيُجْزَوْنَ مَا كَانُوْا يَعْمَلُوْنَ

பொருள்: மேலும் முழுமையான நற்பண்புகள் (எல்லாம்) அல்லாஹ்வுக்கே உரியன. எனவே நீங்கள் அவற்றைக் கொண்டு அவனிடம் வேண்டுங்கள். அவனுடைய பண்புகளைக் குறித்து தவறிழைப்பவர்களை விட்டு விடுங்கள். அவர்களுக்கு அவர்களின் செயல்களுக்குரிய கூலி கொடுக்கப்படும். (7:181)

இறைவன் தனது முழுமையான நற்பண்புகள் பற்றிய அறிவை மனிதனுக்கு ஸூஃபிகள் செய்வது போன்று அவற்றைப் படிப்பதும் அடிக்கடி ஓதுவதும் மட்டும் போதுமானது என்பதற்காக வழங்கவில்லை. ஒருபோதும் அவ்வாறில்லை. மாறாக அழகிய பெயர்களில் உள்ள பண்புகளைக் கருத்தில் கொண்டவாறு இறைவனை நினைவுகூர வேண்டும். அப்போதுதான் இறை பண்புகள் மனிதனிடம் வெளிப்படும். மேலும் மனிதன் அப்பண்புகளை தன்னகத்தே உருவாக்க வேண்டும். இறைவனின் பண்புகள் அவனது அழகிய பெயர்களின் தொகுப்பேயன்றி வேறில்லை. அவனுடைய ஒவ்வொரு பெயரிலிருந்தும் அவனது பண்பும் சிறப்பும் வெளிப்படுகிறது. நபிமொழியில் வருகின்றது. அல்லாஹ்வின் (பண்புப்) பெயர்கள் 99 ஆகும். எவர் தனது வாழ்வில் அவற்றை கருத்தில் கொண்டு அவற்றை வெளிப்படுத்த முயற்சிப்பாரோ அவர் சுவர்க்கத்தில் நுழைவார்.

(திர்மிதி கிதாபுத் த.ஃவாத் ஃபீ அஸ்மாஇல் ஹுஸ்னா 3507)

மேற்கூறப்பட்ட நபிமொழியில் எடுத்துரைக்கப்பட்ட வரிசையின் அடிப்படையில் இப்பெயர்கள் கீழே தரப்படுகின்றன.

1. الرَّحْمٰنُ (அர்ரஹ்மான்): திருக்குர்ஆனின் முதல் வசனம் பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம் -ல் இதுபற்றி கூறப்பட்டுள்ளது. மனிதனுக்கு பயன்படும் வகையில் ஒருங்கே படைக்கப்பட்ட நீர், ஒளி, காற்று போன்றவற்றை ரஹ்மான் எனும் பண்பின் அடிப்படையில் எவ்வித நிற, குல பாகுபாடின்றி அல்லாஹ் படைப்பினங்களுக்கு பயனடையச் செய்கின்றான்.

2. الرَّحِيْمُ (அர்ரஹீம்): இதன் பொருள் நல்ல செயல்களை வீண் செய்யாமல் தன்னுடைய படைப்பினங்களுக்கு தனது கருணையாளன் என்கின்ற பண்பின் அடிப்படையில் கூலிகளை வழங்குபவன் என்பதாகும்.

3. الْمَلِكُ (அல் மலிக்): மலிக் எனும் பண்பில் முழு உலகிலும் ஒவ்வொரு பொருளிலும் ஒவ்வொரு அணுவிலும் இறைவனது முழுமையான ஆதிக்கம் வெளிப்படுகின்றது.

4. الْقُدُّوْسُ (அல் குத்தூஸ்): மனிதனால் உணரப்படுகின்ற அல்லது சித்தரிக்கப்படுகின்ற அனைத்து காரணிகள் மற்றும் குறைகளிலிருந்தும் அவன் தூய்மையானவன் ஆவான்.

5. السَّلَامُ (அஸ்ஸலாம்): எல்லாவித பாதிப்புகளிலிருந்தும் பாதுகாப்பவன் ஆவான். அமைதியின் பிறப்பிடமாகவும், அமைதி வழங்குபவனாகவும் இருக்கின்றான். ஆனால் இறை பெயர்களில் இது சாலிம் அதாவது எல்லா வகையான குறைகள் மற்றும் இழப்பு -களிலிருந்தும் பாதுகாப்பான தூயவன் என்றும் பொருளாகும்.

6. الْمُؤْمِنُ (அல் முஃமின்): தனது வாக்குறுதிகளில் உண்மை -யானவன். தன்னுடைய தண்டனைகள் மற்றும் எல்லா விதமான துன்பங்கள் மற்றும் குறைகளிலிருந்து அமைதியை வழங்கக் கூடியவன்.

7. الْمُهَيْمِنُ (அல் முஹைமின்): எல்லாருடைய செயல்களின் பாதுகாப்பாளனாகவும் அறிந்தவனாகவும் சாட்சியாகவும் இருக்கின்றான்.

8. الْعَزِيْزُ (அல் அஸீஸ்): ஈடிணையற்றவன், எல்லாவற்றின் மீதும் ஆதிகம் செலுத்துபவன்.

9. الْجَبَّارُ (அல் ஜப்பார்): ஒழுங்குபடுத்துபவன். மனிதனுடைய தவறுக்கான சீர்திருத்தத்தின் காரணிகளை உருவாக்குபவன். உண்மையில் ஜப்பார் என்பதன் பொருள் உடைந்ததை இணைப்பது மற்றும் ஒருவருடைய நிலையைச் சீர்திருத்துவது மேலும் ஒருவரை தனது ஆற்றல் மற்றும் ஆதிக்கத்தினால் செயல்பட வைப்பது என்பதாகும்.

10. الْمُتَكَبِّرُ (அல் முதகப்பிர்): எல்லாப் படைப்பினங்களின் குறைகள் மற்றும் படைப்பினங்களின் பண்புகளிலிருந்தும் தூயவன். அனைத்து சிறிய பெரிய மற்றும் எல்லா விதமான இணை வைத்தலிலிருந்தும் அவனுடைய இருப்பானது தூயதும் மேன்மை ஆனதும் ஆகும்.

11. الْخَالِقُ (அல் காலிக்): அனைத்து பொருட்களையும் முழுமையான மதிநுட்பத்துடன் கணிப்பவனும், இவ்வுலகிலுள்ள அனைத்து பொருள்களையும் உருவாக்குபவனுமாவான்.

12. الْبَارِئُ (அல் பாரீ): ஒவ்வொரு பொருளிலிருந்தும் அழகிய சாராம்சத்தைப் பிரிந்துத் தருபவனும், ஒன்றுமற்றதிலிருந்து உருவாக்குபவனும், இல்லாத ஒன்றிலிருந்து உருவாக்குபவனும் ஆவான்.

13. الْمُصَوِّرُ (அல் முஸவ்விர்): படைப்பினங்களின் விதவிதமான வடிவமைப்பவன். உருவத்தை வழங்குபவன். உருவத்தைச் சீர்படுத்துபவன். முஸவ்விர் என்ற வார்த்தை இறுதி நிலையின் பொருளில் வருகின்றது. அதாவது வடிவமைப்பது உருவமைப்பது என்கின்ற பொருளில் அது வெளிப்படுத்தப்படுகின்றது.

14. الْغَفَّارُ (அல் கஃப்பார்): மிக மன்னிப்பவனும், பாவங்களை மூடி மறைப்பவனுமாவான்.

15. الْقَهَّارُ (அல் கஹ்ஹார்): முழு ஆதிக்கம் செலுத்துபவன் ஆவான். ஆட்சியாளனாக இருக்கின்றான். கஹ்ர் என்பதற்கு அரபி மொழியில் ஆதிக்கம் மற்றும் ஆற்றல் என்பதனைக் குறிக்கும். காஹிர் என்ற வார்த்தையின் பொருள் ஆதிக்கம் செலுத்தக் கூடியவன், ஆற்றல் படைத்தவன் என்று பொருள்படும்.

16. الْوَهَّابُ (அல் வஹ்ஹாப்): வழங்குபவன் ஆவான். கொடுப்பது மற்றும் வழங்குவதற்கு வஹப மற்றும் ஹிபா என்று கூறுவார்கள். வஹ்ஹாப் என்பது மிகைச் சொல்லாகும். அதாவது மிக அதிகமான வழங்கக் கூடியவன் மற்றும் நிரந்தரமாக வழங்கக் கூடியவன் என்பதாகும்.

17. الرَّزَّاقُ (அர்ரஸ்ஸாக்): படைப்பினங்களுக்கு உணவளிப்பவன் ஆவான். இந்த பண்பானது ராஸிக் எனும் பண்பின் மிகைச் சொல் ஆகும்.

18. الْفَتَّاحُ (அல் ஃபத்தாஹ்): பிரச்சனையைத் தீர்ப்பவன். அடியார் மீது ஆட்சி செய்பவன்.

19. الْعَلِيْمُ (அல் அலீம்): நன்கு அறிபவனாவான். நிரந்தர ஞானம் உடையவன் ஆவான்.

20. الْقَابِضُ (அல் காபிஸ்): மக்களுக்கான ரிஸ்கை தடுத்து வைப்பவன்.

21. الْبَاسِطُ (அல் பாஸித்): மக்களுக்கான ரிஸ்கை அதிகரித்துத் தருவன்; செழிப்புறச் செய்பவன்.

22. الْخَافِضُ (அல் காஃபிஸ்): கட்டுப்படாதவர்களைத் தோல்வி அடையச் செய்பவன்.

23. الرَّافِعُ (அர் ராஃபிஃ): கட்டுப்படுபவர்களின் அந்தஸ்தை உயர்த்துபவன். அவர்களுடைய மரணத்திற்குப் பிறகு அவர்களை உயர்த்துபவன்.

24. الْمُعِزُّ (அல் முஇஸ்): கண்ணியத்தை வழங்குபவன்.

25. الْمُذِلُّ (அல் முதில்): இழிவை வழங்குபவன். (3:27)

26. السَّمِيْعُ (அஸ்ஸமீஃ): நன்கு கேட்பவன். எல்லாரிடமும் கேட்பவன். துஆவை ஏற்றுக் கொளப்வன்.

27. الْبَصِيْرُ (அல் பஷீர்): நன்கு பார்க்கக் கூடியவன். தெளிவான பார்வை உடையவன்.

28. الْحَكَمُ (அல் ஹகம்): படைப்பினங்களின் நீதிபதி. மிகச் சரியாக தீர்ப்பு வழங்குபவன்.

29. الْعَدْلُ (அல் அத்ல்): நீதிமான்; நேர்மையாளன்; தீர்ப்பில் அநீதி இழைப்பவன் அல்லன்.

30. اللَّطِيْفُ (அல் லதீஃப்): மென்மையானவனும் கருணை -யாளனும் ஆவான். ஆழ்ந்த பார்வை உடையவன்.

31. الْخَبِيْرُ (அல் கபீர்): எச்சரிக்கையானவன்; அறிவு படைத்தவன்; ஞானி; அறிந்திருப்பவன்.

32. الْحَلِيْمُ (அல் ஹலீம்): சகித்துக் கொள்பவன்; மென்மை -யானவன். அல்லாஹ் ஹலீம் என்று அழைக்கப்படுவதன் காரணம் அவர்களுக்கு தண்டனை வழங்குவதில் அவசரப்படுவதில்லை.

33. الْعَظِيْمُ (அல் அஸீம்): கண்ணியமிக்கவன்; மகத்துவம் மிக்கவன்.

34. الْغَفُوْرُ (அல் கஃபூர்): மிக்க மன்னிப்பவன்; மூடி மறைப்பவன்; தவறுகளை மறைப்பவன்.

35. الشَّكُوْرُ (அஷ்ஷகூர்): மதிப்பளிப்பவன்; அல் கஃபூர் மற்றும் அஷ்ஷகூர் இவ்விரண்டு பண்புகளும் ஒருசேரவும் பயன்படுத்தப் -பட்டுள்ளன.

36. الْعَلِيُّ (அல் அலிய்யு): உயர்ந்தவன்; அல்லாஹ் அனைவரையும் விட மேன்மையான அந்தஸ்தை உடையவன் ஆவான்.

37. الْكَبِيْرُ (அல் கபீர்): கண்ணியமிக்கவன்.

38. الْحَفِيْظُ (அல் ஹஃபீஸ்): மேற்பார்வையாளன்; எல்லாரையும் பாதுகாப்பவன்.

39. الْمُقِيْتُ (அல் முகீத்): கண்காணிப்பவன்; எல்லாவற்றின் மீதும் முழுமையான ஆற்றல் பெற்றவன்.

40. الْحَسِيْبُ (அல் ஹஸீப்): கணக்கு வழக்கு தீர்ப்பவன்; போதுமானவன்.

41. الْجَلِيْلُ (அல் ஜலீல்): புகழுக்குரியவன்; மேன்மையானவன்; கோபத்தின் அடையாளங்களை வெளிப்படுத்துபவன்.

42. الْكَرِيْمُ (அல் கரீம்): பரந்த மனம் உடையவன்; தண்டனை வழங்க ஆற்றல் பெற்றிருந்தும் மன்னிப்பவன் ஆவான்.

43. الرَّقِيْبُ (அர் ரகீப்): கண்காணிப்பவன்; மேற்பார்வையாளன். திருக்குர்ஆனில்

44. الْمُجِيْبُ (அல் முஜீப்): துஆவை ஏற்றுக் கொள்பவன்; பதில் அளிப்பவன்.

45. الْوَاسِعُ (அல் வாஸி): வளம் நிறைந்தவன்.

46. الْحَكِيْمُ (அல் ஹகீம்): மிக்க ஞானமுடையவன். பொருள்களின் உண்மமையை அறிந்தவன்.

47. الْوَدُوْدُ (அல் வதூது): மிகவும் அன்பு கொள்ளக் கூடியவன்.

48. الْمَجِيْدُ (அல் மஜீது): கண்ணியத்திற்குரியவன்; மேன்மை -யானவன்; பெருமை உடையவன்.

49. الْبَاعِثُ (அல் பாஇஸ்): மறுவாழ்வு வழங்குபவன்; உலகில் ஆன்மீக மரணம் நிகழும்போது வாழ்வின் ஆன்மாவை ஊதுபவன்; தூதரை அனுப்புபவன்; உறங்குபவர்களை எழுப்புபவன்.

50. الشَّهِيْدُ (அஷ்ஷஹீது): உடனிருப்பவன்; மேற்பார்வையாளன்; சாட்சி மற்றும் கண்காணிப்பவன். ஷஹீது என்பதன் பொருள் உடன் இருத்தல் என்பதாகும். ஷஹாதத் என்பதன் பொருள் சாட்சி கூறுதல் என்பதாகும்.

51. الْحَقُّ (அல் ஹக்): உண்மை மற்றும் சத்தியத்தின் தலையூற்று. தன்னுடைய இருப்பில் அழிவு மற்றும் மாற்றம் நிகழ முடியாது என்பதை நிரூபணமான ஓர் இருப்பு ஆவான்.

52. الْوَكِيْلُ (அல் வகீல்) பாதுகாவலன். எவனிடம் தமது எல்லாப் பணிகளையும் ஒப்படைத்து விடுவோமோ, அனைத்து உரிமைகளும் எவனது கட்டுப்பாட்டில் இருக்குமோ அவனை வக்கீல் என்று அழைப்பர். ஏனெனில் அல்லாஹ் தீர்வையும் தன்னுடைய கரங்களிலேயே வைத்திருப்பதால் அவன் வக்கீல் மற்றும் சிறந்த வக்கீலாக இருக்கிறான்.

53. الْقَوِيُّ (அல் கவி): ஆற்றல் உடையவன்; தனித்தவன்; முழுமையான வல்லமை உடையவன்.

54. الْمَتِيْنُ (அல் மத்தீன்): ஆற்றல் படைத்தவன்; வலிமை உடையவன்.

55. الْوَلِيُّ (அல் வலீ): நேசம் கொள்பவன்; உதவி புரிபவன். அல்லாஹ் இறையச்சம் உடையவர் மற்றும் நேர்வழி நடப்பவர் உடைய வலீயாக இருக்கின்றான். அவர்களுக்கு உதவி புரிகின்றான்.

56. الْحَمِيْدُ (அல் ஹமீது): எல்லா விதமான புகழுக்கும் உரியவன்.

57. الْمُحْصِى (அல் முஹ்ஸீ): எல்லாப் பொருளையும் தனது அறிவின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவன்.

58. الْمُبْدِئُ (அல் முப்திஃ): முதல் முறை உருவாக்குபவன்; ஆரம்பிப்பவன்.

59. الْمُعِيْدُ (அல் முஈது): மறுபடியும் உருவாக்குபவன்; மறுமுறை செய்பவன்.

60. الْمُحْيِى (அல் முஹ்யீ): படைப்பினங்களுக்கு வாழ்வை அளிப்பவன்.

61. الْمُمِيْتُ (அல் முமீத்): அழிப்பவன்; மரணத்தை வழங்குபவன்.

62. الْحَيُّ (அல் ஹய்): அவன் உயிருள்ளவன். மேலும் மற்றவர் -களுடைய வாழ்விற்கு ஆதாரம் மற்றும் காரணியானவன். என்றென்றும் உயிருடன் இருப்பவன்.

63. الْقَيُّوْمُ (அல் கய்யூம்): தாமாக நிலைத்திருப்பவன்.

64. الْوَاجِدُ (அல் வாஜிது): தேவைகளற்றவன்; செழிப்பானவன்.

65. الْمَاجِدُ (அல் மாஜிது): கண்ணியமிக்கவன்.

66. الْوَاحِدُ (அல் வாஹிது): தனித்தவன்; ஏகன்.

67. الْأَحَدُ (அல் அஹது): ஒருவன். அவனைப் போன்று வேறு யாரும் இல்லை. அதிகாரம் அல்-இக்லாஸில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: قُلْ هُوَ اللّٰهُ أَحَدٌ நீர் கூறுவீராக! அல்லாஹ் ஒருவனே ஆவான். நமது மொழியில் ஒருவன் மற்றும் தனித்தவன் ஆகியவற்றிலுள்ள வித்தியாசம்தான் 'அஹது' மற்றும் 'வாஹிது' என்பதில் உள்ளது. இதனையும் இங்கு தெளிவுபடுத்துவது அவசியமாகும்.

68. الصَّمَدُ (அஸ்ஸமது): தேவைகளற்றவன்; செழிப்பானவன்.

69. الْقَادِرُ (அல் காதிர்): வல்லமை படைத்தவன்.

70. الْمُقْتَدِرُ (அல் முக்ததிர்): எல்லா ஆற்றலும் கொண்டவன். முக்ததிர் மற்றும் காதிர் ஆகிய இரண்டும் ஒரே பொருளுடைய தாகும். ஆயினும் முக்ததிர் மிகைச் சொல்லாகும்.

71. الْمُقَدِّمُ (அல் முகத்திம்): மேலும் முன்னேறச் செய்பவன்.

72. الْمُؤَخِّرُ (அல் முஅஹ்ஹிர்): பின்வாங்கச் செய்பவன்.

73. الْأَوَّلُ (அல் அவ்வல்): முதல். திருக்குர்ஆனில் இறைவனைப் பற்றி, அவன் அனைவரையும் விட முதலானவன். அவனுக்கு முன் எதுவும் இருந்திருக்கவில்லை. படைப்பினங்களில் இறைவனுக்கு முன் இருந்த எப்பொழுதும் கிடையாது.

74. الْآخِرُ (அல் ஆஹிர்): இறுதி. திருக்குர்ஆனில் இறைவனைப் பற்றி, அனைத்தும் அழியக் கூடியவை. மேலும் அழிவிற்குப் பிறகு அவனையன்றி வேறு எதுவும் இல்லை.

75. الظَّاهِرُ (அஸ்ஸாஹிர்): வெளிப்படையானவன்; தெளிவானவன்.

76. الْبَاطِنُ (அல் பாத்தின்): மறைவானவன்; இரகசியமானவன்.

77. الْوَالِي (அல்வாலீ): அனைத்து செயல்களுக்கும் பொறுப்பானவன். மேலும் அனைவருக்கும் எஜமானன் ஆவான். செயல்படுத்துபவன்; உதவியாளன்.

78. الْمُتَعَالِي (அல் முத்தஆலி): உயர்ந்தவன்; மேன்மையானவன்; புகழுக்குரியவன்.

79. الْبَرُّ (அல் பர்): தன்னுடைய மென்மைத்துவத்தினால் அடியார்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்பவன்; நல்லவர்களை பொருட்படுத்துபவன்.

80. التَّوَّابُ (அத்தவ்வாபு): அடியார்களின் பாவங்களிலிருந்து மனம் திரும்புதலை ஏற்றுக் கொள்பவன். அத்தவ்பா மிகைச் சொல்லாகும். தவ்பாவின் பொருள் மனம் திருந்துதல் என்பதாகும். அந்த தீமையிலிருந்து பாவமன்னிப்புப் பெறுவது என்பதன் பொருள் அந்த தீமையை முழுவதும் விட்டு விட்டு அதற்கு மாற்றமாக நன்மையை மேற்கொள்வது என்பதாகும்.

81. الْمُنْتَقِمُ (அல் முன்தகிம்): கட்டுப்படாதவர்களிடம் பழிவாங்குபவன். கட்டுப்படாதவர்களுக்கு தண்டனை வழங்குபவன்.

82. الْعَفُوُّ (அல் அ.்.பூ): பாவங்களை மன்னிப்பவன்; பாவங்களை அழிப்பவன்; மன்னிப்பவன்.

83. الرَّءُوفُ (அர் ரவூ.்.ப்): மென்மையாக நடந்து கொள்பவன். மிகவும் பரிவு காட்டுபவன்.

84. مَالِكُ الْمُلْكِ (மாலிகுல் முல்க்): அரசாட்சியின் அரசன். அதிகாரத்தின் எஜமானன். ஆட்சியின் உரிமையாளன்.

85. ذُوالْجَلَالِ وَالْإِكْرَامِ (துல் ஜலாலி வல் இக்ராம்): மேன்மை மற்றும் கண்ணியத்திற்குரியவன்; கம்பீரமானவன்.

86. الْمُقْسِطُ (அல் முக்ஸித்): நீதிமான்; நியாயவான்; நீதிபதி. முக்ஸித் என்பதன் பொருள் அநீதியை அகற்றுபவன் என்றும் உள்ளது.

87. الْجَامِعُ (அல் ஜாமி.்.): எல்லாப் படைப்பினங்களையும் ஒன்று திரட்டுபவன். எல்லா சிறப்பம்சங்களின் ஒருமித்த வடிவம் ஒன்று திரட்டுபவன்.

88. الْغَنِيُّ (அல் கனீ): எல்லா வித தேவைகளின் தீர்வானவன். மேலும் பொருட்படுத்தாதவன்.

89. الْمُغْنِي (அல் முக்னீ): செல்வந்தராக்குபவன். பொருட்படுத்தாத -வனாய் ஆக்குபவன்.

90. الْمَانِعُ (அல் மானி.்.): தடுப்பவன். தன் அடியார்களின் துன்பங்களை விலக்குபவன்.

91. الضَّارُّ (அழ் ழார்): தீய செயல்களின் தீய விளைவுகளை ஏற்படுத்துபவன். சோதனைகளுக்கு அதிபதி.

92. النَّافِعُ (அந்நா.்.பி.்.): நன்மை மற்றும் பயன் அளிப்பவன்.

93. النُّوْرُ (அந்நூர்): ஒளியின் பிறப்பிடம். ஒளிரச் செய்பவன். ஒளிமயமானவன்.

94. الْهَادِي (அல் ஹாதீ): நேர்வழி வழங்குபவன்; நேர்வழி காட்டுபவன்; வெற்றியடையச் செய்பவன்.

95. الْبَدِيعُ (அல் பதீ.்.): புதிது புதிதாக கண்டுபிடிப்பவன். படைத்தலை ஆரம்பிப்பவன்.

96. الْبَاقِي (அல் பாகீ): எஞ்சியிருப்பவன்; மீதமிருப்பவன்; அழிவற்றவன்.

97. الْوَارِثُ (அல் வாரிஸ்): உண்மையான எஜமானன்; வாரிசு; படைப்பினங்களின் அழிவிற்குப் பிறகு எஞ்சியிருப்பவன்.

98. الرَّشِيْدُ (அர் ரஷீது): நேர்வழி படுத்துபவன்; வழிகாட்டி; முழுமையான பண்புகளை உடையவன்.

99. الصَّبُوْرُ (அஸ் ஸபூர்): மிக பொறுமையாளன். தண்டனை வழங்குவதில் தாமதப்படுத்துபவன். உண்மையில் ஸபர் என்பதன் பொருள் பொறுத்துக் கொள்ளுதல் என்பதாகும். எனவே அல்லாஹ் தனது அடியார்களின் தவறுகளை மற்றும் கட்டுப்படாமையை பொறுத்துக் கொண்டு அதற்கு விரைவில் தண்டனை கொடுப்பவன் அல்லன். எனவேதான் அவனுடைய இந்தப் பண்பு ஸபூர் ஆகும்.

**- தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் முஹ்யுத்தீன்**

*(28-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி…)*

இறைவனின் அடையாளம் வெளிப்பட வேண்டும் என்பதற்காக தோன்றியது என எனது உள்ளத்தில் உடனே போடப்பட்டது. (ரூஹானி கஸாயீன் தொகுதி 22 ஹகீகத்துல் வஹீ பக்கம் 480-481)

இப்போது நான் ஹஸ்ரத் முதல் கலீ.்.பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பவங்களில் சிலவற்றை எடுத்துக் கூறுவேன்.

மதிப்பிற்குரிய சவுத்ரி குலாம் முஹம்மது சாஹிப் பி.ஏ., அவர்கள் கூறுகிறார்கள்: 1909 -ல் வசந்த காலத்தில் ஒருமுறை தொடர்ச்சியாக எட்டு நாட்கள் மழை பொழிந்து கொண்டே இருந்தது. அதனால் காதியானில் அதிகமான வீடுகள் இடிந்து விழுந்தன. ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் அவர்கள் காதியானுக்கு வெளியே புதிய பங்களா கட்டி இருந்தார்கள். அது விழுந்து விட்டது. எட்டாவது அல்லது ஒன்பதாவது நாள் ஹஸ்ரத் முதல் கலீ.்.பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ளுஹர் தொழுகைக்குப் பிறகு நான் துஆ செய்கிறேன். நீங்கள் அனைவரும் ஆமீன் கூறுங்கள் என்றார்கள். துஆ செய்த பிறகு ஹஸ்ரத் முதல் கலீ.்.பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தமது முழு வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே செய்த அந்த துஆவை இன்று செய்தேன். துஆவின்போது கனமழை பொழிந்து வந்தது. அதன் பிறகு மழை நின்றது. மேலும் அஸ்ர் தொழுகை நேரத்தில் வானம் முற்றிலும் தெளிவாகி வெயில் காய்ந்தது. (ஹயாத்தே நூர் பக்கம் 440-441)

**- தமிழாக்கம்: மவ்லவி M. ஷாஜஹான்**

# இறை இருப்பின் மீது மகத்தான அன்பு கொண்டவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

*(ஸயீக் அஹ்மது நாயிக்)*

உலகின் தலைவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் அருளுக்குரிய இருப்பு அல்லாஹ்வின் இருப்பின் தோற்றமாக இருந்தது. அன்னாரது ஒவ்வொரு சொல்லும் செயலும் இறைவனது அன்பில் திளைத்திருந்தது. அன்னாரது வாழ்க்கை தனது இறைவனின் விருப்பத்திற்காகவே அர்ப்பணிக்கப்பட்டு இருந்தது. இதன் காரணமாகவே அல்லாஹ்வும் கூட அர்ஷில் இவ்வாறு சாட்சியம் அளித்துள்ளான். அதாவது நபியே! நீர் கூறுவீராக: எனது தொழுகை, எனது தியாகங்கள், எனது வாழ்வு, எனது மரணம் ஆகியவை அகில உலகங்களின் ரப்பாகிய இணையற்ற அல்லாஹ்விற்கே உரியன. எனக்கு இதற்கான கட்டளையே இடப்பட்டுள்ளது. மேலும், நான் அவனுக்கு எல்லாரையும் விட முதன்மையாகக் கட்டுப்படுபவன் ஆவேன். (அதிகாரம் அன்ஆம் : 163–164)

இது அன்னாருக்கு உரிய தனிச் சிறப்பாகும் அதாவது, அன்னார் மீது அல்லாஹ் தனது இருப்பு தொடர்பாகவுள்ள அந்த கடினமான ரகசியங்களை திறந்துள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தவிர உலகில் எவர் மீதும் அது திறக்கப்படவில்லை. இவ்வகையில் அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹு தஆலா புகழ் மற்றும் துதிக்கான ஞானத்தை எந்த அளவு என் மீது திறந்துள்ளான் என்றால் இதற்கு முன்பு எவர் மீதும் அவ்வாறு திறக்கப்படவில்லை. (சஹீஹ் புகாரி. கிதாபுத் தஃப்ஸீர் அதிகாரம் பனீ இஸ்ராயீல் பாப் ஸுர்ரியத் மன் ஹமல்னா)

இறை இருப்பு தொடர்பாக அன்னாருடைய உள்ளத்தில் எந்த அளவு ஈடுபாடு இருந்தது என்றால், அவர்களின் இபாதத்துகளின் தரம் மிகவும் உயர்ந்திருந்தது. ஆரம்பத்திலிருந்தே அல்லாஹ்வின் மீது முழுமையான மற்றும் கலப்பற்ற அன்பு அன்னாரது உள்ளத்தில் நிரம்பி இருந்தது. உலகிலிருந்து தனித்து தனிமையில் தனது நேசன் உடன் ரகசியமாக பேசுவதே அன்னாரது உள்ளத்திற்கு நிம்மதி மற்றும் திருப்தியை தரக்கூடியதாக இருந்தது. இவ்வகையில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இளமையில் நல்ல உண்மையான கனவுகள் வர ஆரம்பித்தன. (புகாரி பாபு பதிவுல் வஹீ)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இளமைக் காலத்தில் ஒவ்வொரு வருடமும் ஹிரா குகையில் ஒரு மாதம் இஃதிகாஃப் இருப்பார்கள். தனிமையில் இறைவனை வணங்குவார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஃதிகாஃபை முடித்தவுடன் திரும்பி வந்து கஅபதுல்லாஹ்வை தவாஃப் செய்து விட்டு வீட்டிற்கு செல்வார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முதன் முதலில் வஹி இறங்கியது ரமலான் மாதத்தில்தான். அன்றைய நாட்களில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிரா குகையில் இஃதிகாஃப் இருந்து கொண்டிருந்தார்கள். (அல்ஸீரத்துன் நபவிய்யா லிஇப்னி ஹஷ்ஷாம். தொகுதி 1 பக்கம் 250 முதல் 251 வரை. பதிப்பு முஸ்தஃபா அல்பாபி அல்ஹிலபீ)

இபாதத்துகளின் தொடர் கடமையான தொழுகைகளுடன் மட்டும் நின்று விடவில்லை. மாறாக அதனை தவிர சிறப்பாக இரவு நேரங்களில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் மீது கொண்ட ஆழமான அன்பில் திளைத்தவாறு மிகவும் உருக்கத்துடன் நீண்ட மற்றும் அழகான முறையில் தொழுகைகளை தொழுது வந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் அன்னாரது பாதங்கள் வீங்கி விடும். தனது படைப்பாளனை வணங்குவது அன்னாருக்கு ஏனைய அனைத்து விஷயங்களையும் விட மிகவும் விருப்பமானதாக இருந்தது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒரே சமயத்தில் ஒன்பது துணைவிகள் இருந்தனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தனது அன்பிற்குரிய மனைவி ஆயிஷா (ரலி) அவர்களின் முறை ஒன்பதாவது நாள்தான் இருந்தது. ஒருமுறை குளிர்காலத்தில் இரவு நேரத்தில் தனது படுக்கையில் போர்வைக்குள் சென்ற பிறகு அவர்களிடம் கூறினார்கள்: ஆயிஷாவே! நீங்கள் அனுமதி கொடுத்தால் நான் இன்று இரவு எனது இறைவனை வணங்குவதில் கழிப்பேன் என்று கூறினார்கள். அவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் அதற்கான அனுமதியை வழங்கினார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த இரவு முழுவதையும் இபாதத்தில் கழித்தார்கள். அழுது அழுது சஜ்தா செய்யும் இடத்தையே ஈரமாக்கி விட்டார்கள். (அத்துர்ருல் மன்ஸூர் ஃபித்தஃப்ஸீரில் மாஸூர் லிஸ் ஸுயூத்தீ தொகுதி 6 பக்கம் 27 பதிப்பு பைரூத்)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறை அன்பின் வெளிப்பாடானது ஏகத்துவத்தை நிலைபெறச் செய்வதில் செய்த முயற்சிகள் மூலமாகவும் தெளிவாகின்றது. காலையும் மாலையும் இறைவனது தவ்ஹீதை பற்றியே எடுத்துரைத்து வந்தார்கள். காலைப் பொழுது விடிந்தவுடன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நாவில் இந்த துஆ வெளியாகும். ''இஸ்லாத்தின் பண்பிலும ஏகத்துவ வார்த்தையிலும் தனது நபி முஹம்மது (ஸல்) அவரின் மார்க்கத்திலும் ஏகத்துவ வாதியாகவும் இணை வைப்பவர்களை சாராதவர்களாகவும் இருந்த நமது மூதாதையர்களாகிய இப்ராஹீமுடைய மார்க்கத்தில் காலையை துவங்குகிறோம். (முஸ்னத் அஹ்மத் தொகுதி 3 பக்கம் 406 பதிப்பு பைரூத்)

மாலையில் அன்னார் இவ்வாறு துஆ செய்வார்கள் அதாவது அம்சய்னா...... நாமும் உலகம் அனைத்தும் அல்லாஹ்விற்காக மாலையை துவங்குகிறோம். மேலும் அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியதாகும். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. அவன் ஒருவனாவான். அவனுக்கு இணை யாருமில்லை. அரசாட்சி அவனுக்கே உரியதாகும். அனைத்துப் புகழுக்கும் எஜமானன் அவனே ஆவான். அவன் அனைத்தின் மீதும் வல்லமை கொண்டவன் ஆவான். (முஸ்லிம் கிதாபுத் திக்ர் பாபு அத்தஸ்வூது மின் ஷர்ரி மா அமல் 4901)

ஏதாவது துன்பம் ஏற்பட்டால் இவ்வாறு துஆ செய்வார்கள்: 'லா இலாஹா இல்லல்லாஹுல் அஸீமுல் ஹலீம்' வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் மகத்தானவன். மேலும் மென்மையானவனும் ஆவான். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை அவன் மகத்தான அரியணையின் இறைவன் ஆவான். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் வானம் மற்றும் பூமியின் இறைவன் ஆவான். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் அர்ஷே கரீமின் இறைவன் ஆவான். (புகாரி கிதாபுத் தஃவாத் பாபுத் துஆ இன்தல் கர்ப் 5869)

பெருமானார் (ஸல்) அவர்கள் ஏகத்துவத்தையே இரட்சிப்பின் வழியாக ஆக்கினார்கள். மேலும் கூறினார்கள்: எவரொருவர் உண்மையான உள்ளத்துடன் ஏகத்துவத்தை ஏற்பாரோ அவர் சொர்க்கவாசி ஆவார். (முஸ்னத் அஹ்மத் தொகுதி 4 பக்கம் 411 பதிப்பு பைரூத்)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மெம்பரில் குத்பா கொடுக்கும்போது இந்த வசனத்தை ஓதினார்கள். அவனது வலது கையால் வானம் சுருட்டப்பட்டுள்ளது. அவன் பரிசுத்தமானவன். மக்கள் அவனுக்கு இணையாக்கக் கூடியவற்றிலிருந்து அவன் உயர்ந்தவன்.

மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் கூறுகின்றான். நான் மிகவும் ஆற்றல் வாய்ந்தவன் ஆவேன். .பாதிப்பிற்கு இழப்பீடு செய்யக்கூடியவன் ஆவேன். மகத்துவம் அனைத்தும் எனக்கு உரியது ஆகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

இந்த வார்த்தைகளை மீண்டும் மீண்டும் மிகவும் உணர்ச்சியுடன் கூறிக் கொண்டே இருந்தார்கள். எந்த அளவுக்கென்றால் மெம்பர் ஆட ஆரம்பித்து விட்டது. நாங்கள் மெம்பர் விழுந்து விடக் கூடாது என்று கவலை கொண்டோம். (முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 2 பக்கம் 88)

பெருமானார் (ஸல்) அவர்களின் இறை நேசத்தின் வெளிப்பாடானது அன்னார் எவ்வாறு இறைக் கட்டளைகளை பின்பற்றி வந்தார்கள் என்பது மூலமாகவும் தெரிய வருகின்றது. இறைவனது கட்டளை வராதவரை அன்னார் மக்காவை விட்டு வெளியேறவில்லை.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் ஒருநாள் அமர்ந்திருந்தோம் சரியாக மதிய வேளையில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள். தலைப்பாகை கட்டப்பட்டிருந்தது. அன்னார் இவ்வேளையில் ஒருபோதும் வந்ததில்லை. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். எனது தாய் தந்தையர் உங்கள் மீது அர்ப்பணமாகட்டும். தாங்கள் இந்நேரம் ஏதேனும் பெரிய வேலையின் காரணமாக வந்துள்ளீர்களா? எனக் கேட்டார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உள்ளே வருவதற்கு அனுமதி கேட்டார்கள். அனுமதி கொடுக்கப்பட்டதும் வீட்டினுள் வந்தார்கள். பின்னர் இங்குள்ள மக்களை வெளியே போகச் சொல்லுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இவர்கள் அனைவரும் உங்கள் குடும்பத்தினர் ஆவர் என்று கூறினார்கள். அப்படியா சரி என்று கூறி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு ஹிஜ்ரத்திற்கான கட்டளையிடப்பட்டுள்ளது என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனக்கு உங்களுடன் இருக்கும் நற்பாக்கியம் கிடைக்குமா என கேட்டார்கள். அன்னார் அவர்களது விருப்பத்தை ஏற்று கொண்டவாறு ஆம் என்று கூறினார்கள். (புகாரி கிதாபுல் மனாகிப் ஹிஜ்ரத்துன் நபி)

இந்த சம்பவத்தில் இருந்து தெரிய வருவது என்னவென்றால் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இறைவனது கட்டளை வராதவரை அன்னார் மக்காவை விட்டு வெளியேறவில்லை. மேலும் கடைசி நேரம் வரை இறைவனது கட்டளை இல்லாமல் எந்த பணியும் செய்யக்கூடாது என்ற விஷயத்தில் நிலை பெற்றிருந்தார்கள்.

அடுத்து நேசத்திற்குரியவரின் நேசத்தின் வெளிப்பாட்டின் ஒரு அடையாளம் இதுவாகவும் இருக்கிறது அதாவது அன்பிற்குரியவர் உடைய அச்சம் மற்றும் பயமும் அன்புடன் சேர்ந்து இணைந்திருக்கும். இவ்வகையில் அச்சத்தின் உள்ளம் ஈர்க்கக்கூடிய இந்தப் பகுதியும் கூட பொறாமைக்கு தகுதி வாய்ந்ததாகவே தெரிகிறது. இதற்கான ஓர் உதாரணம் பத்ர் யுத்தத்தில் காண முடிகின்றது. பத்ர் யுத்த சமயத்தில் எதிரிகளுக்கு எதிராக அன்னாரும் அன்னாரது உயிர்த் தோழர்களும் நின்று கொண்டிருந்தனர். இறை உதவிக்கான காட்சியும் தென்பட்டுக் கொண்டிருந்தது. பத்ர் போரின்போது நிராகரிப்பாளர்கள் தனது ஆதிக்கத்தை செலுத்துவதற்காக உறுதி வாய்ந்த பூமியில் தனது கூடாரங்களை அமைத்தார்கள். முஸ்லிம்களுக்கு மணல் பகுதியை கொடுத்தனர். ஆனால் இறைவன் மழையைப் பொழிய செய்து நிராகரிப்பாளர்களின் கூடாரங்களை களிமண்ணாக்கி விட்டான். மேலும் முஸ்லிம்களின் இருப்பிடங்கள் வலுவடைந்தது. இவ்வாறும் பல்வேறு விண்ணின் ஆதரவுகள் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. இவை அனைத்தும் இருந்த போதிலும் அல்லாஹ்வுடைய அச்சம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது எந்தளவு மேலோங்கி இருந்தது என்றால் அனைத்து வாக்குறுதிகளும் அடையாளங்களும் இருந்தும்கூட அவனது தன்னிறைவைக் கண்டு அச்சம் அடைந்தார்கள். துடித்தவாறு முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கி விடு என அவனிடம் துஆக்கள் செய்து வந்தார்கள். அன்னார் இவ்வாறு துஆ செய்து மன்றாடும் இந்த தருணத்தில் அன்னாரது போர்வை நான்கு முறை தோளிலிருந்து கீழே விழுந்தது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அர்ப்பணிப்பின் உணர்வினால் அன்னாரது இந்த நிலைமையைப் பார்த்து நிம்மதியிழந்து கொண்டிருந்தார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனது தாயும் தந்தையும் உங்கள் மீது அர்ப்பணமாகட்டும்! நீங்கள் பயப்படாதீர்கள். அல்லாஹ் நிச்சயமாக தனது வாக்குறுதியை நிறைவேற்றுவான் எனக் கூறிக் கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்களின் இறை நேசத்தின் காட்சியை பார்த்த மக்கத்து மக்கள் அன்னாரைப் பற்றி முஹம்மது தனது இறைவனின் பித்தனாகி விட்டார் எனக் கூறி வந்தனர். உண்மையில் இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறையன்பின் நிலைமை எவ்வாறு இருந்தது என்றால் அன்னார் ஹஸ்ரத் தாவூது (அலை) அவர்களின் இந்த துஆவை மிகவும் விருப்பத்துடன் தனது துஆக்களுடன் சேர்த்து ஓதி வந்தார்கள்.

اَللّٰهُمَّ اِنِّیْ اَسأَلُكَ حُبَّكَ وَ حُبَّ مَن يُّحِبُّكَ وَالعَمَلَ الَّذِی يُبَلِّغُنِی حُبَّكَ ،
اَللّٰهُمَّ اجعَل حُبَّكَ اَحَبَّ اِلَیَّ مِن نَفسِی وَمَالِی وَاَهلِی وَمِنَ المَاءِ البَارِدِ

பொருள்: அல்லாஹ்வே! நான் உனது அன்பை வேண்டுகின்றேன் மேலும் உனது அன்பை வேண்டக் கூடியவரின் அன்பையும் வேண்டுகின்றேன். உனது அன்பு வரை கொண்டு செல்லக்கூடிய அப்படிப்பட்ட அமல்களை செய்யும் வாய்ப்பை வேண்டுகின்றேன். அல்லாஹ்வே! உனது அன்பை எனது உள்ளத்தில் எனது இருப்பு எனது செல்வம் எனது குடும்பம் குளிர்ந்த தண்ணீர் ஆகியவற்றை விட அதிக அன்பிற்குரியதாக ஆக்குவாயாக. (திர்மிதி கித்தாபுத் தஃவாத். பாப் மா ஜாஅ ஃபீ அகதித் தஸ்பீஹ் 3412)

ஆனால் இறைநேசம் தொடர்பாக அன்னார் கற்றுக் கொடுத்த அந்த துஆவானது ஹஸ்ரத் தாவூது (அலை) அவர்களின் துஆவை விட பல மடங்கு சிறந்த தொகுப்பாகவும். கருத்துச் செறிவு கொண்டதாகவும் இருக்கிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் தனது இறைவனிடம் வேண்டுகிறார்கள்.

اَللّٰهُمَّ ارزُقنِی حُبَّكَ وَحُبَّ مَن يَّنفَعُنِی حُبُّه عِندَكَ اَللّٰهُمَّ مَا رَزَقتَنِی مِمَّا
اُحِبُّ فَاجعَلهُ قُوَّةً لِّی فِيمَا تُحِبُّه وَمَازَوَيتَ عَنِّی مِمَّا اُحِبُّ فَاجعَلهُ فَرَاغًا لِّی فِيمَا تُحِبُّ

பொருள்: அல்லாஹ்வே! எனக்கு உனது அன்பை வழங்குவாயாக. உன்னிடத்தில் பலன் தரக்கூடியவரின் அன்பையும் எனக்கு வழங்குவாயாக. அல்லாஹ்வே! நீ எனக்கு வழங்கும் எனது உள்ளம் விரும்பக்கூடிய பொருள்களை உனது அன்பிற்குரிய பொருள்களை பெறக்கூடிய ஆற்றலுக்கான வழியாக ஆக்குவாயாக. உன்னை விட்டு என்னை விலக்கக் கூடிய எனக்கு விருப்பமான பொருட்களுக்கு பகரமாக உனக்கு விருப்பமான பொருள்களை எனக்கு வழங்குவாயாக. (திர்மிதீ; கித்தாபுத் தஃவாத். பாப் மா ஜாஅ ஃபீ அகத்தில் தஸ்பீஹ்; 3413)

### மரணத்திற்கு முன்பு கடைசி விருப்பம்

இது பெருமானார் (ஸல்) அவர்களின் ஏகத்துவ நிலை பாட்டிற்கான கடைசி முயற்சி மற்றும் விருப்பமாக இருந்தது. அதனால் தான் பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்து வந்தார்கள். اَللّٰهُمَّ لَا تَجعَل قَبرِی وَثَنًا பொருள்: அல்லாஹ்வே! எனது கபரை சிலை வணக்கத்திற்குரியதாக ஆக்கி விடாதே. (முஸ்னத் அஹ்மத். தொகுதி 2 பக்கம் 246 பதிப்பு பைரூத்)

இறைவனும் தனது ஏகத்துவத்தின் அடியானுடைய ஏகத்துவ தன்மானத்திற்கு எவ்வாறு மதிப்பளித்துள்ளான் என்று பாருங்கள். ஏகத்துவவாதிகளின் பேரரசரின் அருளுக்குரிய அடக்கஸ்தலம் அனைத்து விதமான சிலை வணக்கம் மற்றும் இணைவைத்தலில் இருந்து பரிசுத்தமாக உள்ளது. அல்லாஹ் நம் அனைவரது உள்ளத்தையும் இறை நேசத்தின் ஒளியினைக் கொண்டு ஒளியூட்டுவானாக. மேலும் நமது உள்ளங்களையும் அல்லாஹ்வின் அச்சம் மற்றும் அன்பினால் நிரம்ப செய்வானாக. ஆமீன்.

- தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் முஹ்யுத்தீன்

# துஆ ஒப்புக்கொள்ளப்படுவதன் ஒளியில் இறை இருப்பு

*(ஸய்யிது கலீமுத்தீன் அஹ்மது – காஸி அஹ்மதிய்யா மர்கஸ், காதியான்)*

وَاِذَا سَاَلَكَ عِبَادِیۡ عَنِّیۡ فَاِنِّیۡ قَرِیۡبٌ ؕ اُجِیۡبُ دَعۡوَۃَ الدَّاعِ
اِذَا دَعَانِ ۙ فَلۡیَسۡتَجِیۡبُوۡا لِیۡ وَلۡیُؤۡمِنُوۡا بِیۡ لَعَلَّہُمۡ یَرۡشُدُوۡنَ

பொருள்: மேலும் (நபியே!) எனது அடியார்கள் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால் (நீர் பதில் கூறுக) நான் (அவர்களுக்கு) அருகிலேயே இருக்கிறேன். துஆ செய்பவர் என்னை அழைக்கும் போது நான் அவர்களின் துஆவை ஏற்றுக் கொள்கிறேன். எனவே (துஆ செய்பவர்களாகிய) அவர்களும் எனது கட்டளையை ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும் என் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். அதனால் அவர்கள் நேர்வழியைப் பெறலாம். (2:187)

'முஜீப்' என்பது இறைவனின் ஒரு பண்பாகும். அதன் கீழ் அவன் தனது அடியார்களின் அழைப்பைக் கேட்கிறான். மேலும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதன் மூலம் தம் இருப்பின் சான்றை வழங்குகிறான். இறைவன் ஒருபுறம், இக்கட்டில் உள்ளவர்கள்; திக்கற்றவர்கள்; தேவையுடையவர்கள் மற்றும் துன்பத்தில் உள்ளவர்களின் துஆக்களைக் கேட்டு அவர்களின் தேவைகளை நிறைவு செய்கிறான். மறுபுறம் சிறப்பான அருளின் அடிப்படையில் இறை நேசர்களுக்கு துஆ ஏற்றுக் கொள்ளப்படுதலின் கண்ணியத்தை வழங்குகிறான். இறைவன் தனது இருப்பின் சான்றை வழங்குகிறான்.

இறை இருப்பு தொடர்பான இந்த உரையை, நமது அன்பிற்குரிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களின் ஆன்மீகப் புதல்வர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், அன்னாரின் கலீ∴பாக்கள் ஆகியோரின் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட, நம்பிக்கையை வலுவூட்டும் மகத்தான சம்பவங்கள் வாயிலாக நான் எடுத்துரைப்பேன் - இன்ஷா அல்லாஹ்.

கண்ணியத்திற்குரியவர்களே! நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை மற்றும் நபிமொழிகளை வாசிக்கும் போது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட மகத்தான சம்பவங்களைப் பார்க்கும்போது எல்லையில்லா ஆச்சரியம் ஏற்படுகிறது. அவ்வாறான சம்பவங்களிலிருந்து ஓரிரு சம்பவங்களை நான் கூறுகிறேன்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் துஆவின் விளைவால் தன் தாய் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சம்பவத்தை ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: எனது தாய் இணை வைப்பவராக இருந்தார். நான் அவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுத்தேன். ஒருநாள் நான் அவர்களுக்கு உண்மையின் தூதுச் செய்தியை எடுத்து வைத்தபோது அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தொடர்பாக நான் விரும்பத்தகாத சில சொற்களைக் கூறி விட்டார்கள். அது எனக்கு மிகவும் சங்கடத்தை ஏற்படுத்தியது. நான் அழுதவனாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் வந்து கூறினேன். நான் எனது தாய்க்கு இஸ்லாத்தின் தூதை கொடுத்து வந்தேன். அவர்கள் மறுத்து வந்தார்கள். இன்று நான் இந்த அழைப்பைக் கொடுத்தபோது உங்களைப் பற்றி என்னிடம் நான் விரும்பாத விஷயங்களை அவர்கள் கூறினார்கள். அல்லாஹ் அபூஹுரைராவின் தாய்க்கு நேர்வழியை வழங்க தாங்கள் துஆ செய்யுங்கள் என்றேன். எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள். அல்லாஹும் மஹ்தி உம்மி அபீஹுரைரா - அல்லாஹ்வே! நீ அபூஹுரைராவின் தாய்க்கு நேர்வழியை வழங்குவாயாக.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். நான் நபி (ஸல்) அவர்களின் துஆவின் காரணமாக மகிழ்ச்சியுடன் வீட்டுக்குத் திரும்பினேன். வீட்டுக்கு அருகில் வந்தபோது கதவு மூடப்பட்டிருந்தது. எனது தாய் எனது காலடி ஓசையைக் கேட்டு, அபூஹுரைராவே! அங்கேயே நிற்கவும் என்றார்கள். அந்தத் தருணத்தில் தண்ணீர் விழுவதன் சத்தத்தை நான் கேட்டேன். அவர் கூறுகிறார்: அவர்கள் குளித்தார்கள்; உடை மாற்றினார்கள். துப்பட்டவை அணிந்து கொண்டு கதவைத் திறந்து, அபூஹுரைராவே! அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு எனக் கூறினார்கள். ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறினார்கள். நான் உடனே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் மகிழ்ச்சியுடன் அழுதவாறு ஆஜராகி, வாழ்த்துக்கள்! அல்லாஹ் உங்களது துஆவை ஏற்றுக் கொண்டான். அபூஹுரைராவின் தாய்க்கு நேர்வழியை வழங்கி விட்டான் எனக் கூறினேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் இறைவனை புகழ்ந்தார்கள். மேலும் நன்மையே நடந்தது எனக் கூறினார்கள். அப்போது நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் என்னையும் என் தாயையும் இறை நம்பிக்கை கொண்டவர்களின் அன்பிற்கு உரியவர் -களாகவும் அவர்கள் எங்களுக்கு அன்பிற்குரியவர்களாகவும் ஆக்கி வைக்கும்படி தாங்கள் துஆ செய்ய வேண்டும் என விண்ணப்பித்தேன். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள். அல்லாஹ்வே! நீ இந்த அடியாராகிய அபூஹுரைரா மற்றும் இவரின் தாயையும் உன் நம்பிக்கையாளர்களுக்கு அன்பிற்கு உரியவர்களாக ஆக்குவாயாக. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள், எந்த நம்பிக்கையாளர் என்னைப் பார்க்க -வில்லையோ என்னைப் பற்றி கேட்க மட்டுமே செய்துள்ளாரோ அவர்களும் என்னை நேசிக்கிறார்கள் என்றார்கள். (சஹீஹ் முஸ்லிம். கிதாப் ∴பஸாயிலுஸ் சஹாபா பாப் மின் ∴பஸாயில் அபீ ஹுரைரா)

இந்த ஹதீஸிலிருந்து துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதன் இரண்டு மகத்தான அடையாளங்கள் இறை இருப்பின் சான்றாக உள்ளன. இதைப் போன்றே புகாரியில் ஓர் அறிவிப்பு வருகிறது. ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருமுறை மஸ்ஜிது நபவியின் மிம்பருக்கு அருகிலுள்ள கதவின் வழியாக ஒரு மனிதர் உள்ளே வந்தார். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் குத்பா கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்த மனிதர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கவனத்தை தம் பக்கம் திருப்பியவாறு, 'யா ரஸூலல்லாஹ்! கால்நடைகள் இறக்கின்றன; நிலைமை மோசமாக உள்ளது. இறைவனிடம் நமக்கு மழை வேண்டி தாங்கள் துஆ செய்யுங்கள்' என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கையை உயர்த்தி, 'அல்லாஹும்ம அஸ்கினா' என துஆ செய்தார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: அந்தத் தருணத்தில் வானத்தில் மேகமும் மேகத்தின் எந்தப் பகுதியும் தென்படவில்லை. சல்அ மலைக்குப் பின்னாலிருந்து திடீரென ஒரு மேகம் தோன்றியது. அது வானத்தைச் சூழ்ந்து கொண்டது. மேலும் மழை பொழிந்தது. பிறகு தொடர்ச்சியாக ஆறு நாட்கள் சூரியனை பார்க்கவில்லை. பிறகு அதே மனிதர் அடுத்த ஜுமுஆவில் வருகை தந்தார். மழை நிற்க விண்ணப்பம் செய்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கையை உயர்த்தி துஆ செய்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் துஆ செய்ய மழை நின்றது. ஜுமுஆ தொழுது வெளியே வந்தபோது வெயில் காய்ந்தது என்று அறிவிப்பாளர் கூறுகிறார்.

(புகாரி. கிதாபுல் ஜுமுஆ. பாபுல் இஸ்திஸ்காயி ∴பில் மஸ்ஜிதுல் ஜாமி∴)

சுப்ஹானல்லாஹ்! துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதன் இந்த மகத்தான அதிசயம் இறை இருப்பிற்கான சான்று இல்லையா என்ன? நிச்சயமாக இது சான்றாகும். ஆனால் அறிவுடையவர்களே அறிவுரையைப் பெறக்கூடியவர்கள் ஆவர்.

இப்போது நான் காலத்தின் இமாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதன் ஓரிரு சம்பவங்களை எடுத்துக் கூறுகிறேன். அதனைப் படிப்பதால் உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பி விடுகிறது.

ஹஸ்ரத் ஹக்கீம் ஃபஸ்லுத்தீன் சாஹிப். இவர் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் சகோதரர் மகனும் மருமகனும் ஆவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதன் ஒரு வினோதமான சம்பவத்தைக் கூறுகிறார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: 1907 -ல் எனது இரண்டாவது மகன் அப்துல் ஹஃபீஸ் பிறந்திருந்தான். குளிர் காலமாக இருந்தது. அந்த நாட்களில் குழந்தைப்பேறு முடிந்த அதிகமான பெண்கள் வலிப்பு நோயினால் மரணித்தனர். பிரசவித்த பெண்களுக்கு இந்த நோய் மிக ஆபத்தானது. அதிகமானவர்களில், எவரேனும் ஒருவரே தப்பிக்கிறார்கள். எனது மனைவி ஹஃப்ஸா (ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் அவர்களின் மகள்) அவர்களுக்கு குழந்தை பிறந்து ஏழாவது நாள் மக்ரிப் நேரத்தில் அதன் அறிகுறிகள் தென்பட்டன. அந்த நாட்களில் இந்த நோய் இருந்ததால் அதன் பக்கம் கவனம் திரும்பியது. நான் மக்ரிப் தொழுகைக்குப் பிறகு விரைவாக ஹுஸுர் அவர்களின் சமூகத்தில் சென்று விபரங்களைக் கூறினேன். அவர்கள், இது மிகவும் ஆபத்தான நோய் ஆகும். நீங்கள் உடனடியாக அவருக்கு குண்டு மணியளவு (1.125 கிராம்) பத்து பெருங்காயத்தைக் கொடுங்கள். அரை மணி நேரத்திற்குப் பிறகு எனக்கு தகவல் தாருங்கள் என்றார்கள். நான் இஷா தொழுகைக்குப் பிறகு மீண்டும் ஹுஸுர் அவர்களின் சமூகத்தில் சென்று நோய் அதிகரித்து விட்டது எனக் கூறினேன். பத்து குண்டு மணி அளவு கஸ்தூரியைக் கொடுங்கள். ஒரு மணி நேரம் கழித்து எனக்கு தகவல் தாருங்கள். நான் தூங்கி விட்டதாக நினைக்க வேண்டாம். சங்கடப்படாமல் ஆண்கள் மாடிப்படியில் சத்தம் கொடுங்கள் என்றார்கள். இந்த நேரத்தில் கஸ்தூரியை எங்கு வாங்குவேன் என நான் கூறினேன். ஹுஸுர் அவர்கள் ஒரு கை அளவு கஸ்தூரியைக் கொண்டு வந்தார்கள். இது பத்து ரத்தி இருக்கும் என்றார்கள். ஹுஸுர்! இது அதிகம் என நான் கூறினேன். கொண்டு செல்லுங்கள். பிறகு பயன்படும் என்றார்கள். நான் அதனைப் பெற்றுக் கொண்டேன். மேலும் பத்து ரத்தி நோயாளிக்குக் கொடுத்தேன். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு மீண்டும் சென்று, ஹுஸுர்! நோய் அதிகரித்து விட்டது என்றேன். பத்து தோலா கடுகெண்ணெய் கொடுங்கள் என்றார்கள். நான் திரும்ப வந்து பத்து தோலா கடுகெண்ணெய்யைக் கொடுத்தேன். அதன் பிறகு அவருக்கு வாந்தி வந்தது. இந்த நோயில் வாந்தி என்பது இறுதிக்கட்ட நிலையாகும். வாந்திக்குப் பிறகு அவரின் சுவாசம் தடைபட்டது. கழுத்து பின்னால் இழுத்துக் கொண்டது. கண்களில் இருள் சூழ்ந்து கொண்டது. பேச்சு நின்று விட்டது. நான் வேமாக ஓடிச் சென்று மாடிப்படி ஏறினேன். ஹுஸுர் அவர்கள் எனது ஓசையைக் கேட்டு கதவைத் திறந்தார்கள். மேலும் என்ன நலமாக உள்ளார்களா? எனக் கேட்டார்கள். இப்போது நிலைமை மிகவும் மோசமாகி விட்டது. சுவாசம் தடைபட்டு விட்டது. கழுத்து பின்னால் இழுத்துக் கொண்டது. கண்களில் ஒளி இல்லை. பேச்சு நின்று விட்டது என நான் கூறினேன். உலகின் அனைத்து ஆயுதத்தையும் நாம் பயன்படுத்தி விட்டோம். இப்போது ஓர் ஆயுதம் உள்ளது. அது துஆ ஆகும். நீங்கள் செல்லுங்கள். அவருக்கு நலம் கிடைக்கும்போதுதான் நான் துஆவிலிருந்து தலையை உயர்த்துவேன் என்றார்கள். இதனைக் கேட்டு நான் திரும்பி வந்தேன். மேலும் இப்போது உனக்கு என்ன கவலை இருக்கப் போகின்றது? இப்போது உரிமையாளர் தாமே உரிமையை எடுத்துக் கொண்டார் எனக் கூறிக் கொண்டேன். அப்போது இரவு இரண்டு 2.00 மணி ஆகியிருந்தது. நான் வீட்டுக்கு வந்தேன். நோயாளியை அவரின் நிலையில் விட்டு விட்டு மற்றோர் அறையில் கட்டிலில் படுத்து உறங்கி விட்டேன். காலையில் ஏதோ பாத்திர சப்தத்தைக் கேட்டு நான் கண் விழித்தேன். எனது மனைவி என் கால் பகுதியில் சில பாத்திரங்களைச் சரிசெய்வதை நான் பார்க்கிறேன். எவ்வாறு உள்ளீர்கள்? என நான் கேட்டேன். நீங்கள் உறங்கிக் கொண்டிருந்தீர்கள். இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு இறைவன் எனக்கு அருள் செய்தான் - அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் என்றார்கள்.

(சீரத் அஹ்மது. மர்தபா குத்ரதுல்லாஹ் ஸனோரி சாஹிப் பக்கம் 170-172)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஹகீகத்துல் வஹீ என்ற உன்னதமான நூலில் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதன் அசாதாரணமான ஒரு சம்பவத்தைக் கூறியவர்களாக எழுதுகிறார்கள்:

அப்துர் ரஹ்மான் அவர்களின் மகன் அப்துர் ரஹீம் ஹைதராபாத் தென் இந்தியாவைச் சார்ந்தவர். நமது மத்ரஸாவில் கல்வி கற்கும் மாணவர் ஆவார். இறை விதிக்கேற்ப அவரை வெறிநாய் கடித்து விட்டது. அவருக்கு வைத்தியம் பார்க்க நாம் கனோலி அனுப்பி வைத்தோம். சில நாட்கள் வரை கனோலியில் அவருக்கு வைத்தியம் பார்க்கப்பட்டது. பிறகு அவர் காதியான் திரும்பி வந்தார். சில நாட்களுக்குப் பிறகு அவருக்கு வெறிநாய் கடித்தால் தென்படும் அறிகுறிகள் வெளிப்பட்டன. தண்ணீரைக் கண்டால் பயப்பட ஆரம்பித்தார். ஆபத்தான நிலை உருவாகி விட்டது. அப்போது அந்த ஏழை அடியாருக்காக எனது உள்ளம் மிகவும் நிம்மதியிழந்தது. மேலும் துஆவிற்கான சிறப்பான கவனம் பிறந்தது. அந்த ஏழை சில மணி நேரத்தில் மரணித்து விடுவார் என அனைவரும் நினைத்தார்கள். வேறு வழியில்லாத அவரை போர்டிங்கில் இருந்து வெளியே மற்றொரு வீட்டில் தனியாக அடைத்துப் பாதுகாப்புடன் வைக்கப்பட்டார். மேலும் இந்த நிலையில் அவருக்கு ஏதேனும் வைத்தியம் உள்ளதா? என்று சகோலியின் ஆங்கில மருத்துவருக்கு தந்தி அனுப்பி கேட்கப்பட்டது. அங்கிருந்து தந்தி வழியாக இப்போது எந்த வைத்தியமும் இல்லை என பதில் வந்தது. ஆனால் தேசத்தை இழந்த அந்த ஏழைக்காக எனது உள்ளத்தில் அதிக கவனம் உருவாகியது. மேலும் எனது நண்பர்களும் அவருக்காக துஆ செய்யக் கூறினார்கள். ஏனெனில் அந்த ஏழ்மையின் நிலையில் அந்தப் பையன் கருணைக்கு உரியவராக இருந்தார். மேலும் அவர் மரணித்து விட்டால் ஒரு தீய வடிவில் அவருடைய மரணம் கணக்கிடப்படும் என்ற அச்சம் ஏற்பட்டிருந்தது. அப்போது எனது உள்ளம் கடுமையான வேதனை மற்றும் நிம்மதியின்மையில் மூழ்கியது. மேலும் சிறப்பான கவனம் உண்டாகியது. அது தானாக உருவாகுவதில்லை. மாறாக இறைவன் புறமிருந்து உருவாகிறது. மேலும் உருவாகி விட்டால் இறை நாட்டத்திற்கு ஏற்ப அது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதனால் மரணித்தவரும் உயிர் பெறுவது மிக அருகில் உள்ளதாகும். சுருக்கமாக அவருக்காக அல்லாஹ்வின் பக்கம் முழுமையான கவனத்தின் நிலை உருவாகியது. மேலும் அந்தக் கவனம் உச்சத்தைத் தொட்டதும் மேலும் வேதனை தனது ஆதிக்கத்தை எனது உள்ளத்தில் முழுமையாக ஏற்படுத்தியதும் அப்போது உண்மையில் மரணித்தவராக இருந்த அந்த நோயாளியின் மீது இந்தக் கவனத்தின் அறிகுறிகள் வெளிப்பட ஆரம்பித்தது. தண்ணீரைக் கண்டுபிடிக்க அவர், மேலும் வெளிச்சத்தை விட்டு ஓடிய அவரின் உடல்நிலை ஒருமுறை ஆரோக்கியத்தின் பக்கம் திரும்பியது. எனக்கு தண்ணீர் மீது பயம் இல்லை எனக் கூறினார். அப்போது அவருக்கு தண்ணீர் கொடுக்கப்பட்டது. அவர் எவ்வித அச்சமுமின்றி பருகினார். மாறாக தண்ணீரைக் கொண்டு உளூ செய்து தொழுகையை நிறைவேற்றினார். மேலும் முழு இரவும் உறங்கினார். மேலும் ஆபத்தான பைத்திய நிலை மாறிச் சென்றன. சில நாட்களில் முழுமையாகக் குணம் அடைந்தார். அவரிடம் உருவாகி இருந்த அந்த பைத்திய நிலை அவரை அழிப்பதற்காக உருவாகிய பைத்தியம் அல்ல. மாறாக,

*(தொடர்ச்சி 24-வது பக்கம்...)*

# இறை இருப்பு பற்றி அறிவுப்பூர்வமான சான்றுகள்

**(முஹம்மது ஷரீஃப் கவ்ஸர் – ஆசிரியர், ஜாமிஆ அஹ்மதிய்யா காதியான்)**

தற்பாதைய காலத்தில் உலகின் மிகப் பெரிய எண்ணிக்கை மார்க்கமின்மை மற்றும் நாத்திகத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அத்தகையோர் இந்த உலகம் சுயமாகவே தோன்றி விட்டது என்றும் இவ்வுலகத்தை யாரும் படைக்கவும் இல்லை. மேலும் இந்த உலகமும் எதையும் உருவாக்க –வில்லை என்றும் கருதுகிறார்கள். அவர்கள் அல்லாஹ்வின் சிந்தனை மற்றும் இறைக் கொள்கையை முற்றிலுமாக நிராகரித்து விடுகிறார்கள். அவர்களுடைய கேள்விகள் மற்றும் அவர்களின் எண்ணத்தில் தோன்றுகின்ற சந்தேகங்களுக்கு திருப்திகரமான பதிலை அளிக்கக் கூடியவர்கள் எவரும் இல்லாததே அதற்கான மிகப்பெரிய காரணமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோன்றாமல் இருந்திருந்தால் எவருடைய உள்ளத்திலும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் உண்மையான இறை நம்பிக்கையும் தோன்றாமல் போயிருக்கும் என்பதும் ஓர் உண்மையான விஷயமாகும். இது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மிகுந்த கருணையாகும். அவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு திருக்குர்ஆனின் எப்படிப்பட்ட கருத்துக்களை கற்பித்தான் என்றால் அதன் மூலமாக அன்னார் நாத்திகர்களின் அனைத்து கேள்விகளுக்கும் ஆதாரப் பூர்வமாகப் பதிலளித்தார்கள். மேலும் எல்லா விதமான சந்தேகங்களையும் நிவர்த்தி செய்வதற்காக முயற்சி செய்தார்கள். மேலும் அன்னாரின் புத்தகங்களை ஆய்வு செய்வதன் மூலமாக எண்ணற்ற நற்பேறு பெற்ற ஆன்மாக்கள் நாத்திகம் மற்றும் மார்க்க மின்மை என்கின்ற புதைகுழியில் இருந்து வெளியேறி உண்மையான இறைவனை அறிந்து கொண்டார்கள்.

நில அளவையராகிய ஹஸ்ரத் மியான் முஹம்மது தீன் (ரலி) அவர்கள் தங்களது சம்பவத்தை இவ்வாறு எழுதுகிறார்கள்: ‘‘ஆரியர், பிரம்மர் மற்றும் நாத்திகர்களின் சொற்பொழிவுகளின் தீய தாக்கம் என்னையும் என்னைப் போன்ற ஏராளமானவர்களையும் அழிவிற்குள்ளாக்கி விட்டது. அந்தத் தாக்கங்களை உட்கொண்டவாறே நான் அர்த்தமற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்த வேளையில் பராஹீனே அஹ்மதிய்யா புத்தகத்தைப் படித்தவாறே இறை இருப்பிற்கான சான்றுகள் இருக்கின்ற பக்கம் **90** அடிக்குறிப்பு **1** மற்றும் **149** அடிக்குறிப்பு **11** ஆகிய பக்கங்களை அடைந்தவுடன் என்னுடைய நாத்திகக் கொள்கை திடீரென வெறியேறி விட்டது. மேலும் உறங்கிக் கொண்டிருப்பவர் அல்லது மரணித்தவர் உயிர் பெற்று விட்டால் அவருடைய கண் எவ்வாறு திறந்து விடுமோ அதேபோன்று என்னுடைய கண்ணும் திறந்து விட்டது. (அல் ஹகம் 14 அக்டோபர் 1938)

இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் எழுத்துக்களின் அருளாகும். இதிலிருந்து ஆன்மீக மற்றும் மார்க்கரீதியாக மரணித்தவர்கள் மீண்டும் புத்துயிர் பெற்று விடுகிறார்கள். இது ஆன்மீக முறையில் உயிரற்ற சடலமாக இருப்பவர்களின் வாழ்வில் மாற்று மருந்திற்குரிய பலனை ஏற்படுத்தக் கூடியதாகும். ஆக, ஜமாஅத்தைச் சார்ந்த அன்பர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஆன்மீகக் கருவூலங்களை சுயமாகவே ஆய்வு செய்யவும் வேண்டும். மேலும் நாத்திகம் என்கின்ற நோயில் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெறுவதற்காக இந்தப் புத்தகங்களை அவர்களுக்கும் ஆய்வு செய்வதற்காக கொடுக்கவும் வேண்டும்.

இந்தச் சிறிய முன்னுரைக்குப் பிறகு நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபாக்களின் போதனைகளை எடுத்து வைப்பதற்கு முயற்சி செய்வேன். அதில் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் தோற்றம் மற்றும் இருப்பிற்கான பகுத்தறிவு சான்றுகள் எடுத்து வைக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த சான்றுகளை ஒரு நாத்திகர் நேர்கொண்ட பார்வையோடு சிந்திப்பார் என்றால் நிச்சயமாக அவர் இறை இருப்பை ஒப்புக் கொள்ளக் கூடியவராக மாறி விடுவார். ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் உலகில் அதிகரித்துக் கொண்டிருக்கும் நாத்திக சிந்தனை தொடர்பாக இவ்வாறு கூறுகிறார்கள்: ‘‘இன்று கிறிஸ்தவம் தன்னுடைய பலவீனத்தை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றது. அவ்வாறு இருந்த போதிலும் அவர்களுடன் ஒரு போட்டி இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அத்துடன் மிகவும் அபாயத்தை வெளிப்படுத்தக் கூடிய அல்லது வெளிப்படுத்திக் கொண்டிருப்பது நாத்திகம் ஆகும். பிற மார்க்கங்கள் இறைவனுடன் ஒரு தொடர்பை மேற்கொள்ளாத காரணத்தினால் மார்க்கத்தை விட்டு மிகத் தொலைவில் செல்ல ஆரம்பித்து விட்டன. அதில் அதிகமானவர்கள் மார்க்கத்தை விட்டே விலகி விட்டார்கள். இன்னும் சொல்லப் போனால் நாத்திகர்களாகவே ஆகி விட்டார்கள். இன்று நீங்கள்தான் நாத்திகத்தை முற்றிலுமாக ஒழித்து ஏகத்துவத்தை நிலைபெறச் செய்ய வேண்டும்.’’ (25 மார்ச் 2018 யூ.கே ஜாமிஆ அஹ்மதிய்யாவின் பட்டமளிப்பு விழாவின்போது ஆற்றிய உரை)

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் மேற் கூறப்பட்ட மேற்கோளில் இன்று நீங்கள் தான் நாத்திகத்தை முற்றிலுமாக ஒழித்து ஏகத்துவத்தை நிலைபெறச் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்கள். நாத்திகவாதிகள் மார்க்க வேதங்களில் கூறப்பட்டுள்ள சான்றுகளை ஏற்றுக் கொள்வதில்லை என்பது அனைவரும் ஒப்புக் கொண்ட உண்மையாகும். ஆகவே அவர்களை பகுத்தறிவு சான்றுகள் மூலமே ஒப்புக் கொள்ள வைக்க முடியும். பகுத்தறிவு சான்றுகளில் எல்லாவற்றிற்கும் முதலாக மனித இயல்பின் சான்றைக் கொண்டே அவர்களுக்குப் புரிய வைக்க முடியும்.

### மனித இயல்பிற்கான சான்று

ஒரு நாத்திகருக்கு எல்லாம் வல்ல அல்லாஹ்வின் இருப்பு தொடர்பாக மிகவும் முக்கியமான சான்றுகளிலிருந்து மனித இயல்பின் சான்றை எடுத்துக் கூறி அவனுடைய உள்ளுணர்வை எழுப்ப வேண்டும். மனித இயல்பில் இந்த அண்ட சராசரத்தைப் படைத்த ஒரு எஜமானன் இருக்கின்றானா? இல்லையா? மேலும் நம்மை யார், ஏன் படைத்தான்? என்ற கேள்வி சுயமாகவே எழுகிறது. மனித இயல்பிலிருந்து வெளி வந்த இந்த ஓசைக்குப் பிறகு எண்ணற்ற மக்களுக்கு இது தொடர்பாக ஆய்வு செய்ய வேண்டும் என்ற எண்ணம் உதித்திருக்கின்றது. அதன் விளைவாக அந்த மனிதன் என்னுடைய இந்த உடல் தற்செயலாக உருவாக்கப்பட்டதா? அல்லது என்னை ஓர் உயர்ந்த சக்தி படைத்ததா? என்ற கேள்வியைக் கேட்கின்றான். அவனின் இந்த கேள்விக்கான விடையாக அவன் பகுத்தறிவு சான்றுகளை நன்கு கூர்ந்து ஆய்வு செய்ததன் விளைவாக என்னை படைத்தவன் ஒருவன் இருக்கின்றான். அவன்தான் என்னையும் இந்த உலகையும் படைத்துள்ளான் என்ற இந்த உறுதியான முடிவை எட்டி விடுவார். சிலர் தன்னுடைய இயல்பின் குரலை அடக்கி வைத்து அதை கண்டும் காணாமல் விட்டு விட்டு நாத்திகத்தின் வழியில் செல்ல ஆரம்பித்து விடுகிறார்கள். ஆக மனிதனின் இயல்பு, மனிதனின் படைப்பு, மனிதனின் தோற்றம் ஆகியவை இறைஇருப்பிற்கான ஒரு மிகப் பெரிய சான்றாகும். இதை எந்தவோர் அறிவுள்ள மனிதனும் நிராகரிக்கவே முடியாது. இது நம் மீது எல்லாம் வல்ல அல்லாஹ் செய்த கருணையாகும். எல்லாம் வல்ல அல்லாஹ் நம்முடைய நேர்வழிக்காக நம்முடைய இயல்பிலேயே ஈமானின் (இறை நம்பிக்கையின்) விதையை விதைத்து விட்டது அவன் நம்மீது செய்த மாபெரும் பேரருள் ஆகும். அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

أَوَلَمْ يَرَ الْإِنْسَانُ أَنَّا خَلَقْنَاهُ مِنْ نُطْفَةٍ فَإِذَا
هُوَ خَصِيمٌ مُبِينٌ ○ وَضَرَبَ لَنَا مَثَلًا وَنَسِيَ خَلْقَهُ

நாம் மனிதனைக் (கேவலம்) ஒரு விந்துத் துளியிலிருந்து படைத்திருப்பதாக அவன் பார்க்கவில்லையா? பின்னர் அவன் வெளிப்படையான சச்சரவு செய்பவனாகி

விடுகின்றான். அவன் நமக்கு உவமைகளை எடுத்துக் கூறுகின்றான். மேலும் தனது பிறப்பை மறந்து விடுகின்றான். எலும்புகள் மக்கி, அழிந்து விடும்போது அவற்றிற்கு உயிர் கொடுப்பவன் எவன்? என்று அவன் கூறுகின்றான். (36:78–79)

இந்த வசனத்தின் ஒளியில் ஒரு நாத்திகருக்கு இதை நாம் புரிய வைக்க வேண்டும். அதாவது மனிதனை எல்லாம் வல்ல அல்லாஹ் விந்துத் துளியிலிருந்து படைத்துள்ளான். அவன் தாயின் கருவில் இருந்து பிறப்பை மேற்கொண்ட பிறகு சுவாசிப்பதற்கு ஆக்ஸிஜன் தேவைப்படுகிறது. அந்த ஆக்ஸிஜன் சுயமாக உருவாகி விட்டதா? அந்த இடத்தில் வேறு ஏதாவது விஷவாயு இருந்திருக்கும் என்றால் அவன் சுவாசிக்க முடியுமா? மனிதன் உருவான பிறகு அந்த மென்மையான வயிற்றுக்கு மென்மையான ஆகாரம் அவசியமாகும். அதற்கு தாய்ப் பாலிற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவனிடம் பால் கிடைக்கவில்லை. உணவோ அல்லது தாவர விலங்குகள் போன்று புல்லைச் சாப்பிடு என்று கூறினால் அவன் உயிருடன் இருப்பானா? ஒருபோதும் உயிருடன் இருக்க முடியாது. ஆக இந்த உலகின் வடிவமைப்புகள் சந்தர்ப்பச் சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்க்கை வாழ்வதற்குத் தேவையான பொருள்கள் எல்லாம் சுயமாகவே அமைந்து விட்டதா என்ற கேள்வி எழுகிறது? அவ்வாறு ஒருபோதும் இல்லை. மாறாக அனைத்து உலகங்களையும் படைத்துக் காக்கின்ற ரப் (இறைவன்) –ன் பண்பாகிய ருபூபிய்யத் (காத்தோம்பல்) மூலமாகத்தான் இந்த வாழ்க்கை என்றென்றும் நிலைத்து நிற்கின்றது. ஒரு நாத்திகர் மற்றும் அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை கொள்ளாதவர் மேற்கூறப்பட்ட உண்மையின் பக்கம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அவர் அவ்வாறு செய்தால் நிச்சயமாக அவருக்கு எல்லாம் வல்ல அல்லாஹ்வை புரிந்து கொள்ளக் கூடிய தன்மையையும் இறை ஞானத்தையும் பெற்று விடுவார்.

**உலகப் படைப்பிற்கான பகுத்தறிவுச் சான்று**

திருக்குர்ஆனில் எண்ணற்ற வசனங்கள் இருக்கின்றன. ஒரு நாத்திகர் அந்த வசனங்களை நேர்மறை பார்வையுடன் சிந்தித்தால் அவர் இறை இருப்பிற்கான புரிதலைப் பெற முடியும். உலகப் படைப்பின் மீது அவன் கவனம் செலுத்த முடியும். திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:

قَالَتْ رُسُلُهُمْ أَفِي اللّٰهِ شَكٌّ
فَاطِرِ السَّمٰوٰتِ وَالْأَرْضِ

அவர்களின் தூதர்கள் (அவர்களிடம் இவ்வாறு) கூறினர்: வானங்களையும், பூமியையும் படைத்தவனாகிய அல்லாஹ்வைக் குறித்து உங்களுக்கு ஏதேனும் ஐயம் உள்ளதா? (14:12)

இந்த வசனத்தில் அல்லாஹ் நிராகரிப் –பாளர்களிடம் வானங்களையும், பூமியையும் படைத்தவனாகிய அல்லாஹ்வை குறித்து உங்களுக்கு ஏதேனும் ஐயம் உள்ளதா? எனக் கேட்கின்றான். அதாவது வானம் மற்றும் பூமி ஆகியவை உங்களுக்கு முன்னாலேயே உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் இவை அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப தத்தமது கடமைகளை தொடர்ந்து செய்து கொண்டே இருக்கின்றன. அவைகளைப் படைத்து இலட்சக்கணக்கான ஆண்டுகளாக அல்லாஹ் அவைகள் மீது சுமத்திய அந்த கடமையை அழகிய முறையில் நிறைவேற்றுவதிலிருந்து அவற்றை ஒருவன் இயக்கிக் கொண்டிருக் –கின்றான் என்ற உண்மையை பிரதிபலிக்கக் கூடியதாக இல்லையா? ஒரு சம்பவத்தின் மூலமாக இந்தக் கருத்தை இன்னும் விளக்கமாகப் புரிய முடியும்.

பழைய காலத்தில் ஒரு நாத்திகர் இறை மறுப்பாளன் ஓர் இஸ்லாமிய அரசரிடம் வந்து நான் அல்லாஹ்வின் இருப்பை ஏற்றுக் கொள்ளவில்லை எனக் கூறினார். மேலும் என்னுடைய கொள்கை என்னவென்றால் இந்த உலகம் சுயமாகவே தோன்றி விட்டது. அதனுடைய அமைப்புகளும் சுயமே இயங்குகின்றன எனக் கூறினார். அந்த இறை மறுப்பாளர், அரசரிடம் இந்த தலைப்பில் என்னிடம் விவாதம் செய்யக்கூடிய எவராவது ஓர் அறிஞரை அழைக்குமாறு கூறினார். அதற்கேற்ப அரசரும் ஆற்றுக்கு மறுபக்கம் வசித்துக் கொண்டிருந்த ஒரு முஸ்லிம் அறிஞரை அரசவையில் ஆஜராகுமாறு தூது அனுப்பினார். தூதுவரிடம் அந்த முஸ்லிம் அறிஞர் அரசவையில் ஆஜர் ஆவதற்கான காரணத்தைக் கேட்டபோது அந்த தூதுவர் இறை மறுப்பாளரின் கேள்வியைப் பற்றி கூறினார். அதன் பிறகு அந்த முஸ்லிம் அறிஞர் அரசவையில் ஆஜரானதுடன் அந்த இறை மறுப்பாளரை வைத்துக் கொண்டே அரசனை நோக்கி இவ்வாறு கூற ஆரம்பித்தார். அரசரே! என்னுடன் ஒரு அதிசயமான சம்பவம் நிகழ்ந்தது. நான் உங்களுடைய அரசவைக்கு வருவதற்காக நதியின் கரையோரத்தில் படகிற்காகக் காத்துக் கொண்டிருக்கையில் நான் என்ன கண்டேன் என்றால், நதியின் நீரிலிருந்து திடீரென பெரிய பெரிய மரப் பலகைகள் தோன்றி பிறகு அவை அனைத்தும் ஒன்றோடு ஒன்று இணைந்து கொண்டது. அதன் பிறகு இரும்பு ஆணி தோன்றி அந்தப் பலகையில் சுயமாகவே அறைந்து கொண்டது. அதன் பிறகு வண்ணங்கள் நிறைந்த பெரிய பெரிய பெட்டிகள் நீரிலிருந்து வெளியேறி சுயமே அந்தப் படகிற்கு வண்ணம் தீட்டியது. இவ்வாறாக தானாகவே சுயமாக அந்தப் படகு உருவாகி விட்டது. அதன் பிறகு அந்தப் படகு நதியின் கரையோரம் நின்று கொண்டிருந்த என் அருகில் வந்து நின்று விட்டது. நான் அதில் அமர்ந்து விட்டேன். அந்தப் படகானது படகோட்டி இல்லாமலேயே சென்றவாறு மறுபக்கக் கரையைச் சென்றடைந்ததும் நான் அதிலிருந்து இறங்கி உங்களுடைய அரசவையில் ஆஜராகி விட்டேன்.

இந்தக் கதையைக் கேட்டபோது இறை மறுப்பாளரான நாத்திகர் கோபத்தில் மன்னரை நோக்கி நீங்கள் இந்த முட்டாள் மனிதரைத்தான் என்னுடன் விவாதம் செய்ய அழைத்தீர்களா? ஒரு மரப்பலகை எவ்வாறு நீரிலிருந்து தோன்றி படகாக உருவாக முடியும் என்ற அறிவு கூட அந்த மனிதருக்கு இல்லையா? இது ஒருபோதும் சாத்தியமானதும் நடக்கக் கூடியதும் அல்ல எனக் கூறினான். அந்த இஸ்லாமிய அறிஞர் எழுந்து நின்று பகுத்தறிவு சான்று மூலமாக அந்த இறை மறுப்பாளரை நோக்கி உம்முடைய அறிவு, படகு சுயமாகவே உருவாகி விட்டதை ஒப்புக் கொள்ள மறுக்கிறது என்று இருக்கும்போது, நீ இந்த உலகம் சுயமே உருவாகி விட்டது என எவ்வாறு கூறுவாய்? என்று கேட்டவாறு புரிய வைத்தார். இந்தப் பகுத்தறிவு சான்றின் மூலமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மனித இனத்திற்குப் புரிய வைத்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

“நற்பேறு பெற்ற மனிதனே! நீ ஒருபோதும் அவ்வாறு செய்யாமல் இருப்பாயாக. உன்னுடைய இறைவன் எப்படிப்பட்ட இறைவன் என்றால் அவன் எண்ணற்ற விண்மீன்களை எந்தவொரு தூணும் இல்லாமல் நிற்க வைத்துள்ளான். அந்த இறைவன் வானம் மற்றும் பூமியை ஒன்றுமற்றதிலிருந்து உருவாக்கினான். அப்படிப்பட்ட இறைவன் மீது நீ தவறான எண்ணம் கொள்கின்றாயா?”

(கிஷ்தி நூஹ். ரூஹானி கஸாயீன் தொகுதி 19 பக்கம் 21)

மிகவும் பழைமை வாய்ந்த காலத்தின் நபி ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்கள் தன்னுடைய சமுதாயத்திற்குப் பிரச்சாரம் செய்தபோது கீழுள்ள பகுத்தறிவு சான்றின் மூலமாக இவ்வாறு புரிய வைத்தார்கள்:

مَا لَكُمْ لَا تَرْجُوْنَ لِلّٰهِ وَقَارًا ○ وَقَدْ خَلَقَكُمْ أَطْوَارًا ○
أَلَمْ تَرَوْا كَيْفَ خَلَقَ اللّٰهُ سَبْعَ سَمٰوٰتٍ طِبَاقًا ○
وَّجَعَلَ الْقَمَرَ فِيْهِنَّ نُوْرًا وَّجَعَلَ الشَّمْسَ سِرَاجًا ○

“நீங்கள் அல்லாஹ்வுக்கு உண்மையான மதிப்பினை ஏன் வழங்குவதில்லை? அவன் உங்களைப் பல நிலைகளில் படைத்துள்ளான். அவன் ஏழு வானங்களையும் எவ்வாறு ஒன்றுக் –கொன்று ஒத்திருக்கும் வகையில் படைத் –துள்ளான் என்பதை நீர் காணவில்லையா? அவன் சந்திரனை அவற்றில் ஒளியாக அமைத்து, சூரியனை ஒரு விளக்காகவும் ஆக்கியுள்ளான். (71:14–17)

கண்ணியத்திற்குரிய வாசகர்களே! இங்கு ஏழு வானங்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. அரபி மொழியில் ஏழு என்ற எண் மிகுதி மற்றும் நிறைவு என்பதற்காகவும் பயன்படுத்தப் –படுகிறது. சந்திரன் மங்கலான வெளிச்சத்தைக் கொடுக்கின்றது. சந்திரன் சுயமாகவே தன்னிடமிருந்து ஒளியை வெளிப்படுத்துவ –தில்லை. அது சூரியனின் ஒளியை மிகவும் சிறந்த முறையில் தன்னிடம் இருந்து பிரதிபலிக்கச் செய்கிறது. சந்திரன் நாம் இருக்கின்ற இடத்திலிருந்து 4 இலட்சம் கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

சூரியன் நமக்கு பிரகாசமான வெளிச்–சத்தையும் வெப்பத்தையும் வழங்குகிறது. பூமி மற்றும் நிலவிற்கு இடையில் இருக்கின்ற தூரமானது சூரியனின் விட்டத்திலிருந்து மூன்றரை மடங்கு அதிகமாகும். பூமியில் எந்த அளவிற்கு மூலப்பொருட்கள் இருக்கின்றதோ அதை விட மூன்று இலட்சம் மடங்கு அதிகமான மூலப்பொருட்கள் சூரியனில் இருக்கின்றது. சூரியனின் மேற்பரப்பில் நமக்கு தென்படுகின்ற மஞ்சள் நிறத்தின் வெப்பநிலை ஆறாயிரம் டிகிரி ஆகும். சூரியனின் நடுப் பகுதியின் வெப்பநிலையோ ஒரு கோடி டிகிரியையும் விட அதிகமாக இருக்கும். அணு சக்தியின் வெளியேற்றத்தினால் இந்த வெப்பநிலை உருவாகிறது. சூரியன் பூமியில் இருந்து 15 கோடி கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. ஒரு சாதாரண விளக்கை உருவாக்கு–வதற்கும் அதை உருவாக்கக் கூடிய ஒருவரின் தேவை உள்ளது என்பது சிந்திக்கக் கூடிய தருணமாகும். சூரியன் மற்றும் சந்திரன் போன்ற மகத்துவம் வாய்ந்த வெளிச்சத்தை வழங்கக் கூடியவவை சுயமாக எவ்வாறு உருவாக முடியும்? நிலையான அறிவுடன் சிந்திக்கக் கூடியவர் இந்த ஒரு ஆதாரத்தை வைத்தே அல்லாஹ்வின் இருப்பு வரை சென்றடைய முடியும்.

**உலக அமைப்பும் இறை இருப்பிற்கான பகுத்தறிவு சான்றும்**

சூரா யாஸீனில் எல்லாம் வல்ல அல்லாஹ் வானியல் தொடர்பாக தனது இருப்பின் சான்றை இவ்வாறு வெளிப்படுத்துகின்றான்:

“இரவும் அவர்களுக்கு ஓர் அடையாளம் ஆகும். இதிலிருந்து நாம், பகலை இழுத்துக் கொள்கிறோம். அதற்குப் பின்னர் அவர்கள் இருளில் மூழ்கி விடுகின்றனர். சூரியன், அதற்கென குறித்த வரையறைக்குள் இயங்கிக் கொண்டிருக்கிறது. இது வல்லோனும் ஞானமிக்கோனுமாகிய (இறை)வன் ஏற்படுத்திய திட்டமாகும். மேலும் சந்திரன், ஒரு முதிர்ந்த கிளைபோல் ஆகித் திரும்பி வரும் அளவுக்குப் பல நிலைகளை அதற்கு ஏற்படுத்தியுள்ளோம். சூரியானல், சந்திரனை அணுக முடியாது. அவ்வாறே இரவால் பகலை முந்தவும் முடியாது. அவை எல்லாம் ஒரு சுற்றுப் பாதையில் தடையின்றி மிதக்கின்றன.” (36:38–41)

பிரபஞ்சத்தைப் படைத்து அதை சீரான முறையாக இயக்குவதை பகுத்தறிவு சான்றாகக் கூறியவாறு அல்லாஹ் ‘உலுல் அல்பாப்’ அதாவது அறிவுடையோர்களுக்கு சிந்திப்பதற்கான அழைப்பை விடுத்தவாறு இவ்வாறு கூறுகின்றான்:

إِنَّ فِي خَلْقِ السَّمٰوٰتِ وَالْأَرْضِ وَاخْتِلَافِ الَّيْلِ
وَالنَّهَارِ لَاٰيٰتٍ لِّأُولِي الْأَلْبَابِ

வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும் இரவு, பகல் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்கு நிச்சயமாக பல அடையாளங்கள் உள்ளன. (3:191)

பகலும் இரவும் மாறி மாறி வருவதும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் இருப்பிற்கான மிகப் பெரிய சான்றாகும். பூமி உருண்டை என்பது நாம் அனைவரும் அறிந்ததே. பூமி தன்னுடைய சுற்றுப் பாதையில் சுற்றிக் கொண்டே இருக்கிறது. மேலும் பூமியின் எந்தப் பகுதி சூரியனை நோக்கி இருக்குமோ அது பகலாகும். மேலும் எந்தப் பகுதி சூரியனை நோக்கி இருக்காதோ அது இரவாகும். பூமி எவ்வாறு மிகவும் அழகாக சுழன்று கொண்டிருக்கிறது என்றால் சிறிதளவு அசைவையும் நாம் உணர்வதில்லை. நீண்ட காலமாக மக்கள் வெளிப்படையாக நாம் காண்பதுபோல் பூமி ஒரே இடத்தில் நின்று கொண்டிருக்கிறது என்றும் அனைத்து விண்ணின் கோள்களும் பூமிக்கு அருகில் சுற்றிக் கொண்டிருப்பதாகவும் எண்ணிக் கொண்டு இருந்தார்கள். ஒரு பம்பரத்தை நாம் சுழற்றி விட்டால் அது சிறிது நேரம் தன்னுடைய சுற்றுப் பாதையில் சுற்றிய பிறகு விழுந்து விடும். ஆனால் நம்முடைய பூமி பில்லியன் ஆண்டுகளாக சுற்றிக் கொண்டே இருக்கின்றது. இன்னும் சுற்றுவதை நிறுத்தி விடவில்லை. சுற்றுகின்ற வேகத்தில் வேண்டுமானால் சிறிய வித்தியாசம் இருக்கும். சுற்றுகின்ற வேகம் குறைந்து கொண்டே செல்கின்றது. ஆனால் ஒரு நூற்றாண்டில் ஒரு நொடியில் ஆயிரத்தில் ஒரு பங்கிற்கு சமமாக குறைந்து கொண்டே செல்கிறது. இது நம்முடைய ஆராய்ச்சிக்கான தூண்டுதலாகும். இது பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலான கடந்த கால பரஸ்பல உறவைப் பற்றிய ஒரு ஞானத்தை நமக்குத் தருகிறது. பூமி அதன் சுற்று வட்டத்தில் 24 மணி நேரத்தில் தன்னைத் தானே ஒருமுறை சுற்றி வருகின்றது என்பதையும் நாம் அறிந்து கொண்டோம். மாறாக பூமி சூரியனையும் சுற்றி வருகிறது. அந்த சுழற்சி வருடத்தில் ஒரு முறை பூர்த்தியாகிறது. ஒரு நொடிக்கு 30 கிலோ மீட்டர் வேகத்தில் சுற்றுகிறது. அதனால் எந்த அதிர்வையும் நம்மால் உணர முடியவில்லை. சூரியன் ஒரு வருடத்திற்குப் பிறகு மீண்டும் தன்னுடைய பழைய இடத்திற்கே வந்து விடுகிறது என்பதை வானத்தைப் பார்க்கும்போது நம்மால் தெளிவாகப் புரிய முடிகிறது.

சூரியக் குடும்பம் என்பது ஒரு மிகப் பெரிய அமைப்பாகும். அது பிரபஞ்சத்தின் ஒரு பகுதியாகும். இந்த 20–ம் நூற்றாண்டில் தான் சூரியன் தமது அனைத்து சூரியக் குடும்பத்தின் கிரகங்களோடு பிரபஞ்சத்தை நொடிக்கு 200 கிலோ மீட்டரை விட அதிகமான வேகத்துடன் சுற்றி வருகிறது என்றும் பிரபஞ்சத்தின் மையப் பகுதியை ஒருமுறை சுற்றுவதற்கு 20 கோடி வருடங்கள் ஆகும் என்பதே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சூரியனுடன் நாம் அனைவரும் அதே வேகத்துடன்தான் பிரபஞ்சத்தின் மையப் பகுதிக்கு அருகில் சுற்றிக் கொண்டு இருக்கின்றோம். மேலும் தொடர்ச்சியாக இடைவிடாமல் பயணம் செய்யும் கூட நாம் எந்தவொரு களைப்பையும் உணர்வதில்லை. பூமியின் புவிஈர்ப்பு சக்தியும் நம்மை இங்கும் அங்கும் நகர விடாமல் பூமியிலேயே வலுவாக நிலைபெறச் செய்துள்ளது. இது அல்லாஹ்வின் படைப்பாகும். அவன் எல்லாப் பொருள்–களையும் வலுவாகப் படைத்துள்ளான். மோட்டார் வாகனம், தொடர் வண்டி, வானூர்தி, இவை அனைத்தையும் ஓட்டுவதற்கே ஒருவருடைய தேவை இருக்கின்றபோது, பூமி, சூரியன், சந்திரன் மற்றும் பிற கிரகங்களையும் இயக்குகின்ற ஓர் இறைவன் இல்லை என்பதை நாம் எவ்வாறு கூற முடியும்?

**துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதன் மூலம் இறை இருப்பிற்கான பகுத்தறிவுச் சான்று**

திருக்குர்ஆனிலிருந்து நமக்கு தென்படுகின்ற அல்லாஹ்வின் இருப்பிற்கான முக்கியமான பகுத்தறிவுச் சான்றுகளில் ஒன்று அந்த இறைவன் துஆக்களை (பிரார்த்தனை–களை) ஒப்புக் கொள்கிறான் என்பதாகும். ஒரு மனிதன் பதற்றமான நிலையில் அவனுடைய சன்னிதியில் துஆ செய்யும்போது அவன் அதை ஒப்புக் கொள்கின்றான். மேலும் இந்த துஆ ஒப்புக் கொள்ளப்படுதல் என்பது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மட்டும் அல்ல. மாறாக எல்லாக் காலகட்டங்களிலும் அதற்கான காட்சிகளைக் காண முடிகின்றது. இது தொடர்பாக எல்லாம் வல்ல அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

وَإِذَا سَأَلَكَ عِبَادِي عَنِّي فَإِنِّي قَرِيبٌ أُجِيبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا
دَعَانِ فَلْيَسْتَجِيبُوا لِي وَلْيُؤْمِنُوا بِي لَعَلَّهُمْ يَرْشُدُونَ

(தூதரே!) என் அடியார்கள் உம்மிடம் என்னைப்பற்றிக் கேட்டால், நான் (அவர்களுக்கு) அருகில் இருக்கின்றேன். பிரார்த்தனை செய்கிறவர் என்னை அழைக்கின்றபோது நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். எனவே, அவர்களும் எனது கட்டளையை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள் (என்று பதில் அளிப்பீராக. (2:187)

தற்போது ஒருவர், இறைவன் துஆவை ஒப்புக் கொள்கிறான் என்பதை நாம் எவ்வாறு அறிய முடியும்? என்று கேட்கலாம். எவ்வாறு துஆ செய்யாதவரின் தேவை நிறைவேறி விடுகிறதோ அதேபோன்று துஆ செய்பவரின் தேவையும் தற்காலிகமாக நிறைவேறி இருக்கலாம் என்றும் கூறலாம். அனைத்து துஆக்களும் ஒப்புக் கொள்ளப்படுகின்றன என்றால் எந்தவொரு கேள்வியும் இருக்காது. ஆனால் அதிகமான மக்களின் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படாததை நாம் பார்க்கின்றோம். ஆக, இதிலிருந்து என்ன தீர்வு வெளியாகி உள்ளது என்றால் அவர்களின் துஆக்களின் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுதல், அவர்களின் தேவை நிறைவேறுதல் அல்லது நோயாளி சிகிச்சை பெறுதல் இவையெல்லாம் சுயமாக தற்காலிகமாக நடைபெறக் கூடியதாகும். இதற்கான பதில் இதுவாகும்.

துஆ ஒப்புக் கொள்ளப்படுதல் என்பது தனக்குள் அடையாளத்தை வைத்துள்ளது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறை இருப்பிற்கான சான்றாக மிகவும் அபாயகரமான நோயில் இருக்கக் கூடிய நோயாளிகளைத் தேர்ந்தெடுத்து பிரித்துக் கொள்ளுங்கள். மருத்துவர்களின் ஒரு பிரிவு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கட்டும். மறுபுறம் நான் என்னுடைய பிரிவில் இருக்கக் கூடியவர்களுக்காக துஆ செய்வேன். யாருடைய நோயாளிகள் குணம் அடைகிறார்கள் என்பதைப் பாருங்கள் எனக் கூறினார்கள்.

(இறை இருப்பிற்கான பத்து ஆதாரங்கள் பக்கம் 21)

குணமளிக்க முடியாத நோயாளியை குணப்படுத்திய சம்பவம் தொடர்பாக இதோ மற்றொரு சான்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் தென் இந்தியாவின் ஹைதராபாத்தைச் சார்ந்த அப்துல் கரீம் (தகப்பனார் பெயர் அப்துர் ரஹ்மான்) என்கின்ற மாணவர் காதியானுக்கு படிப்பதற்காக வந்திருந்தார். காதியானில் தங்கியிருந்த வேளையில் ஒருநாள் அந்த மாணவனை வெறிநாய் ஒன்று கடித்து விட்டது. அந்தக் காலத்தில் அப்படிப்பட்ட மனிதரின் மரணம் உறுதி எனக் கருதப் –பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அப்துல் கரீமை இமாச்சலப் பிரதேஷ் மாநிலத்தில் சூலன் மாவட்டத்தின் கஸோலி என்ற இடத்திற்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். அந்தக் காலத்தில் அப்படிப்பட்ட மனிதர்களுக்காக சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது. அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு உடல் சுகத்துடன் காதியான் திரும்பி வந்தார். சில நாட்களுக்குப் பிறகு பைத்தியத்தின் (Rabies) அறிகுறி அவர் மீது வெளிப்படத் தொடங்கியது. கஸோலியில் உள்ள டாக்டரிடம் இதற்கான காரணம் கேட்டபோது அந்த மருத்துவர் இவ்வாறு தந்தியில் பதில் அனுப்பி வைத்திருந்தார். 'Sorry Nothing Can Be Done For Abdul Karim – மன்னிக்கவும் அப்துல் கரீம் அவர்களுக்கு எதுவும் செய்ய முடியாது.'

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சிகிச்சையே அளிக்க முடியாத நோயாளிக்காக துஆ செய்தார்கள். அதன் விளைவாக அவர் உடல்நலம் பெற்று விட்டார். அந்த நோயாளி தொடர்பாக அந்த நோயின் சிறப்பு மருத்துவர் எந்த அளவிற்கு மனம் தளர்ந்து மிகவும் வருத்தத்துடன் அந்த நோயாளியைக் காப்பாற்றுவதற்காக எதுவும் செய்ய முடியாது எனப் பதில் கூறி இருப்பார். அப்படிப்பட்ட அந்த மனிதர் துஆவின் மூலமாக குணமடைந்து விட்டார். இதுவே அல்லாஹ் இருக்கின்றான். அவன் 'ஸமீவுத் துஆ' (துஆக்களை ஏற்றுக் கொள்ளக் கூடியவன்) ஆக இருக்கின்றான் என்பதற்கான ஓர் ஆதாரமாகும். எவருக்கு எல்லாம் வல்ல இறைவனின் இருப்பிற்கு சான்று தேவை உள்ளதோ அவர் உண்மையான உள்ளத்துடன் இறைவனுக்கு முன்னால் சிரம் பணிந்தவாறு துஆ கேட்க வேண்டும். அல்லாஹ் சுயமாகவே அவருக்கு இறை ஞானத்தை வழங்கி விடுவான். அவனுடைய அறிவு மட்டுமல்ல; அவனுடைய உள்ளமும் அந்த சான்றில் மன நிறைவு அடைந்து விடும். முன்னெச்சரிக்கை ஆக இருப்பதும் இறை இருப்பிற்கான சான்று ஆகும்.

சில நேரங்களில் நாம் உலகில் ஒரு சில பணிகளை மேற்கொள்வதால் பகுத்தறிவின் அடிப்படையில் அதற்கு எந்த அவசியமும் இருக்காது. உதாரணமாக நாம் இரவு நேரத்தில் ஒரு காட்டில் தங்குகிறோம் என்றால் காட்டின் அந்தப் பகுதியில் எந்த விலங்கினாலோ அல்லது கொள்ளையர்களாலோ அபாயமும் இல்லை என்று அறிந்திருந்தும் நாம் முன்னெச்சரிக்கையாக பாதுகாப்பிற்கான ஏற்பாட்டை செய்கிறோம். மேலும் நம்முடைய அறிவும் இதைத்தான் கூறும் எந்தவொரு அபாயமும் இல்லை என்றாலும் பாதுகாப்பிற்காக ஏற்பாடு செய்வதால் நமக்கு எந்தவொரு இழப்பும் இல்லை. ஒருவேளை ஏதாவது அபாயம் ஏற்பட்டு விட்டாலும் நாம் ஏற்பாடு செய்த பாதுகாப்பின் மூலம் நாம் பயன் பெற்று விடுவோம். ஆக, சில நேரங்களில் நாம் முன்னெச்சரிக்கையைக் கருத்தில் கொண்ட –வாறு ஒரு சில பணிகளைச் செய்கின்றோம். மேலும் முழு உலகமும் இவ்விஷயத்தை அதாவது முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளும் அவசியமானதும் பயன் அளிக்கக்கூடிய –தாகவும் இருக்கின்றன என்ற கருத்தை ஆமோதிக்கிறது. தற்போது இந்த விதியின் அடிப்படையில் நாம் இறை இருப்பிற்கான சான்றுகளைக் காணும்போது நம்முடைய அறிவு இறைவன் மீது நம்பிக்கை கொள்வதே நிராகரிப்பதை விட மிக அமைதிக்குரிய மற்றும் முன்னெச்சரிக்கை வழிமுறையாகும் என்ற தீர்மானத்தை அளிக்கும். எந்த இறைவனும் இல்லை. மேலும் இந்த அனைத்து உலகமும் பிரபஞ்சமும் தாமாகவே தோன்றியுள்ளது என்றால் நம்முடைய நம்பிக்கையானது நமக்கு எந்தவொரு இழப்பையும் ஏற்படுத்தி விடாது. ஒருவேளை இறைவன் இருக்கின்றான் என்றால் (நிச்சயமாக அவன் இருக்கின்றான்) நாம் அவன் மீது கொண்ட நம்பிக்கை பயன் தரக் கூடிய மற்றும் நன்மைக்கான சான்றாக அமைந்து விடும்.

ஒருமுறை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் இறை இருப்பிற்கான சான்று என்ன என்று கேட்கப்பட்டது, கேள்வி கேட்ட அந்த சாதாரண நபரின் நிலையைப் பார்த்து ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், பாருங்கள்! இதுவே உங்களுக்குப் போதுமானது. இறைவன் இல்லை என்றால் அவனை ஏற்றுக் கொள்பவர்கள் மற்றும் அவனை நிராகரிப்பவர்கள் ஆகிய இருவரின் நிலையும் சமமானதே. எவருக்கும் எந்த இழப்பும் இல்லை. ஆனால் இறைவன் இருக்கின்றான் என்றால் அவனை நிராகரிப்பவர்களின் நிலை மிகவும் மோசமாக இருக்கும் என்பதை நன்கு அறிந்து கொள்ளுங்கள் என்று பதில் அளித்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: வெறும் பகுத்தறிவு அத்தாட்சிகள் மார்க்கத்தின் உண்மைக்கான போதுமான சான்றாக அமையாது. எந்த ஒரு மோசடிக்காரனாலும் அந்த முத்திரையை உருவாக்க முடியும். மாறாக இது அறிவு என்ற பொதுவான நீரூற்றின் பணிவு என்றே கருதப்படும். அவ்வாறிருக்க ஒரு நூலில் எழுதப்பட்டுள்ள பகுத்தறிவு விஷயங்களை உண்மையாகவே அது இறை இருப்பின் அடிப்படையில் எழுதப்பட்டது தானா அல்லது விஷயங்கள் பிற நூலில் இருந்து திருடப் –பட்டுள்ளதா என்பதை யார் தீர்மானிப்பது? இல்லை என்றே நாம் கருதினாலும் இறை இருப்புக்கும் உறுதியான சான்றாக எப்போது அமையும்? மேலும் உண்மையைத் தேடுகின்ற ஆன்மாவிற்கு இந்த பகுத்தறிவு விஷயங்கள் தான் உறுதியாக இறை வசனங்களாகத் திகழ்கின்றன என்ற முழுமையான மன நிறைவு எப்போது ஏற்படும்? மேலும் அதில் கூறப்பட்ட விஷயங்கள் முற்றிலுமாக பிழையில் இருந்து அப்பாற்பட்டவை என்று எவ்வாறு நம்ப முடியும்? ஆக மார்க்கம் ஒரு சில விஷயங்களை பகுத்தறிவு அல்லது தத்துவ ஞானத்தைப் பறைசாற்றுவது, தன்னுடைய உண்மையான காரணியாக எடுத்துக் கூறுவது மற்றும் விண்ணின் அடையாளங்கள் மற்றும் அற்புதங்களை வெளிப்படுத்த முடியவில்லை (என்றால்) அப்படிப்பட்ட மார்க்கத்தைப் பின்பற்றக்கூடியவர் ஏமாற்றுக் –காரராகத்தான் இருப்பார். மேலும் அவர் இருளில் மரணிப்பார். ஆக பகுத்தறிவு சான்றுகள் மூலமே எல்லாம் வல்ல இறைவனின் இருப்பை உறுதியான சான்றுகளைக் கொண்டு நிரூபித்துக் காட்டுவதற்கான பொறுப்பை ஏற்கவில்லையோ அதுவரை அந்த மார்க்கம் ஒன்றுமற்றதாகக் கருதப்படும். அப்படிப்பட்ட மார்க்கத்தின் மீது மோகம் கொண்ட மனிதன் துர்பாக்கியசாலி ஆவான். அப்படிப்பட்ட ஒவ்வொரு மார்க்கமும் சாபத்திற்குரிய களங்கத்தை நெற்றியில் வைத்துள்ளது. அதாவது மனிதனின் ஞானம் இறைவனை காணுகின்ற அந்தப் படித்தரத்தை அடைகின்ற நிலையை எட்ட வேண்டும். மேலும் மன இச்சையின் இருள் ஆன்மீக நிலையில் மாற வேண்டும். இறைவனின் புத்தம் புதிய அடையாளங்களின் மூலம் ஈமான் (இறை நம்பிக்கை) புத்துயிர் பெற வேண்டும். அது பெருமையாக இருக்கக் கூடாது. மாறாக, உண்மையான முறையில் புதிய வாழ்வை பெற்றுத் தரக்கூடியதாக இருக்க வேண்டும். (பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 5 ரூஹானி கஸாயீன் தொகுதி 21 பக்கம் 60)

**- தமிழாக்கம்: மவ்லவி அபுல் ஹஸன் ஆபிது**





இங்கிலாந்தின் மஸ்ஜிது தாருஸ் ஸலாம் சவுத் ஹாலின் அழகிய தோற்றம்

2020 பிப்ரவரி 23 தேதி ஸய்யிதுனா ஹுஸூர் அன்வர்(அய்ய...) அவர்கள் மஸ்ஜிது தாருஸ் ஸலாமை திறந்து வைத்தவாறு






மஸ்ஜிது தாருஸ் ஸலாம் சவுத் ஹாலின் திறப்பு விழா வரவேற்பு நிகழ்ச்சியில் ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்(அய்ய...) அவர்கள் விருந்தினர்களுக்கு மத்தியில் சொற்பொழிவு நிகழ்த்தியவாறு






மஸ்ஜிது தாருஸ் ஸலாம் சவுத் ஹால் திறப்பு விழா சந்தர்ப்பத்தில் விருந்தினர்கள் ஹுஸூர் அன்வர் (அய்ய...) அவர்களை சந்தித்தபோது






2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் தேதி நடைபெற்ற இங்கிலாந்து மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தேசிய காயிதுமார்களுக்கு மத்தியில் ஹுஸூர்(அய்ய...) அவர்கள் சொற்பொழிவாற்றியவாறு

EDITOR
Moulavi. O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. Abdurrahman Tahir
Mobile : +91 9677414441
Email : editorbadrtamil@gmail.com
Website : www.akhbadrbadrqadian.in
www.alislam.org/badr

Registered with the registrar of the newspapers for India at No. RN 61/57

هفت روزه بدر قادیان

Weekly BADAR Qadian

Qadian - 143516 Distt. Gurdaspur (Pb.) INDIA

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Vol. 69 Thursday 24 - 31 - December - 2020 Issue. 52 - 53

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153 79255
e -mail:managerbadrqnd@gmail.com

## ஒரு ஹதீஸே குத்ஸியில் ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் பண்புகளைப் பற்றி கூறுகின்றார்கள்

அல்லாஹ்வின் புறமிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ் கூறுகிறான். என் அடியார்களே! நான் என் மீது அநீதியை ஹராமாக்கியுள்ளேன். எவர்களை நான் நேரான பாதையில் வழிநடத்துகிறேனோ அவர்களைத் தவிர மற்ற அனைவரும் வழிதவறிய பாதையில் இருக்கின்றீர்கள். என்னிடம் நேர்வழியை வேண்டுங்கள். நான் உங்களுக்கு நேர்வழி காட்டுவேன். என் அடியார்களே! நான் உணவு வழங்குபவர்களைத் தவிர மற்ற அனைவரும் பசியுள்ளவர்களாவீர்கள். எனவே என்னிடம் உணவை வேண்டுங்கள். நான் உங்களுக்கு உணவளிப்பேன். என் அடியார்களே! நீங்கள் இரவும் பகலும் தவறுகள் செய்தாலும் என்னால் உங்களை மன்னிக்க முடியும். எனவே என்னிடமே மன்னிப்பை வேண்டுங்கள். நான் உங்களை மன்னித்து விடுவேன். என் அடியார்களே! நீங்கள் எனக்கு எந்த நஷ்டத்தை ஏற்படுத்த விரும்பினாலும் உங்களால் எந்த நஷ்டத்தையும் எனக்கு ஏற்படுத்த முடியாது. நீங்கள் எனக்கு நன்மை செய்ய முயற்சி செய்தாலும் உங்களால் எந்த நன்மையையும் எனக்கு செய்ய முடியாது. என் அடியார்களே! உங்களில் முற்காலத்தார், பிற்காலத்தார் எல்லா மனிதர்களும் ஜின்களும், உங்களில் அனைவரையும் விட அதிக இறையச்சம் கொண்டவரைப் போன்று ஆகி விட்டாலும் அப்படி மாறுவது எனது ஆட்சியில் அணுவளவும் அதிகப்படுத்தி விட முடியாது. என் அடியார்களே! உங்களில் முற்காலத்தார், பிற்காலத்தார் மனிதர்களும், ஜின்களும் மிக தீய மனிதர் ஒருவரைப் போன்று மாறி விட்டாலும் எனது ஆட்சியில் எவ்வித குறைவையும் ஏற்படுத்த முடியாது. என் அடியார்களே! உங்களுடைய எல்லா மனிதர்களும் ஜின்களும் ஒரே மைதானத்தில் ஒன்று கூடி என்னிடம் தேவைகளைக் கேட்டு, நான் ஒவ்வொரு மனிதனின் தேவைகளையும் நிறைவேற்றினாலும் எனது கருவூலங்களில் இருந்து, கடலில் ஊசியை இட்டு அதை வெளியில் எடுப்பதால் கடலின் தண்ணீரில் குறைவு ஏற்படும் அளவுக்குக் கூட குறைவு ஏற்படாது. என் அடியார்களே! இவை உங்களின் செயல்களாகும். அவற்றை நான் கணக்கெடுத்துள்ளேன். நான் அவற்றிற்கு முழுமையான நற்கூலி கொடுப்பேன். எனவே எவருக்கு நல்ல விளைவு ஏற்படுமோ அவர் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தட்டும். மேலும் எவர் இவற்றைத் தவிர வேறு ஏதாவதொன்றைப் பெறுவாரோ அதாவது தோல்வியைக் கண்டால் அவர் தன்னையே தூற்றுவார். அதாவது அது அவருடைய தீய செயல்களின் விளைவேயாகும்

(مسلم، کِتَابُ الْبِرِّ وَالصِّلَةِ، بَابُ تَحْرِيْمِ الظُّلْمِ)

## உண்மையான ஏகத்துவம்

நாம் மேற்கொள்ள வேண்டுமென இறைவன் நம்மிடம் எதிர்பார்க்கும் (உண்மையான ஏகத்துவம்) மற்றும் எதனை மேற்கொள்வது உண்மையான இரட்சிப்புடன் தொடர்புடையதாக உள்ளதோ அந்த உண்மையான ஏகத்துவம் என்பது என்னவென்றால் இறைவனை எவ்வித இணையுமற்றவனாக கருத வேண்டும். அதாவது சிலை, மனிதன், சூரியன், சந்திரன் அல்லது தனது நஃப்ஸ், தனது திட்டங்கள், தந்திரங்கள், வஞ்சகங்கள் ஆகிய எதுவும் அவனுக்கு இணையாகாது என நம்ப வேண்டும். மேலும் அவனுக்கெதிரில் எவரையும் ஆற்றல் படைத்தவராகவும், உணவளிப்பவராகவும், கண்ணியமளிப்பவராகவும், இழிவுபடுத்தக் கூடியவராகவும், உதவி, ஒத்தாசை செய்பவராகவும் ஆக்கக் கூடாது. இரண்டாவது என்னவென்னறால், தனது அன்பு, வணக்கம், மன்றாடுதல், எதிர்பார்ப்புகள் மற்றும் அச்சம் போன்ற அனைத்து விஷயங்களிலும் இறைவனையே குறிக்கோளாக கொள்ள வேண்டும். தவ்ஹீது பற்றிய எந்தவொரு கோட்பாடும் இந்த மூன்று சிறப்பு அம்சங்களின்றி முழுமையானதாக இருக்க முடியாது. முதலாவது, இறை இருப்பின் அடிப்படையிலான தவ்ஹீது. அதாவது அவனது இருப்பிற்கு எதிரில் மற்றெல்லாவற்றையும் ஒன்றுமற்றவையாகவும், உயிரற்றவையாகவும், எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்தாதவைகள் என்றும் கருத வேண்டும். இரண்டாவது, இறைப் பண்புகளின் அடிப்படையிலான தவ்ஹீத் ஆகும். அதாவது இறைவனைத் தவிர வேறெவருக்கும் படைத்து பரிபாலித்தல் மற்றும் உலுஹிய்யத் பண்புகள் இல்லை என்றும், வெளிப்படையில் தென்படும் மனித இனத்தை பராமரிப்பவர்கள் மற்றும் பயன் அளிப்பவர்கள் இறைவனது திட்டத்தின் ஓர் அங்கம் ஆவர் என்றும் நம்ப வேண்டும். மூன்றாவது, அன்பு, உண்மை மற்றும் கலப்பற்றத்தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட தவ்ஹீது. அதாவது இறைவன் மீதான அன்பு மற்றும் கலப்பற்றத்தன்மையில் வேறெவரையும் இணையாக்காமல் இருப்பதும், அவனிடத்தில் தன்னை மாய்த்துக் கொள்வதும் ஆகும். (சிராஜுத்தீன் ஈஸாயி கே சார் சவாலோன் கே ஜவாப், ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 349)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian Distt. Gsp-143516, Punjab. India Editor:Mansoor Ahmad

جمیل احمد ناصر، پرنٹر وپبلشر نے فضل عمر پرنٹنگ پریس قادیان میں چھپوا کر دفتر اخبار بدر قادیان سے شائع کیا۔ پروپرائیٹر:۔نگران بدر بورڈ قادیان